**ம.அ.11.பொ.து.சு.ந.க.எண்.எச்3/149/2019**

**தீர்மான எண்.249/2019** **நாள்:02-05-2019**

**மண்டலம் 11 - பொது சுகாதாரத் துறை - கோட்டம் 143 முதல் 155 வரை - கொசு ஒழிப்பு மற்றும் நோய் தடுப்பு பணி (தற்காலிக ஒப்பந்த பணியாளர்கள்) - தற்போது பணிபுரியும் பணியாளர்களின் பணிக்காலம் 03.05.2019 உடன் முடிவடைகிறது - ஒரு வருட காலத்திற்கு தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் (NULM) கீழ் 181 மலேரியா பணியாளர்களை பணியமர்த்த நிர்வாக அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 11, வளசரவாக்கம் பகுதியானது 143 முதல் 155 வரையிலான 13 வார்டுகளை உள்ளடக்கியது. இதில் தோராயமாக 3121 சாலைகள் / தெருக்கள், 90,426 வீடுகளும், சுமார் 3.46 இலட்சம் மக்கள் தொகையும் கொண்ட பகுதியாகும்.

பெருநகர சென்னை மாநகராட்சி, வளசரவாக்கம் மண்டலத்திற்குட்பட்ட பகுதிகளில் 90,426 வீடுகளை 500 வீடுகளாக கொண்ட சிறுவட்டங்களாக பிரிக்கப்பட்டு வாரம் ஒரு முறை வீடுதோறும் கொசு மருந்து போடும் பணி செய்வதற்கு 181 சிறுவட்ட பணியாளர்களைக் கொண்டு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேலும், கூவம் ஆறு, புவனேஸ்வரி கால்வாய், நொளம்பூர் கால்வாய் மற்றும் நந்தம்பாக்கம் கால்வாய் 7 கி.மீ கொண்ட நீர்வழிப்பாதைகள் செல்கின்றன. இவற்றில் வாரந்தோறும் கொசுகொல்லி மருந்து தெளித்தல் பணி மற்றும் கால்வாய்களில் உள்ள தேவையற்ற பொருட்களை அகற்றி நீரோட்டத்தை ஏற்படுத்தி கொசு உற்பத்தியாகாமல் தடுக்க தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ள பணியாளர்களும், மேலும், 132.4 கி.மீ நீளம் கொண்ட மழைநீர் வடிகால்வாயில் சிறிய புகைப்பரப்பும் இயந்திரம் மூலம் புகைப்பப்பும் பணியினை மேற்கொள்ளவும் வீடுகளில் கைதெளிப்பான் மூலம் மருந்து தெளிக்கும் பணியினை மேற்கொள்ளவும் பணியாளர்கள் தேவைப்படுகின்றனர். தற்போது 5 நிரந்தர பணியாளர்கள் மட்டுமே உள்ளனர்.

எனவே, மேற்கண்ட பணியினை மேற்கொள்ள நிரந்தர பணியாளர்கள் அல்லாமல் 181 தற்காலிக பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தி நோய் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு தொடர்ந்து பணி நடைபெற்று வருகிறது. இப்பணியானது 03.05.2019 முடிவடைகிறது.

மன்ற தீர்மான எண்.173/2019, நாள்.07.03.2019ன்படி மண்டலம்-11ல் 181 ஒப்பந்த பணியாளர்களுக்கு தினக்கூலியாக ரூ.362/- வீதம் 365 நாட்களுக்கு ரூ.2,39,15,530/- மதிப்பீட்டில் தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தில் குழுக்கள் அமைத்து அதன் மூலமாக ஒரு வருட காலத்திற்கு தொழிலாளர்களை கொசு ஒழிப்பு பணியில் ஈடுபடுத்த மன்ற தீர்மானத்தில் கீழ்கண்டவாறு அனுமதிக்கப்பட்டுள்ளது.

1. மண்டலம்-11ல் ஒப்பந்த பணி 03.05.2019 அன்று முடிவடைகிறது. இவ்வொப்பந்த பணியில் ஈடுபட்டு வரும் தொழிலாளர்கள் தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் குழுக்கள் அமைத்து அதன் மூலம் தொழிலாளர்கள் அந்தந்த மண்டலத்திலேயே கொசு ஒழிப்பு பணியில் ஈடுபடுத்தவும்,
2. கொசு ஒழிப்பு பணிக்கான தொழிலாளர்களின் ஊதியத்தை தினக்கூலி அடிப்படையில் சென்னை மாவட்ட ஆட்சியர் அவர்களால் நிர்ணயிக்கப்பட்ட தினக்கூலி ரூ.362/-ஐ வழங்குவதற்கு நிர்வாக அனுமதியும்,
3. தற்பொழுது கொசு ஒழிப்பு பணியில் ஈடுபட்டு வரும் தொழிலாளர்களை தவிர புதிய நபர்களை பணியில் ஈடுபடுத்த துணை ஆணையர் (சுகாதாரம்) அவர்களின் ஒப்புதல் பெறவும்
4. கொசு ஒழிப்பு பணியில் ஈடுபட்டு வரும் தொழிலாளர்கள் தொடர்ந்து பணிக்கு வர தவறும்பட்சத்தில் அன்னாரை அந்தந்த மண்டல அலுவலர் அவர்களின் அனுமதியுடன் பணியிலிருந்து நீக்கவும்,
5. கொசு ஒழிப்பு தொழிலாளர்கள் பணி செய்த நாட்களுக்கு அந்தந்த மண்டல நல அலுவலர் அவர்களிடமிருந்து வருகை சான்றொப்பம் பெற்று அதன் அடிப்படையில் கணக்கிட்டு ஊதியம் வழங்கவும்,
6. ஊதிய தொகை சென்னை மாநகராட்சி நிதியில் இருந்து தொகுதி வாரியான குழுக்களுக்கு செலுத்தி அதன் மூலம் ஊதியத்தை தொழிலாளர்களின் வங்கி கணக்கில் செலுத்தவும்,

7. அந்தந்த மண்டல அலுவலர் அவர்களின் தலைமையில் தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கத்தின் (NULM) மூலம் குழு அமைத்து பணி மேற்கொள்ளவும்,
8. அந்தந்த மண்டல அலுவலர் அவர்கள் ஒப்பந்த தொழிலாளர்களை தேசிய நகர்ப்ற வாழ்வாதார இயக்கத்தின் (NULM) மூலம் குழுக்கள் அமைக்க ஆணையர் / சிறப்பு அதிகாரி அவர்களிடம் நிர்வாக அனுமதி பெற்று பணியினை மேற்கொள்ளவும்,
9. இப்பணிக்கான செலவீன தொகையை அந்தந்த மண்டலத்தில் உள்ள பகுதி கணக்கு குழுமத்தின் மூலம் NULM குழுக்களுக்கு, குறியீட்டு எண்.30-32-02, கணக்கு தலைப்பு எண்.210-10-06-02 என்ற தலைப்பில் நிதி ஒதுக்கீடு செய்யவும்,

மேலே, குறிப்பிட்டுள்ள மன்ற தீர்மானத்தின்படி, மாநகர நல அலுவலர், அவர்களின் 08.03.2019 நாளிட்ட சுற்றறிக்கையின்படி, மண்டலம்-11ல் பணிபுரியும் ஒப்பந்த தொழிலாளர்களை தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் (NULM) கீழ் குழுக்களை அமைத்து ஒரு வருட காலத்திற்கு பணியினை மேற்கொள்ள ஆணையர் அவர்களின் நிர்வாக அனுமதி பெற கோப்பு அனுப்பப்பட்டது.

மண்டல அலுவலர்-11 அவர்களின் அனுமதியின்படி, மண்டலம் 11, பகுதி 32, 33 (ம) 34, கோட்டம் 143 முதல் 155 வரை கோட்டம் வாரியாக பணிபுரியும் 181 ஒப்பந்த தினக்கூலி மலேரியா பணியாளர்களை தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கத்தின் (NULM) கீழ் குழுக்களை அமைக்க அனுமதி பெறப்பட்டு, திட்ட அலுவலர், தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் மூலம் 16.04.2019 அன்று 181 தற்காலிக பணியாளர்களை 13 குழுக்களாக பதிவு செய்யப்பட்டுள்ளது.

| வ. எண் | குழு எண் | குழுவின் பெயர் | அனுமதிக்கப்பட்ட பணியாளர்கள் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | NULM-ZONE 11 – DN 143 – MW | CHITHIRAI | 13 |
| 2 | NULM-ZONE 11 – DN 144 – VCD | VAIGAASI | 16 |
| 3 | NULM-ZONE 11 – DN 145 – MW | AANI | 17 |
| 4 | NULM-ZONE 11 – DN 146 – MW | AADI | 14 |
| 5 | NULM-ZONE 11 – DN 147 – MW | AAVANI | 12 |
| 6 | NULM-ZONE 11 – DN 148 – MW | PURATTASI | 15 |
| 7 | NULM-ZONE 11 – DN 149 – MW | AYPPASI | 14 |
| 8 | NULM-ZONE 11 – DN 150 – MW | KARTHIGAI | 15 |
| 9 | NULM-ZONE 11 – DN 151 – MW | MARGAZHI | 11 |
| 10 | NULM-ZONE 11 – DN 152 – MW | THAI | 16 |
| 11 | NULM-ZONE 11 – DN 153 – MW | MAASI | 13 |
| 12 | NULM-ZONE 11 – DN 154 – MW | PANGUNI | 12 |
| 13 | NULM-ZONE 11 – DN 155 – VCD | VAIGAI | 13 |
| மொத்தம் | | | 181 |

எனவே,

அ) மண்டலம் 11, பகுதி 32, 33 (ம) 34, கோட்டம் 143 முதல் 155 வரை உள்ள பகுதிகளுக்கு 181 தற்காலிக மலேரியா பணியாளர்களை ஒரு வருட காலத்திற்கு பணியமர்த்தவும்,

ஆ) மாவட்ட ஆட்சியரின் விலைப்பட்டியலின் அடிப்படையில் நபர் ஒன்றுக்கு ரூ.362/- வீதம் (181 நபர்கள் X 362 நாட்கள் X ரூ.362/-) ரூ.2,39,15,530/- (ரூபாய் இரண்டு கோடியே முப்பத்து ஒன்பது இலட்சத்து பதினைந்தாயிரத்து ஐநூற்று முப்பது மட்டும்)க்கு நிர்வாக அனுமதி வேண்டியும்,

இ) மேற்கண்ட 181 மலேரியா பணியாளர்களை தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் (NULM) கீழ் அமைக்கப்பட்ட 13 குழுக்களை கொண்டு கொசு ஒழிப்பு பணியினை மேற்கொள்ள நிர்வாக அனுமதி வேண்டியும்,

ஈ) தற்பொழுது கொசு ஒழிப்பு பணியில் பணிபுரியும் பணியாளர்களை தவிர புதிய பணியாளர்களை பணியமர்த்தி கொள்ள நிர்வாக அனுமதியும்,

உ) கொசு ஒழிப்பு பணியில் ஈடுபட்டு வரும் தொழிலாளர்கள் தொடர்ந்து பணிக்கு வர தவறும் பட்சத்தில் அன்னாரை அந்தந்த மண்டல அலுவலர் அவர்களின் அனுமதியுடன் பணியிலிருந்து நீக்கவும்,

ஊ) இப்பணிக்கான செலவீனத்தை சுகாதார தலைப்பு குறியீட்டு எண். 30-32-02 கணக்கு தலைப்பு எண். 210-10-06-02 என்ற தலைப்பில் பட்டியை தீர்வு செய்ய அனுமதி வேண்டியும்,

எ) கொசு ஒபப்பு பணியில் தொழிலாளர்கள் பணி செய்த நாட்களுக்கு அந்தந்த மண்டல நல அலுவலர் அவர்களிடமிருந்து வருகை சான்றொப்பம் பெற்று அதன் அடிப்படையில் கணக்கிட்டு ஊதியம் வழங்கவும்,

ஏ) ஊதிய தொகையினை பெருநகர சென்னை மாநகராட்சி நிதியில் இருந்து தொகுதி வாரியான குழுக்களுக்கு செலுத்தி அதன் மூலம் ஊதியத்தை தொழிலாளர்களின் வங்கி கணக்கில் செலுத்தவும்,

மேற்கண்ட, அ முதல் ஏ வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி-நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 26.04.2019 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**"அ முதல் ஏ வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி-நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".**

*****

**ம.அ.7ந.க.எண்.எச்2 / 2450 /2019**

**தீர்மான எண்.250/2019** **நாள்:06-05-2019**

**மண்டலம் 7 அம்பத்தூர் - பொது சுகாதாரத் துறை - கோட்டம் 79 முதல் 93 வரையுள்ள பகுதிகளில் சுகாதார பணிக்கான ஒப்பந்த அடிப்படை தொழிலாளர்களை - தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கத்தில் குழக்கள் அமைத்து அதன் மூலம் தொழிலாளர்களை ஓராண்டுக்கு சுகாதார பணியில் ஈடுபடுத்த அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-7 அம்பத்தூர், கோட்டம் 79 முதல் 93 வரையுள்ள பகுதிகளில் ஒவ்வொரு வீட்டிலுள்ள நீர் தேக்க தொட்டிகள், கிணறுகள், மேல்நிலைத் தொட்டிகளில் தேங்கியுள்ள நீரில் கொசுப்புழு வளர்ச்சி ஏற்படாத வண்ணம் கொசுப்புழு மற்றும் கொசு மருந்து தெளிக்கப்பட்டு, கொசுவினால் பரவும் மலேரியா, டெங்கு, சிக்குன்குனியா, யானைகால் மற்றும் மூளை காய்சல் போன்ற நோய்கள் கட்டுப்படுத்த கொசு மருந்து தெளிக்கவும், புகைப்பரப்பும் பணி மேற்கொள்ளவும், மேற்படி மண்டலம்-7ல் நிரந்தர தொழிலாளர்கள் பற்றாக்குறை காரணமாக ஒப்பந்த அடிப்படையில் தொழிலாளர்களை ஈடுபடுத்தப்பட்டது. இந்த ஒப்பந்த பணி 03.05.2019 அன்று முடியும் தருவாயில் உள்ளது.

இத்தொழிலாளர்களுக்கு சென்னை மாவட்ட ஆட்சியர் அவர்களின் 16.05.2018 நாளிட்ட செயல் முறை ஆணை எண் C2/7393/2018ன்படி உறுதி செய்யப்பட்ட ஒரு தொழிலாளியின் தினக்கூலி ரூ.362/- என்ற அடிப்படையில் கீழ்கண்டவாறு மதிப்பீடு கணக்கிடப்பட்டது.

| வ. எண் | மண்டலம் | கூடுதலாக தேவைப்படும் பணியாளர்கள் எண்ணிக்கை | ஒப்பந்தம் முடிவுறும் காலம் | தினக் கூலி | மொத்த நாட்கள் | மதிப்பீடு (ரூபாய்) |
|---|---|---|---|---|---|---|
| 1 | 7 | 220 | 03.05.2019 | ரூ.362/- | 365 | 2,90,68,600/- |

எனவே,

1. மன்ற தீர்மான எண்.173/2019, நாள்.07.03.2019ன்படி, மண்டலம்-7 க்கு அனுமதி அளிக்கப்பட 220 பணியாளர்கள் மண்டலம்-7க்கு சுகாதாரத்துறைக்கு (தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கம் NULM) ஓராண்டுக்கு பணியமர்த்தவும்,
2. தொழிலாளர்களின் ஊதியத்தை 365 நாட்களுக்கு சென்னை மாவட்ட ஆட்சியர் அவர்களால் நிர்ணயிக்கப்பட்ட தினக்கூலி ரூ.362/- ஐ வழங்குவதற்கு நிர்வாக அனுமதியும்,
3. மண்டல அலுவலர்-7 அவர்கள் ஒப்பந்த தொழிலாளர்களை தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கத்தின் (NULM) மூலம் குழுக்கள் அமைக்க ஆணையர் / சிறப்பு அதிகாரி அவர்களிடம் நிர்வாக அனுமதி பெற்று பணியை மேற்கொள்ளவும்,
4. மன்ற தீர்மானத்தில் குறிப்பிட்டுள்ள வழிக்காட்டுதல்களின் படி மேற்சொன்ன 220 பணியாளர்கள் NULM மூலம் பதினைந்து குழுக்களாக பிரித்து பணியாளர்களை பணியில் ஈடுபடுத்தவும்,

மேற்கண்ட, 1 முதல் 4 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி- நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 05.05.2019 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**"1 முதல் 4 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி- நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".**

*********

## H.D.C.No.NULM/SUH/1908/2019

**Resolution No.251/2019** **Date:07-05-2019**

**Public Health Department – National Urban Livelihoods Mission (NULM) – Shelter for Urban Homeless (SUH) – orders for refurbishment to accommodate 50 residents (Children) – unused suitable building in Zone-4 – to shift the existing children shelter to newly refurbished shelter - permission seeking – For orders.**

An unused suitable building at New Washermenpet, Poondithangammal Street, zone -4, Div – 10 for construction of a shelter has been identified.

In zone–4, a shelter for children is already functioning at Rajarathinam nagar, Kodungaiyur which is not suitable since the place cannot accommodate 50 children. JJ Act registration is also not done due to space constraint.

The said building at New Washermenpet, Poondithangammal Street has to be refurbished as per the NULM standards stated below:

- A minimum of 50 sq ft per person is to be provided.
- Well ventilated rooms.
- Water arrangements.
- Provision of kitchen.
- Adequate bathing & toilet facilities – a minimum of 4 bathrooms and 4 toilets to be available for 50 residents.
- Standard lighting for shelter.
- Office room for record maintenance.
- Stock room.
- Adequate fire protection measures, as per the norms.
- Provision of First aid kit.
- Pest and vector (mosquito) control.

After the refurbishment the existing children shelter shall be shifted.

The refurbishment expenses shall be proposed in the upcoming Project Sanctioning Committee (PSC) meeting for release.

Hence,

1. To approve the repairs of unused building at New Washermenpet, Poondithangammal Street, Zone–4, Division–10 to make it suitable for shelter.
2. To shift the existing children shelter functioning in Zone–4, Division–37 to the newly refurbished building.
3. To instruct the zonal officer – 4 to start the refurbishment of the building as per the NULM guidelines through the City Health Officer.
4. To claim/propose the refurbishment expenses in the Office of the Commissioner of Municipal Administration.

Sl.No. 1 to 4 above, orders of the Special Officer–Standing Committee (Health), Standing Committee(Taxation and Finance) and Council are requested. Commissioner's note dated 06.05.2019 is read.

**"Sl.No. 1 to 4 are approved by Special Officer-Standing Committee (Health), Standing Committee (Taxation and Finance) and Council."**

*****

**பது.நக.எண்.டி1/041/2019**

**தீர்மான எண்.252/2019** **நாள்:07-05-2019**

## தானப்பத்திரம்

மண்டலம்-5, கோட்டம்-63ல் திரு. பி. சங்கரன் அவர்கள் பழைய கதவு எண். 178, புதிய கதவு எண்.246, பாரதி சாலை, இராயப்பேட்டை, சென்னை - 600014, சர்வே எண்.372/15, பிளாக் எண். 13, திருவல்லிக்கேணி கிராமத்தில் அமைந்துள்ள இடத்திற்கு திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி வேண்டி பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-5ல் PPA/WDCN05/0846/2019, நாள்.01.02.2019ன்படி விண்ணப்பித்துள்ளார்கள். அவர்கள் திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி வேண்டி விண்ணப்பித்த இடத்திற்கு அணுகு சாலையாக பாரதி சாலை அமைய பெற்றுள்ளது. இரண்டாம் முழுமைத் திட்டத்தின்படி பாரதி சாலை 18.00 மீ அகல சாலையாக விரிவாக்கம் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தின் விதிகளின்படி, சாலை விரிவாக்கத்திற்கான நிலத்தினை தானப்பத்திரம் மூலம் உள்ளாட்சி அமைப்புகளிடம் மனை உரிமையாளர் ஒப்படைத்த பிறகு தான் திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி வழங்க இயலும். ஆகவே, மனுதாரர் தங்களுக்கு சொந்தமான நிலத்திலிருந்து சாலை விரிவாக்கம் செய்ய மனையில் நீளம் 1.50 மீட்டர் மற்றும் அகலம் 15.13 மீட்டர் ஆக மொத்தம் சாலை விரிவாக்கம் செய்ய தேவையான 22.70ச.மீ நிலத்தினை பெருநகர சென்னை மாநகராட்சிக்கு தானப்பத்திரம் மூலம் வழங்க ஒப்புதல் அளித்துள்ளார்.

பெருநகர சென்னை மாநகராட்சிக்கு ஒப்படைக்கபடவுள்ள நிலத்தை தானமாக பெற்றுக் கொள்ளலாம் என கருதப்படுகிறது.

எனவே,

(1) மனை உரிமையாளர் திரு. பி. சங்கரன் அவர்களிடமிருந்து பழைய கதவு எண். 178, புதிய கதவு எண்.246, பாரதி சாலை, இராயப்பேட்டை, சென்னை-600014 சர்வே எண்.372/15, பிளாக் எண்.13, திருவல்லிக்கேணி கிராமத்தில் உள்ள மனையில் சாலை விரிவாக்கத்திற்காக தானப்பத்திரம் மூலம் மனையில் நீளம் 1.50 மீட்டர் மற்றும் அகலம் 15.13 மீட்டர் ஆக மொத்தம் சாலை விரிவாக்கம் செய்ய தேவையான 22.70ச.மீ. நிலத்தினை பெருநகர சென்னை மாநகராட்சிக்கு தானமாக பெற்றுக் கொள்ளவும்,

(2) தானமாக வழங்கப்பட்ட பகுதியில் சாலை விரிவாக்கப் பணிகளை மேற்கொள்ள செலவாகும் தொகை ரூ.50,000/-ஐ (ரூபாய் ஐம்பதாயிரம் மட்டும்) மனை உரிமையாளரிடமிருந்து ஆணையர், பெருநகர சென்னை மாநகராட்சி என்கின்ற பெயரில் வரைவு காசோலையாக பெறவும்,

மேற்கண்ட, 1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு சிறப்பு அதிகாரி-நிலைக்குழு(நகரமைப்பு) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 06.05.2019 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**"1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு சிறப்பு அதிகாரி-நிலைக்குழு(நகரமைப்பு) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".**

*****

**பொ.து.ந.க.எண்.ஈ1/12402 /2019**

**தீர்மான எண்.253/2019** **நாள்:10-05-2019**

**பணியமைப்பு - பெருநகர சென்னை மாநகராட்சி - பொதுத்துறை - திரு.க.சின்னசாமி, தலைமை பொறியாளர் (திட்டங்கள்) தலைமையிடம் அவர்கள் - வயது முதிர்வு ஓய்வு பெறவுள்ள நாள்- 31.05.2019 - தனியரை வயது முதிர்வு ஓய்வில் செல்ல அனுமதிக்க அரசாணை வேண்டி அரசுக்கு செயற்குறிப்பு அனுப்ப அனுமதி.**

தலைமை பொறியாளர் (திட்டங்கள்) அவர்களின் 08.05.2019 நாளிட்ட குறிப்பில், பொதுத்துறையின் 16.12.2018 நாளிட்ட சுற்றறிக்கையின்படி, பெருநகர சென்னை மாநகராட்சியில், தலைமை பொறியாளர் (திட்டங்கள்) ஆக பணிபுரியும் திரு.க.சின்னசாமி அவர்கள் வயது முதிர்வு ஓய்வு காரணமாக 31.05.2019 அன்று பிற்பகல் முதல் ஓய்வு பெறவுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து, தனியரை வயது முதிர்வு ஓய்வில் செல்ல ஆணையர் அவர்களுக்கு கோப்பு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. தனியர் பிறந்த தேதி 15.05.1961 ஆகும்.

திரு.க.சின்னசாமி தலைமை பொறியாளர் (திட்டங்கள்) அவர்கள் பெருநகர சென்னை மாநகராட்சியில் முதன் முதலாக உதவி பொறியாளர் பதவியில் 08.04.1993 அன்று பணியில் சேர்ந்துள்ளார். தனியரை, உதவி பொறியாளர் பதவியில் பணியில் சேர்ந்த நாளில் பணிவரன்முறைப்படுத்தியும், 08.04.1995 அன்று தகுதிகாண் பருவம் முடித்தவராகவும் ஆணையிடப்பட்டுள்ளது. தனியர் 16.06.2003 முதல் உதவி செயற்பொறியாளராகவும், 11.01.2013 முதல் செயற்பொறியாளராகவும், 16.03.2015 முதல் கண்காணிப்பு பொறியாளராகவும் மற்றும் 01.03.2019 முதல் தலைமை பொறியாளராகவும் பதவி உயர்வு பெற்றுள்ளார். தனியர் பணிபுரிந்து வந்துள்ள துறைகள்/ மண்டல அலுவலகங்கள் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

| வ. எண் | பதவி | துறை | காலங்கள் |
|---|---|---|---|
| 1 | உதவி பொறியாளர் | கட்டிடத்துறை | 08.04.1993 முதல் 09.02.1996 பி.ப. வரை |
| 2 | உதவி பொறியாளர் | மண்டலம் - 3 | 09.02.1996 முதல் 16.03.1999 வரை |
| 3 | உதவி பொறியாளர் | பணித்துறை (பணி மாற்று அடிப்படையில் கட்டடத்துறை) | 17.03.1999 மு.ப. முதல் 27.07.2000 பி.ப.வரை |
| 4 | உதவி பொறியாளர் | மண்டலம் 3 | 28.07.2000 மு.ப. முதல் 16.06.2003 வரை |
| 5 | உதவி செயற் பொறியாளர் | பேருந்து சாலைகள் துறை | 16.06.2003 பி.ப. முதல் 10.01.2013 வரை |
| 6 | செயற் பொறியாளர் | மண்டலம் - 11 | 11.01.2013 மு.ப.முதல் 14.10.2014 வரை |
| 7 | செயற் பொறியாளர் (மண்டல அலுவலர் (பொ)) | மண்டலம் - 11 | 14.10.2014 முதல் 17.02.2015 வரை |
| 8 | கண்காணிப்பு பொறியாளர் (பொ) | மழைநீர் வடிகால் துறை | 18.02.2015 முதல் 15.03.2015 வரை |
| 9 | கண்காணிப்பு பொறியாளர் | மழைநீர் வடிகால் துறை | 16.03.2015 முதல் 29.07.2016 வரை |
| 10 | கண்காணிப்பு பொறியாளர் | கட்டிடத்துறை | 29.07.2016 பி.ப. முதல் 28.02.2019 வரை |
| 11 | தலைமை பொறியாளர் | திட்டம், மின்சாரம், கணிப்பொறி மையம், மற்றும் புவியியல் தகவல் அமைப்பு | 01.03.2019 பி.ப. முதல் இந்நாள் வரை |

**பொ.து.ந.க.எண்.ஈ1/12402 /2019**

தனியர் பணிபுரிந்த பிற மண்டலங்கள்/துறைகளில் நேர் செய்யப்படாத முன்பணங்கள்/அலுவலக முன்பணங்கள் மற்றும் ஒழுங்கு நடவடிக்கைகள் ஏதும் நிலுவையில் இல்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சென்னை மாநகராட்சி அலுவலர்கள் கூட்டுறவு சங்கத்தின் 05.03.2019 நாளிட்ட கடிதத்தில், தனியர் சென்னை மாநகராட்சி அலுவலர் கூட்டுறவு சங்கத்தில் உறுப்பினர் எனவும், கடன் தொகை நிலுவை இல்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காவல்துறை துணை கண்காணிப்பாளர் / விழிப்பு அலுவலர் அவர்களின் 19.03.2019 நாளிட்ட கடிதத்தில், தனியர் மீது இன்றைய தேதியில் சென்னை மாநகராட்சி விழிப்பு துறையில் விசாரணைகள் ஏதும் நிலுவையில் இல்லை என்ற அறிக்கை பெறப்பட்டுள்ளது. தனியர் மீது துறை சார்ந்த ஒழுங்கு நடவடிக்கைகளோ அல்லது விசாரணைகளோ தற்போது நிலுவை ஏதும் இல்லை எனத் தெரிவித்து கொள்ளப்படுகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சி, நிதி ஆலோசகர் அவர்களின் 24.04.2019 நாளிட்ட குறிப்பின்படி, தனியர் உதவி பொறியாளர், உதவி செயற்பொறியாளர், செயற்பொறியாளர், கண்காணிப்பு பொறியாளர் மற்றும் தலைமை பொறியாளராக, மண்டலம் / துறைகள் / வட்டார அலுவலகங்களில் பணிபுரிந்த காலங்களில் 1993-1994 முதல் 2016-2017 ஆம் ஆண்டு வரை தணிக்கை அறிக்கைகளின்படி, இணைக்கப்பட்டுள்ள அட்டவணையின்படி மொத்தம் ரூ.13,17,004/- உள்ளடக்கிய 1 தணிக்கைத்தடை பத்தி கூட்டு பொறுப்பு மற்றும் தனிப்பொறுப்பில் நிலுவை உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், தணிக்கை தடைகள் கூட்டுப்பொறுப்பில் தனியருக்கு மட்டும் ரூ.4,39,001/- (ரூபாய் நான்கு இலட்சத்து முப்பத்து ஒன்பதாயிரத்து ஒன்று மட்டும்) உள்ளடக்கிய 1 தணிக்கை தடைபத்தி தனிப்பொறுப்பில் நிலுவையில் உள்ளது எனவும், மேலும் 2017-18, 2018 -19 மற்றும் 2019- 2020 ஆம் ஆண்டு வரை உள்ளாட்சி நிதித் தணிக்கை துறையால் தணிக்கை அறிக்கைகள் வெளியிடப்படவில்லை எனவும், மேற்காணும் ஆண்டுகளுக்கான தணிக்கை அறிக்கைகள் வெளியிடப்பட்ட பின்னர், தனியரை பொறுப்பாக்கும் தணிக்கைத் தடை பத்திகள் ஏதும் நிலுவையில் இருப்பின் அதன் பொறுப்பு தனியரையே சாரும் எனவும், தனியர் உதவி பொறியாளர் பதவியில் இருந்து ஓய்வு பெறும் நாள் வரை துறைகள் மற்றும் வட்டார அலுவலகங்களில் பணிபுரிந்த காலங்களில் அன்னாரால் அனுமதிக்கப்பட்ட முன்பணத்தொகைகளுக்கான விவரங்களை, பகுதி கணக்கு குழுமத்தில் பெற்று அத்தொகைகள் அனைத்தும் நேர் செய்யப்பட்டது என்றும், தனியரை பொறுப்பாக்கும் முன்பணத்தொகை நிலுவை இல்லை என்பதற்கான சான்று துறைத் தலைவர்/மண்டல அலுவலரிடமிருந்து பெறப்பட வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

| வ. எண். | மண்டலம்/ துறை | ஆண்டு | பத்தி எண் | தணிக்கைக்குட்படுத்தப் பட்டத் தொகை (ரூ.) | தடைக்கு பொறுப்பான பணியாளர்களின் எண்ணிக்கை மொத்தம் | திரு.க.சின்னசாமி தலைமை பொறியாளரை பொறுப்பாக்கும் தொகை(ரூ.) |
|---|---|---|---|---|---|---|
| 1 | மழைநீர்வடி கால் துறை (கண்காணிப்பு பொறியாளர் | 2016-17 | 11 | 1317004.00 | 3 | 439001.00 |
| | **மொத்தம்** | | | **1317004.00** | | 439001.00 |

இணை இயக்குநர், உள்ளாட்சி நிதி தணிக்கை அவர்களின் 07.05.2019 நாளிட்ட கடிதத்தில், மேற்கண்ட தணிக்கைப்பத்தி நீக்கம் செய்யப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தனியரின் 08.05.2019 நாளிட்ட உறுதிமொழி கடிதத்தில், பெருநகர சென்னை மாநகராட்சியில், தலைமை பொறியாளர் (திட்டங்கள்) ஆக பணிபுரியும் திரு.க.சின்னசாமி, வயது 58 ஆகிய நான், கடந்த 08.04.1993 அன்று உதவி பொறியாளராக சென்னை மாநகராட்சியில் பணியில் சேர்ந்தேன். நான் வருகின்ற 31.05.2019 அன்று பிற்பகல் முதல் வயது முதிர்வு ஓய்வில் செல்ல இருப்பதால், ஓய்வு பெற்ற பின்னர் எனக்கு வழங்கப்படும் பணிக்காலப் பயன்களான ஓய்வூதியம் மற்றும் துறை வழி பணப்பயன்கள் மிகையாக இருப்பது பின்னர் தெரிய வந்தால்

அத்தொகையினை ஒரே தவணையில் செலுத்திவிடுவேன் அல்லது எனக்கு வழங்கப்படும் ஓய்வூதிய அகவிலைப்படியிலிருந்து பிடித்தம் செய்து கொள்ளலாம் என சம்மதம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சியில் வகுப்பு-1A ன் கீழ்வரும் தலைமை பொறியாளர் பதவியில் உள்ளவர்களை வயது முதிர்வு ஓய்வில் செல்ல அனுமதிக்கும் அதிகாரம் அரசின் வசம் உள்ளது. மேற்கண்ட கருத்துருவினை (Retirement Proposal) மன்றத்தின் அனுமதி பெற்று அரசுக்கு அனுப்பப்பட வேண்டும். தற்போது மன்றம் 24.10.2016 அன்றுடன் முடிவடைந்துள்ளது.

அரசாணை(ப) எண்.147, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை நாள்.24.10.2016ன்படி பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சிறப்பு அதிகாரி நியமனம் செய்யப்பட்டுள்ளதால், தனியரை வயது முதிர்வு ஓய்வில் செல்ல அனுமதிக்கும் அதிகாரம் சிறப்பு அதிகாரி-மன்றம் அவர்கள் வசம் உள்ளது.

எனவே, திரு.க.சின்னசாமி, தலைமை பொறியாளர் (திட்டங்கள்) அவர்கள் மீது நிதி ஆலோசகர், பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் இணை இயக்குநர், உள்ளாட்சி தணிக்கை அவர்களின் கடிதங்களின்படி, 2017-2018, 2018-19 மற்றும் 2019 - 2020 ஆம் ஆண்டு வரை உள்ளாட்சி நிதித் தணிக்கைத்துறையால் தணிக்கை அறிக்கைகள் வெளியிடப்படாத நிலையிலும், மேற்கண்ட தணிக்கைத்தடை அறிக்கைகள் வெளியாகும்போது தனியர் மீது தணிக்கைத் தடை இருப்பின், அதற்கும் தனியரை பொறுப்பாக்கி அதற்கான தொகையினை தனியருக்கு வழங்கப்படவிருக்கும் ஓய்வூதிய பயன்கள் மற்றும் ஓய்வூதிய தொகையிலிருந்து பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைக்குட்பட்டு தணிக்கை தடைகள், நேர் செய்யப்படாத முன்பணங்கள் மற்றும் மாநகராட்சிக்கு நிதி இழப்பீடு ஏதேனும் இருப்பது பின்னர் தெரியவரும் பட்சத்தில் அவற்றிற்கும் தனியரை முழுபொறுப்பாக்கி அன்னாருக்கு வழங்கப்படும் பணிக்கொடை மற்றும் ஓய்வூதிய அகவிலைப்படியிலிருந்து பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைக்குட்பட்டும், தனியரை 31.05.2019 பிற்பகல் முதல் வயது முதிர்வு ஓய்வில் செல்ல அரசாணை பெறுவதற்கு, அரசுக்கு செயற்குறிப்பு அனுப்ப, சிறப்பு அதிகாரி – மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 09.05.2019 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**"அரசுக்கு செயற்குறிப்பு அனுப்ப சிறப்பு அதிகாரி-மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".**

*****

**பொ.து.நு.க.எண் இ5 / 5777 /2019**

**தீர்மான எண்.254/2019** **நாள்: 10-05-2019**

**பணியமைப்பு - பெருநகர சென்னை மாநகராட்சி - பொதுத்துறை - திரு. கே.சந்திரசேகரன், இளநிலை உதவியாளர், பொது சுகாதாரத்துறை . சார்நிலை அலுவலருக்கான துறைத் தேர்வு கணக்குத் தேர்வு பாகம்.1 [The Account Test for Subordinate Officers - Part-I (New Pattern 124) தேர்ச்சி பெறுவதிலிருந்து தளர்வாணை அளித்து அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, வகுப்பு 3 மற்றும் 4ம் நிலை பணியாளர்களுக்கான சார்நிலை பணி துணை விதிகள் 2009, மன்றத் தீர்மான எண். 13/2015, நாள் : 29.01.2015ல் அனுமதி பெறப்பட்டுள்ளது. அதன்படி உதவியாளர் பதவிக்கு குறைந்தபட்ச பொதுக் கல்வித்தகுதி மற்றும் துறைத் தேர்வுகளான சார்நிலை கணக்கு அலுவலர் தேர்வு பாகம்-1 மற்றும் தமிழ்நாடு அலுவலக நடைமுறை நூல் ஆகிய தேர்வுகளில் தேர்ச்சி பெற வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது

பொது சுகாதாரத்துறையில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து வரும் திரு.கே.சந்திரசேகரன், அவர்கள் 19.02.2019 நாளிட்ட கடிதத்தில், தான் சார்நிலை அலுவலருக்கான கணக்கு தேர்வு பாகம்-1ஐ 7 முறை எழுதி தோல்வி அடைந்துள்ளதாகவும், மேலும் தான் 30.06.2023 அன்று ஓய்வு பெற உள்ளதால் அரசாணை நிலை எண். 1120 பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்த (பணி எம்) துறை நாள் 30.10.1984ன்படி துறைத்தேர்வில் தேர்ச்சி பெறுவதிலிருந்து தளர்வு அளித்து பதவி உயர்வுக்கு வாய்ப்பளிக்குமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

மாநகர நல அலுவலர் அவர்களின் 20.02.2019 நாளிட்ட கடிதத்தில், பொது சுகாதாரத்துறையில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து வரும் திரு.கே.சந்திரசேகரன் என்பவர் தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்படும் துறைத்தேர்வு *(The Account Test for Subordinate Officers Part-I (T.C.176 New Pattern 124)* வை கடந்த டிசம்பர் 2014 முதல் மே 2018 வரை ஏழு முறை தேர்வு எழுதி அத்தேர்வுகள் அனைத்திலும் தோல்வி அடைந்துள்ளதாகவும், அதனை உறுதிபடுத்தி சார் செயலாளர், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் அளித்துள்ள உண்மை தன்மை சான்றிதழ் இணைத்து அரசாணை மற்றும் அரசு கடிதத்தில் அளிக்கப்பட்டுள்ள விதிகள் தளர்வின் அடிப்படையில் துறைதேர்வுகளில் தேர்ச்சி பெற ஐந்து தடவைகளுக்கு மேலாக முயற்சி செய்திருப்பதாகவும், மேலும் 53 வயதை பூர்த்தி செய்திருப்பதாகவும், தனியர் தற்போது இத்துறையின் தலைமையிடம் சார்ந்த உயர்நீதிமன்ற வழக்குகள் தொடர்பான இருக்கை பணியை தொய்வின்றி கவனித்து வருவதாகவும், உள்ளாட்சி நிதி தணிக்கை துறையில் எழுப்பப்படும் தடைகளுக்கும் கடந்த காலங்களில் திருப்தியுடன் செயல்பட்டுள்ளார் என்பதால் அன்னாரின் பணிகள் திருப்திகரமாக உள்ளதாக தெரிவித்துள்ளார்.

திரு.கே.சந்திரசேகரன், அவர்கள் பெருநகர சென்னை மாநகராட்சியில் 12.01.1998 அன்று துப்புரவு பணியாளராக சேர்ந்துள்ளார். மேற்படி பதவியில் பணிவரன்முறை செய்யப்பட்டு 12.01.2000 அன்று தகுதிகாண் பருவம் முடித்தவராக அறிவிக்கப்பட்டுள்ளது. பின்னர் தனியர் ஆணையர் அவர்களின் 11.06.2013 நாளிட்ட செயல்முறை ஆணையின்படி இளநிலை உதவியாளராக பதவி உயர்வு பெற்று 17.06.2013 முதல் இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்யப்பட்டு 17.06.2015 அன்று தகுதிகாண் பருவம் முடித்தவராக அறிவிக்கப்பட்டுள்ளது. தனியர் தமிழ்நாடு அலுவலக நடைமுறை நூல் துறைத் தேர்வில் 2016 ஆம் ஆண்டு மே மாதம் தேர்ச்சி பெற்றுள்ளார்.

**பொ.து.ந.க.எண் இ5 / 5777 /2019**

அரசாணை (நிலை) எண். 1120 பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் (பணி எம்) துறை, நாள் 30.10.1984 மற்றும் அரசு கடித எண் 9140/ பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் (பணி எம்) 89-11, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்த (பணி.எம்) துறை, நாள் 20.11.1989ல் துறைத் தேர்வுகளில் தேர்ச்சி பெறுவதிலிருந்து விலக்களிக்க அவர் பொருட்டு விதிகளை தளர்த்த கீழ்க்கண்ட நிபந்தனைகள் பூர்த்தி செய்ய் வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

1 சம்பந்தப்பட்ட அரசு அலுவலர் 53 வயதிற்கு குறையாதவராக இருக்க வேண்டும்.

2 தொடர்புடைய அரசு அலுவலர் தேர்வுகளில் தேர்ச்சி பெற குறைந்தது ஐந்து தடவைகளாவது முயற்சி செய்திருக்க வேண்டும், இதற்கு அத்தாட்சியாக தேர்வுகள் எழுதியதற்கான அனுமதிக் குறிப்பாணையுடன் (Hall Tickets) தமிழ்நாடு அரசு தேர்வாணையம் வெளியிடும் மேற்படி தேர்வுகள் தேர்ச்சி பெற்றவர்களின் மற்றும் தேறாதவர்களின் விவரப்பட்டியல் அடங்கிய அரசு பணியாளர் தேர்வாணையச் செய்தி வெளியீடு வைத்து அனுப்ப வேண்டும்.

3 அவர் இந்தச்சலுகையை அடையத்தக்க அளவிற்கு பணிக்குறிப்புகள் மனநிறைவு அளிப்பதாக இருக்க வேண்டும்.

திரு. கே.சந்திரசேகரன், இளநிலை உதவியாளர், பொது சுகாதாரத்துறை, துறைத் தேர்வுகளில் தேர்ச்சி பெறாமல் 7 முறை கலந்து கொண்டு தேர்வு எழுதிய விவரங்கள் கீழ்வருமாறு அளிக்கப்படுகிறது

| S.No | Roll No and Exam Date | Tamil Nadu Public Service Commission Bulletin No and Result Date |
|---|---|---|
| 1 | 000565 / 30.12.2014 | No. 7, dated 16.03.2015 |
| 2 | 000547 / 30.12.2015 | No.7, dated 16.03.2016 |
| 3 | 000624 / 30.05.2016 | No.18, dated 16.08.2016 |
| 4 | 000472 / 30.12.2016 | No.7, dated 16.03.2017 |
| 5 | 000475 / 30.05.2017 | No.18, dated 16.08.2017 |
| 6 | 221700325 / 29.12.2017 | No. 6 , dated 07.03.2018 |
| 7 | 180500407 / 29.05.2018 | No.17, dated 07.08.2018 |

மேற்கண்ட அரசாணை மற்றும் அரசு கடிதத்தில் தெரிவித்துள்ள நிபந்தனைகளின்படி தனியர் 53 வயதினை கடந்துள்ளார். தனியர் சார்நிலை அலுவலர் கணக்கு தேர்வு பாகம்-1ல் தேர்ச்சி பெற மேற்கண்ட கால கட்டத்தில் 7 முறை முயற்சி செய்து தோல்வி அடைந்துள்ளார். அதற்கு அத்தாட்சியாக (Hall Tickets) மற்றும் தமிழ்நாடு அரசு தேர்வாணையம் வெளியிடும் தேர்ச்சி பெற்றவர்களின் மற்றும் தேர்ச்சி பெறாதவர்களின் பதிவெண்கள் அடங்கிய விவரப்பட்டியல் மற்றும் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையச் செய்தி வெளியீடு (Tamil Nadu Public Service Commission Bulletin) ஆகியவற்றை அளித்துள்ளார். மாநகர நல அலுவலர், பொது சுகாதாரத்துறை அவர்களின் 20.02.2019 நாளிட்ட கடிதத்தில் பணி விவரங்கள் மற்றும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய கடிதம் ஆகியவைகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. தனியர் மீது துறை ரீதியான ஒழுங்கு நடவடிக்கை ஏதும் இல்லை. மேலும் இவர் 30.06.2023 அன்று வயது முதிர்வு ஓய்வு பெறவுள்ளார்.

**பொ.து.ந.க.எண் இ5 / 5777 /2019**

*17.08.2017* நாளிட்ட இவ்வலுவலக கடிதத்தில், தனியர் துறைத் தேர்வில் தேர்ச்சி பெறாமல் துறைத் தேர்வுகளில் தேர்ச்சி பெறுவதிலிருந்து தளர்வு செய்யுமாறு கோருவதற்கான காரணம் மற்றும் அரசாணையின்படி தனியரின் பணிக்குறிப்புகள் திருப்திகரமாக உள்ளதா என்ற விவரத்தினை தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டதில் பொது சுகாதாரத்துறை கடிதத்தில் தனியர் *30.06.2023* அன்று வயது முதிர்வு காரணமாக ஓய்வு பெற இருப்பதாகவும், அரசாணையின் அடிப்படையில் இதிலிருந்து தளர்வு வழங்கி பதவி உயர்வுக்கு வாய்ப்பளிக்குமாறு தனியரின் மனுவில் கேட்டுக்கொண்டுள்ளதாகவும், தனியரின் பணிகள் திருப்திகரமாக உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆகவே, மேற்கண்ட விவரங்களின் அடிப்படையில் பொது சுகாதாரத்துறையில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து வரும் திரு.கே.சந்திரசேகரன், என்பவர் சார்நிலை அலுவலருக்கான கணக்குத் தேர்வு பாகம்-1ல் *[The Account Test for Subordinate Officers – Part-I) (Test Code 176, New Pattern Test Code 124]* துறைத் தேர்வில் தேர்ச்சி பெறுவதிலிருந்து விலக்களித்து தளர்வாணை *(Relaxation)* வழங்க சிறப்பு அதிகாரி – மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது *10.05.2019* நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**“f z ¡ F nj®Î ghf« -1 தேர்வில் தேர்ச்சி பெறுவதிலிருந்து விலக்களித்து சிறப்பு அதிகாரி-மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது”.**

*****

**Br.D.C.No.B3/0463/2015**

**Resolution No.255/2019 Date: 13-05-2019**

**Bridges Department – Construction of integrated ROB in lieu of existing LC No. 2A at Ennore High Road and LC No. 2B at Manali Road in Dn. 38 & 41, Zone – IV – CMWSSB requested to remit Rs. 9,35,22,000/- towards shifting of water/sewer mains- – For approval.**

Greater Chennai Corporation has requested the CMWSSB to furnish the estimate for shifting of the existing water / sewer mains along the alignment of the proposed Construction of integrated ROB in lieu of existing LC No – 2A at Ennore High Road and LC No- 2B at Manali Road in Dn. 38 & 41, Zone – IV vide letters dated.19.07.2017, 02.01.2018, 12.03.2018 and 05.04.2018.

As requested by the Greater Chennai Corporation, the CMWSSB has furnished the cost for shifting/re-routing of their underground utilities vide Letter from the Superintending Engineer (NE), CMWSSB, dated.02.05.2018 as Rs.9,35,22,000/-.

Initially the estimate cost of this Project is Rs.117.47 crores. Administrative Sanction from the Government was obtained vide G.O.Ms.No189 dated 31.12.2015 on 50:50 cost sharing basis between Greater Chennai Coporation and Government.

Subsequently, an additional estimate for Rs.20.06 crores was prepared as the length of the bridge along the Manali Road has been extended by 175m. Hence the estimate cost has been increased from Rs.117.47 crores to Rs.137.53 crores. Revised Administrative Sanction was obtained from the Government vide G.O (2D) No.3 dated 08.01.2019.

Hence,

1. To accept the request of the CMWSSB to pay an amount Rs.9,35,22,000/- for shifting of water mains and sewer mains due to the construction of integrated ROB in lieu of existing LC No – 2A at Ennore High Road and LC No- 2B at Manali Road in Dn. 38 & 41, Zone – IV.
2. To remit the amount Rs.9,35,22,000/- for shifting of water mains and sewer mains due to the construction of integrated ROB in lieu of existing LC No – 2A at Ennore High Road and LC No- 2B at Manali Road in Dn. 38 & 41, Zone – IV.
3. To pay the amount Rs.9,35,22,000/- from the Capital Fund of Greater Chennai Corporation.

Sl.No. 1 to 3 above, orders of the Special Officer–Standing Committee (Works), Standing Committee(Taxation and Finance) and Council are requested. Commissioner's note dated 09.05.2019 is read.

**"ROB Construction, shifting of Water / Sewer Mains, Sl.No. 1 to 3 are approved by Special Officer-Standing Committee (Works), Standing Committee (Taxation and Finance) and Council."**

*****

சு.து. ந.க.எண்.NUHM/பி2/1419/2019

தீர்மான எண்.256/2019 நாள்:13-05-2019

**பொதுசுகாதாரத்துறை- தேசிய நகர்ப்புற சுகாதாரத்திட்டம் - நகர்ப்புற ஆரம்ப சுகாதார மையங்களுக்கு தேவையான 302 செவிலியர்களை(Staff Nurses) ஒப்பந்த அடிப்படையில் 01.03.2018 முதல் 31.01.2019 வரையில் பதினோரு மாத காலத்திற்கு பணியமர்த்த M/s. Vardhan Infraastructure நிறுவனத்திற்கு பணியாணை வழங்கப்பட்டது- இந்த பணியாணையினை 01.02.2019 முதல் 31.03.2019 இரண்டு மாத காலத்திற்கு பணி நீட்டிப்பு செய்யப்பட்டது - 1 முதல் 15 வரையிலான(4 தவிர) மண்டலங்களில் பணிபுரியும் செவிலியர்களுக்கு சம்பந்தப்பட்ட மருத்துவ அலுவலர்கள் மூலம் 01.04.2019 முதல் 31.05.2019 வரை இரண்டு மாத காலத்திற்கு மாத ஊதியம் நேரடியாக வழங்குவதற்கு அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, பொதுசுகாதாரத்துறையில் தேசிய நகர்ப்புற சுகாதாரத்திட்ட வழிகாட்டுதல்களின்படி, சிறப்பு அதிகாரி/மன்றத்தீர்மான எண்.195/2018 நாள்.22.02.2018ன்படி நகர்ப்புற ஆரம்ப சுகாதார மையங்களுக்கு தேவையான 302 செவிலியர்கள், M/s.Vardhan Infraastructure நிறுவனத்தின் மூலம் ஒப்பந்த அடிப்படையில் 01.03.2018 முதல் பதினொரு மாத காலத்திற்கு பணியமர்த்தப்பட்டு பணிக்காலமானது 31.01.2019ல் முடிவடைகின்றது.

சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை (EAPII-1) அரசாணை நிலை எண்.232 நாள்.13.06.2018ன்படி, செவிலியர் (Staff Nurse) பணியிடத்திற்கு மாத ஊதியமாக ரூ.14,000/ என நிர்ணயிக்கப்பட்டு ஆணை வழங்கப்பட்டுள்ளது. சிறப்பு அதிகாரி/மன்றத்தீர்மான எண்.918/2018 நாள்.19.11.2018ல் செவிலியர் (Staff Nurse) பணியிடத்திற்கு மாத ஊதியமாக ரூ.14,000/ உயர்த்தி 01.12.2018 முதல் 31.01.2019 வரையில் அளிக்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

சிறப்பு அதிகாரி/மன்றத்தீர்மான எண்.82/2019, நாள்.15.02.2019ன்படி ஒப்பம் இறுதி செய்யும் வரையில் அவசர அவசியம் கருதியும், மருத்துவமனைகளில் மருத்துவ சேவைகள் பாதிக்காவண்ணம் தொடர்ந்து நடைபெற 302 செவிலியர்களை பணியமர்த்தும் பணியாணை M/s.Vardhan Infraastructure நிறுவனத்திற்கு 01.02.2019 முதல் 31.03.2018 வரையில் 2 மாத காலத்திற்கு பணி நீட்டிப்பு செய்யப்பட்டுள்ளது.

மேலும், தேசிய நகர்ப்புற சுகாதாரத்திட்டத்தில் 304 செவிலியர்கள் (Staff Nurses) - ஒப்பந்த அடிப்படையில் 11 மாத காலத்திற்கு ஒப்பம் கோரி பணியமர்த்த ஒப்பம் கோரப்பட்டு நிதி ஒப்பம் திறக்கப்பட்டு கோப்பு நடவடிக்கையில் உள்ளது.

தற்போது நாடாளுமன்ற தேர்தல் அறிவிக்கப்பட்ட நிலையில் ஏற்கெனவே கோரப்பட்ட ஒப்பத்தினை இறுதி செய்ய அனுமதி கோரி, அரசு செயலர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை மூலமாக தேர்தல் ஆணையத்திற்கு 27.03.2019ல் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. தேர்தல் ஆணையத்தில் பதில் வரும் வரையில், மருத்துவ பணிகள் பாதிக்காவண்ணம் தொடர்ந்து மேற்கொள்ள வேண்டியுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சியில் நகர்ப்புற ஆரம்ப சுகாதார மையங்களில் கீழ்க்கண்ட அளவில் மண்டலவாரியாக செவிலியர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.

அட்டவணை. 1

| Zone | In Position |
|---|---|
| 1 | 12 |
| 2 | 5 |
| 3 | 9 |
| 4 | 31 |
| 5 | 29 |
| 6 | 31 |
| 7 | 22 |
| 8 | 31 |
| 9 | 30 |

| | |
|---|---|
| 10 | 30 |
| 11 | 12 |
| 12 | 11 |
| 13 | 22 |
| 14 | 15 |
| 15 | 12 |
| | 302 |

அவசர அவசியம் கருதியும், பொதுமக்கள் நலன் கருதியும், மருத்துவ சேவைகளை பொதுமக்களுக்கு தொடர்ந்து வழங்கிட, மண்டலம் 4ல் பணிபுரியும் செவிலியர்களுக்கான பணியாணையினை 01.04.2019 முதல் 31.05.2019 வரை இரண்டு மாத காலத்திற்கு M/s.Vardhan Infraastructure நிறுவனத்திற்கு பணி நீட்டிப்பு செய்ய ஆணையர் அவர்களின் 27.03.2019 நாளிட்ட ஆணை பெறப்பட்டுள்ளது.

திட்ட இயக்குநர் (மாநில சுகாதார சங்கம்-TN) அவர்களின் 06.03.2017 நாளிட்ட செயல்முறை ஆணையில் தமிழகத்தில் உள்ள 27 வட்டார மற்றும் வட்டார அல்லாத மருத்துவமனைகள் உள்ளிட்ட 293 அரசு பல் மருத்துவமனைகளில் பணியாற்றிய பல் அறுவை சிகிச்சை நிபுணர் மற்றும் பல் மருத்துவ உதவியாளர் பணியிடங்களுக்கு பிப்ரவரி 2017 மற்றும் மார்ச் 2017 மாதங்களுக்கான மாத ஊதியம் மற்றும் ஆண்டு ஊதிய உயர்வு ஒப்பந்தாரர் மூலம் வழங்கப்படாமல் அரசு மருத்துவமனை மற்றும் வட்டார ஆரம்ப சுகாதார நிலையங்கள் மூலமாக பல் அறுவை சிகிச்சை நிபுணர்கள் மற்றும் பல் மருத்துவ உதவியாளர்களுக்கும் நேரடியாக பணம் வழங்க ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இதனடிப்படையில், மண்டலம் 4 தவிர, 1 முதல் 15 வரையிலான மண்டலங்களில் பணிபுரியும் செவிலியர்களுக்கு சம்பந்தப்பட்ட மருத்துவ அலுவலர்கள் மூலம் 01.04.2019 முதல் 31.05.2019 வரை இரண்டு மாத காலத்திற்கு மாதஊதியம், வருகையின் அடிப்படையில் நேரடியாக வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை. 2**

| Zone | In Position |
|---|---|
| 1 | 12 |
| 2 | 5 |
| 3 | 9 |
| 5 | 29 |
| 6 | 31 |
| 7 | 22 |
| 8 | 31 |
| 9 | 30 |
| 10 | 30 |
| 11 | 12 |
| 12 | 11 |
| 13 | 22 |
| 14 | 15 |
| 15 | 12 |
| | 271 |

ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தப்படும் பணியாளர்களுக்கு,பணியாளர் இன்சூரன்ஸ், (Employee's State Insurance) மற்றும் பணியாளர் வருங்கால வைப்பு நிதி (Employee's Provident Fund), கீழ்க்கண்ட அளவில் 31.03.2019 வரையில் ஒப்பந்ததாரர் மூலம் வழங்கப்பட்டு வந்தது.

| Employee's State Insurance | | Employee's Provident Fund | | GST |
|---|---|---|---|---|
| **Employer Contribution in the salary** | Employee Contribution in the salary | **Employer Contribution in the salary** | Employee Contribution in the salary | |
| **4.75%** | 1.75% | **13%** | 12.00% | **18%** |

- தற்போது ஒப்பந்தம் முடிவடைந்த நிலையில், பொதுசுகாதார துறை தலைமையிடத்தில் EPF, ESI செலுத்த இயலாத நிலையில், 01.04.2019 முதல் 31.05.2019 வரை இரண்டு மாத காலத்திற்கு மட்டும் 271 செவிலியர்களுக்கு EPF மற்றும் ESI (Employer and Employee contribution) செலுத்துவதில் தற்சமயம் விலக்கு அளித்து பின்னர் முடிவு எடுக்கவும், தற்போது 01.04.2019 முதல் 31.05.2019 வரை இரண்டு மாத காலத்திற்கு மட்டும் 271 செவிலியர்களுக்கு மாத ஊதியம் மட்டும் வழங்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.
- ஒப்பந்ததாரர் இல்லாத காரணத்தினால் அவருக்கு வழங்க வேண்டிய நிர்வாக கட்டணம் வழங்க தேவையில்லை. மேலும், தேசிய நகர்ப்புற சுகாதார திட்டத்தின் மூலமே ஊதியம் நேரடியாக வழங்கப்படுவதால் இந்த கால கட்டத்திற்கு GSTயும் செலுத்த தேவையில்லை.
- செவிலியர்களுக்கான ஊதியத்தினை அவர்கள் பணிபுரியும் ஆரம்ப சுகாதார மையத்தின் மருத்துவ அலுவலர்களுக்கு அளித்து அவர்கள் மூலமாக செவிலியர்களுக்கு (NEFT/Cheque) ஊதியம் வழங்கலாம். இவ்வாறு செவிலியர்களுக்கு ஊதியம் வழங்கும் போது அவர்களின் ஆண்டு வருமானது (ரூ.14000x12=ரூ.1,68,000) வருமான வரி விலக்கிற்கு உட்பட்டு உள்ளதால், அவர்களுக்கு வருமான வரி பிடித்தம் செய்ய தேவையில்லை.
- மேலும் மாதந்தோறும் (இரண்டு மாதங்களுக்கு மட்டும்) மண்டல மருத்துவ அலுவலர்கள் மூலம் சம்பந்தப்பட்ட மருத்துவ அலுவலர்களிடம் இருந்து வருகை பதிவேடு பெற்று அதற்கான தொகையினை விடுவிக்கலாம்.

**அட்டவணை. 3**

**Name of the Post : Staff Nurse**

| Sno | Zone | Basic Salary (Rs) | Allowances (Rs) | Total (1+2) | Required Staff | Total Amount (3x4x2 months) (Rs) |
|---|---|---|---|---|---|---|
| | | 1 | 2 | 3 | 4 | 5 |
| 1 | 1 to 15 except 4 | 7000 | 7000 | 14000 | 271 | 75,88,000 |

எனவே,

1. பெருநகர சென்னை மாநகராட்சி, பொதுசுகாதாரத்துறையில் தேசிய நகர்ப்புற சுகாதாரத்திட்டத்தில் நகர்ப்புற ஆரம்ப சுகாதார மையங்களுக்கு தேவையான 302 செவிலியர்கள் ஒப்பந்த அடிப்படையில் 01.03.2018 முதல் 31.01.2019 வரை பதினொரு மாத காலத்திற்கு M/s.Vardhan Infraastructure நிறுவனத்தின் மூலம் பணியமர்த்தப்பட்டு மேலும் 01.02.2019 முதல் 31.03.2019 வரையில் 2 மாத காலத்திற்கு பணி நீட்டிப்பு செய்யபட்டது. இதன் தொடர்ச்சியாக அவசர அவசியம் கருதியும், பொதுமக்கள் நலன் கருதியும், மருத்துவ சேவைகளை பொதுமக்களுக்கு தொடர்ந்து வழங்கிட, அட்டவணை 3ல் தெரிவிக்கப்பட்டவாறு மண்டலம் 4 தவிர 1 முதல் 15 வரையிலான மண்டலங்களில் பணிபுரியும் 271 செவிலியர்களுக்கான ஊதியத்தினை அவர்கள் பணிபுரியும் ஆரம்ப சுகாதார மையத்தின் மருத்துவ அலுவலர்களுக்கு அளித்து, அவர்கள் மூலம் 01.04.2019 முதல் 31.05.2019 வரை இரண்டு மாத காலத்திற்கு மட்டும், வருகையின் அடிப்படையில் மாத ஊதியம் (NEFT/Cheque) வழங்கவும்,
2. இதற்கான மொத்த செலவினம் ரூ. 75,88,000/- (ரூபாய் எழுபத்தி ஐந்து லட்சத்து எண்பத்தி எட்டாயிரம் மட்டும்) மேற்கொள்ள நிர்வாக அனுமதிக்கும்,
3. நிர்வாக காரணங்களினால் 01.04.2019 முதல் 31.05.2019 வரை இரண்டு மாத காலத்திற்கு மட்டும் 271 செவிலியர்களுக்கு EPF மற்றும் ESI (Employer and Employee contribution) செலுத்துவதில் தற்சமயம் விலக்கு அளித்து பின்னர் முடிவு எடுக்கவும்,

4. செவிலியர்களுக்கு ஊதியம் வழங்கும் போது அவர்களின் ஆண்டு வருமானது (ரூ.14000x12=ரூ.1,68,000) வருமான வரி விலக்கிற்கு உட்பட்டு உள்ளதால், அவர்களுக்கு வருமான வரி பிடித்தம் செய்வதில் விலக்கு அளிக்கவும்,
5. மாநகராட்சி மூலமே ஊதியம் வழங்கப்படுவதால் இந்த கால கட்டத்திற்கு GST செலுத்த தேவையில்லை.
6. மாதந்தோறும், மண்டல மருத்துவ அலுவலர்கள் மூலம் சம்பந்தப்பட்ட மருத்துவ அலுவலர்களிடம் இருந்து வருகை பதிவேடு பெற்று அதற்கான தொகையினை சம்பந்தபட்ட மருத்துவ அலுவலர்களின் வங்கி கணக்கிற்கு(PWS Account) செலுத்தவும்,இப்பணியினை திட்ட மேலாண்மை அலகின் மூலம் (CPMU) மேற்கொள்ளவும்,
7. இதற்கான செலவினம் தேசிய நகர்ப்புற சுகாதாரத்திட்டத்தில் Human Resources- Salary for Staff Nurse க்கென வழங்கப்பட்ட தொகையில் (FMR Code U.8.1.2.1) மேற்கொள்ளவும்,
8. இது தொடர்பாக அரசின் பின்னேற்பு ஆணை பெறவும்,

மேற்கண்ட, 1 முதல் 8 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி-நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 10.05.2019 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**“brééa®gâ CÂa« tH§f, 1 முதல் 8 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி-நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது”.**

*****

**பது.நக.எண்.A7/RL/WDCN03/01674/2019**

**தீர்மான எண்.257/2019** **நாள்: 18-05-2019**

**தானப்பத்திரம்**

திரு. Shanmuga Durai மற்றும் திரு L. Kalisamy அவர்கள் அமிர்தம்மாள் நகர், S.No.943/6 part, T.S.No.13, Block No.34 & S.No.875, மாதவரம் கிராமத்தில் அமைந்துள்ள நிலத்திற்கு மனைப்பிரிவு வரன்முறைப்படுத்த வேண்டி சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தில் CMDA/L/0013963/2017, நாள்.27.03.2018ன்படி விண்ணப்பம் பதிவு செய்துள்ளார்.

உறுப்பினர்-செயலர், சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் அவர்களின் 14.02.2019 நாளிட்ட கடிதத்தில், மனைப்பிரிவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள சாலை மற்றும் திறந்தவெளி ஒதுக்கீட்டு நிலங்களை தானப்பத்திரம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி வசம் ஒப்படைக்க மனுதாரர்கள் திரு. Shanmuga Durai மற்றும் திரு L. Kalisamy அவர்களை அறிவுறுத்துமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

மனுதாரர்கள் திரு. Shanmuga Durai மற்றும் திரு L. Kalisamy அவர்கள் வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளவாறு சாலை மற்றும் திறந்தவெளி ஒதுக்கீட்டு நிலங்களை தானப்பத்திரம் மூலம் ஒப்படைக்க இசைவு தெரிவித்து தானப்பத்திரம் அளித்துள்ளார்.

மனைப்பிரிவின் மொத்த பரப்பளவு 85750.00 சதுர அடி ஆகும். அதில் சாலைக்கென ஒதுக்கப்பட்ட நிலம் 23556.00 சதுர அடி மற்றும் திறந்தவெளி ஒதுக்கீடு 1390.00 சதுர அடி ஆகும்.

திரு. Shanmuga Durai மற்றும் திரு L. Kalisamy அவர்களிடமிருந்து தானப்பத்திரம் மூலம் சாலை மற்றும் திறந்தவெளி ஒதுக்கீட்டு நிலங்களை பெருநகர சென்னை மாநகராட்சி வசம் எடுத்துக் கொள்ளலாம் என கருதப்படுகிறது.

எனவே,

(1) அமிர்தம்மாள் நகர், S.No.943/6 part, T.S.No.13, Block No.34 & S.No.875, மாதவரம் கிராமத்தில் அமைந்துள்ள நிலத்தில் மனைப்பிரிவு வரன்முறைப்படுத்த வேண்டி சாலைக்கென ஒதுக்கப்பட்டுள்ள 23556.00 சதுர அடி மற்றும் திறந்தவெளி ஒதுக்கீட்டு நிலம் 1390.00 சதுர அடி அகியவற்றை உரிமையாளர்கள் திரு. Shanmuga Durai மற்றும் திரு L. Kalisamy அவர்களிடமிருந்து தானப்பத்திரம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி பெற்றுக் கொள்வதற்கும்,

(2) சாலை மற்றும் தெரு விளக்கு ஆகியவற்றை தானமாக வழங்கப்படும் சாலைப்பகுதியில் அமைக்க தேவையான தொகை ரூ.28,30,000/- (ரூபாய் இருபத்தி எட்டு லட்சத்து முப்பதாயிரம் மட்டும்) ஆணையர், பெருநகர சென்னை மாநகராட்சி என்கின்ற பெயரில் வரைவு காசோலையாக வசூலிக்கவும்,

மேற்கண்ட, 1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு சிறப்பு அதிகாரி-நிலைக்குழு(நகரமைப்பு) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 10.05.2019 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**"1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு சிறப்பு அதிகாரி-நிலைக்குழு(நகரமைப்பு) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".**

*********

**ப.து.ந.க.எண்.RL/WDCN15/1867/2018**

**தீர்மான எண்.*258/2019*** **நாள்: *18-05-2019***

## தானப்பத்திரம்

திரு. *S.* பழனி கௌத்தம் அவர்கள் சர்வே எண்.365/2B செம்மஞ்சேரி கிராமத்தில் அமைந்துள்ள நிலத்திற்கு மனைப்பிரிவு வரன்முறைப்படுத்த அனுமதி வேண்டி சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தில் CMDA/L/0010620/2017, நாள்.05.01.2018ன்படி விண்ணப்பம் பதிவு செய்துள்ளார்.

உறுப்பினர்-செயலர், சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம் அவர்களின் *26.02.2019* நாளிட்ட கடிதத்தில் மனைப்பிரிவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள சாலை மற்றும் திறந்தவெளி ஒதுக்கீட்டு நிலங்களை தானப்பத்திரம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி வசம் ஒப்படைக்க மனுதாரர் திரு. *S.* பழனி கௌத்தம் அவர்களை அறிவுறுத்துமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

மனுதாரர் திரு. *S.*பழனி கௌதம் அவர்கள் வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளவாறு சாலை மற்றும் திறந்தவெளி ஒதுக்கீட்டு நிலங்களை தானப்பத்திரம் மூலம் ஒப்படைக்க இசைவு தெரிவித்து தானப்பத்திரம் அளித்துள்ளார்.

மனைப்பிரிவின் மொத்த பரப்பளவு 88805.00 சதுர அடி ஆகும். அதில் சாலைக்கென ஒதுக்கப்பட்ட நிலம் 5041.00 சதுர அடி மற்றும் திறந்தவெளி ஒதுக்கீட்டிற்கென 2210.72 சதுர அடி ஒதுக்கப்பட்டுள்ளது.

எனவே, திரு. *S.* பழனி கௌதம் அவர்களிடமிருந்து தானப்பத்திரம் மூலம் சாலை மற்றும் திறந்தவெளி ஒதுக்கீட்டு நிலங்களை பெருநகர சென்னை மாநகராட்சி வசம் எடுத்துக் கொள்ளலாம் என கருதப்படுகிறது.

எனவே, சர்வே எண்.365/2B செம்மஞ்சேரி கிராமத்தில் அமைந்துள்ள நிலத்தில் மனைப்பிரிவு வரன்முறைப்படுத்த வேண்டி விண்ணப்பிக்கப்பட்டுள்ள வரைபடத்தில் சாலைக்கென ஒதுக்கப்பட்டுள்ள 5041.00 சதுர அடி மற்றும் திறந்தவெளி ஒதுக்கீட்டு நிலம் 2210.72 சதுர அடி ஆகியவற்றை மனை உரிமையாளர் திரு. *S.* பழனி கௌதம் அவர்களிடமிருந்து தானப்பத்திரம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி பெற்றுக் கொள்வதற்கு, சிறப்பு அதிகாரி-நிலைக்குழு(நகரமைப்பு) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது *10.05.2019* நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**"தானப்பத்திரத்துக்கு சிறப்பு அதிகாரி-நிலைக்குழு(நகரமைப்பு) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".**

*********

**பது.நக.எண். D1/SD/WDCN07/00032/2019**

**தீர்மான எண்.*259/2019*** **நாள்: *18-05-2019***

## தானப்பத்திரம்

உறுப்பினர் – செயலர், சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் அவர்கள் *08.01.2019* நாளிட்ட கடிதத்தில் Old S.No.235/2 part & 3 part, 236/1 part, 2 & 3A part, present T.S.No.2 part & 3 part, Ward–I, Block No.68 of Padikuppam Village குடியிருப்பிற்கான மனைப்பிரிவு செய்ய வேண்டி திட்ட அனுமதி விண்ணப்பம் M/s. VGN Homes Private Limted, PoA on behalf of M/s. Gurusamy Naidu & Company Private Limited சமர்ப்பித்துள்ளதாகவும், அதனை கூர்ந்தாய்வு செய்து வளர்ச்சி விதிமுறைகளுக்கு உட்பட்டு திருத்தம் செய்யப்பட்டு, விண்ணபதாரர் வளர்ச்சி கட்டணம், கூர்ந்தாய்வு கட்டணம் மற்றும் இதர கட்டணங்களை செலுத்தியுள்ளதாக தெரிவித்துள்ளார்.

மனைப்பிரிவில் காட்டப்பட்டுள்ள சாலை மற்றும் திறந்தவெளி பகுதிகள் சம்மந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளிடம் தானப்பத்திரம் மூலம் வழங்க வேண்டும் என்று அரசாணை எண்.654, வீட்டு வசதி மற்றும் ஊரக வளர்ச்சி துறை நாள்.21.08.1984ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, இம்மனைப்பிரிவில் சாலைக்காக ஒதுக்கப்பட்டுள்ள நிலங்களை தானப்பத்திரம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி வசம் ஒப்படைக்கப்பட வேண்டும்.

M/s. VGN Homes Private Limted, PoA on behalf of M/s. Gurusamy Naidu & Company Private Limited மனைப்பிரிவில் ஒதுக்கப்பட்டுள்ள சாலை மற்றும் திறந்த வெளி பகுதிகளை தானப்பத்திரம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு ஒப்புடைக்க இசைவு தெரிவித்து தானப்பத்திரம் அளித்துள்ளார்.

M/s. VGN Homes Private Limted, PoA on behalf of M/s. Gurusamy Naidu & Company Private Limited அவர்கள் மனைப்பிரிவு வேண்டி சமர்ப்பித்த வரைபடத்தில் மொத்த பரப்பளவு 26770.00 சதுர மீட்டர், அவற்றில் சாலைக்கென 7940.00 சதுர மீட்டரும், திறந்தவெளி பகுதியாக (பூங்காவிற்கு) 1910.00 சதுர மீட்டர் பரப்பளவு ஒதுக்கப்பட வேண்டும் என்று சென்னை பெருநகர வளர்சச்சிக் குழுமத்தால் வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளது.

இந்த நிலங்களை பெருநகர சென்னை மாநகராட்சி எடுத்துக் கொள்ளலாம் என்று கருதப்படுகின்றது. ஆதலால் M/s. VGN Homes Private Limted, PoA on behalf of M/s. Gurusamy Naidu & Company Private Limitedயிடமிருந்து தானப்பத்திரம் மூலம் பெற்றுக் கொள்வதற்கு ஆணை வேண்டப்படுகின்றது.

மனைப்பிரிவில் ஒதுக்கப்பட்டுள்ள சாலை பகுதிகளில் சாலைகள் அமைக்க ஆகும் செலவினம் விண்ணபதாரரிடம் இருந்து வசூலிக்கப்பட வேண்டும். சாலை மற்றும் தெரு விளக்கு ஆகியவை அமைக்க ஆகும் செலவினம் ரூபாய் 1,40,72,000/-

எனவே,

(1) Old S.No.235/2 part & 3 part, 236/1 part, 2 & 3A part, present T.S.No.2 part & 3 part, Ward – I, Block No.68 of Padikuppam Village என்கின்ற இடத்தில், சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்தால் மனைப்பிரிவு வரைபடத்தில் 7940 சதுர மீட்டர் நிலத்தை சாலைக்கெனவும், 1910 சதுர மீட்டர் நிலத்தை திறந்தவெளி பகுதியாகவும் (பூங்காவிற்கென) ஒதுக்கப்பட்டுள்ளதை திரு M/s. VGN Homes Private Limited, PoA on behalf of M/s. Gurusamy Naidu & Company Private Limited யிடமிருந்து தானப்பத்திரம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி பெற்றுக் கொள்வதற்கும்,

**ப.து.ந.க.எண். D1/SD/WDCN07/00032/2019**

(2) சாலைக்கென ஒதுக்கப்பட்டுள்ள இடத்தில் சாலை பணி மழைநீர் வடிகால் மற்றும் தெரு விளக்கு அமைக்கும் பணியினை பெருநகர சென்னை மாநகராட்சி மூலம் மேற்கொள்ள M/s. VGN Homes Private Limited, PoA on behalf of M/s. Gurusamy Naidu & Company Private Limited அவர்களிடம் அதற்கான கட்டணமாக ரூ. 1,40,72,000/- யை காசோலையாக வசூலிப்பதற்கும்,

மேற்கண்ட *1* மற்றும் *2* ஆகிய இனங்களுக்கு சிறப்பு அதிகாரி-நிலைக்குழு(நகரமைப்பு) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது *10.05.2019* நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**"*1* மற்றும் *2* ஆகிய இனங்களுக்கு சிறப்பு அதிகாரி-நிலைக்குழு(நகரமைப்பு) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".**

*****

**பது.நக.எண். D1/SD/WDCN10/136/2019**

**தீர்மான எண்.*260/2019*** **நாள்: *18-05-2019***

## தானப்பத்திரம்

மண்டலம்-10, கோட்டம்-135ல், M/s. Rathnam Heights Rep by its Partner Thiru. Manikandan Sivaraj அவர்கள் பழைய கதவு எண்.192, புதிய கதவு எண்.6, லேக் வியூ சாலை, மேற்கு மாம்லம், சென்னை – 600033 நகர புல எண்.12, Block No.55, புலியூர் கிராமத்தில் அமைந்துள்ள இடத்திற்கு மனைஉட்பிரிவு வேண்டி பெருநகர சென்னை மாநகராட்சியில் SD/WDCN10/00136/2019 நாள்.14.03.2019ன்படி விண்ணப்பித்துள்ளார்கள். மனை உட்பிரிவு வேண்டி விண்ணப்பித்த இடத்திற்கு அணுகு சாலையாக லேக் வியூ சாலை உள்ளது, இரண்டாம் முழுமைத் திட்டத்தின்படி லேக் வியூ சாலை 18.00 மீ அகல சாலையாக விரிவாக்கம் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தின் விதிகளின்படி, சாலை விரிவாக்கத்திற்கான நிலத்தினை தானப் பத்திரம் மூலம் உள்ளாட்சி அமைப்புகளிடம் விண்ணப்பதாரர் ஒப்படைத்த பிறகு தான் திட்ட அனுமதி வழங்க இயலும். ஆகவே விண்ணப்பதாரர் சாலை விரிவாக்கம் செய்ய தேவையான 46.25 ச.மீ நிலத்தினை பெருநகர சென்னை மாநகராட்சிக்கு தானப்பத்திரம் மூலம் வழங்க இசைவு தெரிவித்துள்ளார்.

ஆவணங்களை கூர்ந்தாய்வு செய்யப்பட்டதில் விண்ணப்பதாரர் மனையினை அபிருத்தி செய்ய உரிமை உள்ளவராக அறியப்படுகிறார். மேலும் இணைக்கப்பட்டுள்ள மனைஉட்பிரிவு வரைபடம் *Tamil Nadu Combined Development & Building Rules, 2019* –ன் படி அமைந்துள்ளது. எனவே, பெருநகர சென்னை மாநகராட்சிக்கு ஒப்படைக்கபடவுள்ள நிலத்தை தானமாக பெற்றுக் கொள்ளலாம் என கருதப்படுகிறது.

எனவே,

(1) விண்ணப்பதாரர் M/s. Rathnam Heights Rep by its Partner Thiru. Manikandan Sivaraj அவர்களிடம் இருந்து பழைய கதவு எண்.192, புதிய கதவு எண்.6, லேக் வியூ சாலை, மேற்கு மாம்லம், சென்னை – 600033, நகர புல எண்.12, Block No.55, புலியூர் கிராமம் என்ற இடத்தில் அமைந்துள்ள மனையில் சாலை விரிவாக்கம் செய்ய தானப்பத்திரம் மூலம் 46.25ச.மீ நிலத்தினை பெருநகர சென்னை மாநகராட்சிக்கு தானமாக பெற்றுக் கொள்ளவும்,

(2) தானமாக வழங்கப்பட்ட பகுதியில் சாலை விரிவாக்கப் பணிகளை மேற்கொள்ள செலவாகும் தொகை ரூ. 84,000/- ஐ (ரூபாய் எண்பத்தி நான்காயிரம் மட்டும்) விண்ணப்பதாரரிடம் இருந்து ஆணையர், பெருநகர சென்னை மாநகராட்சி என்கின்ற பெயரில் வரைவு காசோலையாக பெறவும்,

மேற்கண்ட 1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு சிறப்பு அதிகாரி-நிலைக்குழு(நகரமைப்பு) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 10.05.2019 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**"*1* மற்றும் *2* ஆகிய இனங்களுக்கு சிறப்பு அதிகாரி-நிலைக்குழு(நகரமைப்பு) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".**

*****

**பொ.து. சு.து.கா.பி.ந.க.எண்.அ1/ 0141 /2019**

**தீர்மான எண்.261/2019** **நாள்: 18-05-2019**

**பொது சுகாதாரத்துறை - கால்நடை மருத்துவப்பிரிவின் கீழ் இயங்கும் மூன்று நாய் இனக்கட்டுப்பாடு மையங்களுக்கு கொண்டு வரப்படும் தெரு நாய்களை பராமரித்தல் மற்றும் அறுவை சிகிச்சை பணிக்கு உதவி புரிதல் போன்ற பணிகளை மேற்கொள்வதற்கு 9 தற்காலிக தொழிலாளிகள் தனியார் நிறுவனம் மூலம் ஒப்பந்த முறையில் நியமிக்கப்பட்டு பணிபுரிந்து வருகிறார்கள் - தற்போது கூடுதலாக 12 தற்காலிக தொழிலாளிகள் தேவைப்படுவதால் - கூடுதலாக 12 தற்காலிக தொழிலாளிகள் தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கத்தில் (NULM) குழுக்கள் அமைத்து அதன் மூலம் பணியமர்த்த அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, பொது சுகாதாரத்துறை, கால்நடை மருத்துவப்பிரிவின் கீழ் இயங்கும் பேசின் பாலம், லாயிட்ஸ் காலனி மற்றும் கண்ணம்மாபேட்டை ஆகிய மூன்று இடங்களில் உள்ள நாய் இனக்கட்டுப்பாடு மையங்களில் தெரு நாய்களை பராமரிக்க மற்றும் அறுவை சிகிச்சை பணிக்கு உதவி புரிதல் போன்ற பணிகளை மேற்கொள்வதற்கு M/s.JR Agency என்ற தனியார் நிறுவம் மூலமாக 9 தற்காலிக தொழிலாளிகள் நியமிக்க துணை ஆணையர் (சுகாதாரம்) அவர்களின் 31/08/2018 நாளிட்ட ஆணை பெறப்பட்டு பணிபுரிந்து வருகிறார்கள்..

மேற்கூறிய மூன்று நாய் இனக்கட்டுப்பாடு மையங்களில் இரவு நேரங்களில் தெரு நாய்களை பராமரிக்கவும் மற்றும் பேசின் பாலம் நாய் இனக்கட்டுப்பாடு மையத்தில் உள்ள தோல் நோயால் பாதிக்கப்பட்ட தெரு நாய்களை பராமரிக்கவும் மற்றும் தெரு நாய்கள் குறித்த சிறப்பு புகார்களை கவனிக்க பயன்படுத்தப்படவுள்ள நாய் வண்டியில் நாய் பிடிக்கும் பணிக்காகவும் தேவைப்படும் 10 தற்காலிக தொழிலாளர்களை தனியார் நிறுவனங்கள் மூலம் ஓராண்டு காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் மின்னணு ஒப்பம் (e-Tender) கோரி பணியாளர்களை பணியமர்த்த ஆணையர் அவர்களின் 18.02.2019 நாளிட்ட ஆணை பெறப்பட்டது.

அதன்படி மின்னணு ஒப்பம் கோரபட்டு 08.03.2019 அன்று திறக்கப்பட்டதில் ஒப்பந்தத்தில் எவரும் கலந்து கொள்ளவில்லை என்பதால் இது குறித்து துணை ஆணையர் (சுகாதாரம்) அவர்களுக்கு குறிப்பு சமர்ப்பிக்கப்பட்டதில், 13.03.2019 நாளிட்ட மேற்குறிப்பில் கால்நடை மருத்துவப்பிரிவிற்கு தேவைப்படும் தற்காலிக பணியாளர்களை தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தில் குழுக்கள் அமைத்து பணியமர்த்திடுமாறு அறிவுரை பெறப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சி, பொது சுகாதாரத்துறையின் (கால்நடை மருத்துவப்பிரிவு) கீழ் இயங்கும் லாயிட்ஸ் காலனி, கண்ணம்மாப்பேட்டை மற்றும் பேசின் பாலம் நாய் இனக்கட்டுப்பாடு மையங்களில் தனியார் நிறுவனம் மூலமாக ஒரு மையத்திற்கு 3 தற்காலிக தொழிலாளர்கள் 3 மையங்களுக்கு 9 தற்காலிக தொழிலாளர்கள் பணிபுரிந்து வருகிறார்கள். மேலும், தற்போது லாயிட்ஸ் காலனி, கண்ணம்மாப்பேட்டை மற்றும் பேசின் பாலம் ஆகிய மூன்று நாய் இனக்கட்டுப்பாடு மையங்களில் இரவு நேரங்களில் தெரு நாய்களை பராமரிக்க மையம் ஒன்றிற்கு ஒரு தற்காலிக தொழிலாளி வீதம் மூன்று மையங்களுக்கு மூன்று தொழிலாளிகள் தேவைப்படுகிறது. மேலும், பேசின் பாலம் நாய் இனக்கட்டுப்பாடு மையத்தில் உள்ள தோல் நோயினால் பாதிக்கப்பட்டுள்ள 200-க்கும் மேற்பட்ட தெரு நாய்களை பராமரிக்க 3 தற்காலிக பணியாளர்கள் தேவைப்படுகிறது மற்றும் அரசு அலுவலகங்கள், அரசு மருத்துவமனைகள், கடற்கரை, பூங்காக்கள் மற்றும் முக்கிய பிரமுகர்கள் ஆகியோரிடமிருந்து தெரு நாய் குறித்த புகார்கள் வந்த வண்ணம் உள்ளதால் அப்புகார்களின் மீது தனி கவனம் செலுத்த TN04 AR 8457 என்ற எண் கொண்ட நாய் பிடிக்கும் வாகனம் பயன்படுத்தப்படவுள்ளது. இவ்வண்டியில் நாய் பிடிக்கும் பணியில் ஈடுபட 4 நாய் பிடிக்கும் தற்காலிக தொழிலாளிகள் நியமிப்பது மிகவும் அவசியமாகிறது. மேலும் 'டி' மற்றும் 'ஜி' மாட்டுத் தொழுவங்களில் உள்ள மாடுகளை பராமரிப்பதற்கு கூடுதலாக 2 தற்காலிக பணியாளர்களும் தேவைப்படுகிறார்கள்.

**பொ.து. சு.து.கா.பி.ந.க.எண்.அ1/ 0141 /2019**

| வ. எண். | பணியாளர்கள் தேவைப்படும் இடம் | தற்போது தனியார் நிறுவனம் மூலமாக பணிபுரியும் தற்காலிக பணியாளர்களின் எண்ணிக்கை | தேவைப்படும் கூடுதல் தற்காலிக பணியாளர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 01. | பேசின் பாலம், லாயிட்ஸ் காலனி மற்றும் கண்ணம்மாபேட்டை ஆகிய மூன்று நாய் இனக்கட்டுப்பாடு மையங்களில் இரவு நேரங்களில் தெரு நாய்களை பராமரிக்க தேவைப்படும் தற்காலிக பணியாளர்கள் | 9 | 3 |
| 02. | பேசின் பாலம் நாய் இனக்கட்டுப்பாடு மையத்தில் தோல் நோயால் பாதிக்கப்பட்டுள்ள 200-க்கும் மேற்பட்ட தெரு நாய்களை பராமரிக்க தேவைப்படும் தற்காலிக பணியாளர்கள் | - | 3 |
| 03. | புகார்களுக்காக பிரத்யேகமாக பயன்படுத்தப்படவுள்ள நாய் வண்டிக்கு தேவைப்படும் தற்காலிக பணியாளர்கள் | - | 4 |
| 04. | 'டி' மற்றும் 'ஜி' மாட்டுத் தொழுவங்களில் உள்ள மாடுகளை பராமரிக்க கூடுதலாக தேவைப்படும் தற்காலிக பணியாளர்கள் | | 2 |
| **மொத்தம்** | | **9** | **12** |

சென்னை மாவட்ட ஆட்சியர் அவர்களின் 16.05.2018 நாளிட்ட செயல்முறை ஆணையில், பணியாளர்களுக்கு குறைந்தபட்ச தினக்கூலி நிர்ணயம் செய்யப்பட்டதில் உதவியாளர்கள் என்ற பணியில் நாள் ஒன்றிற்கு ரூ394/- என நிர்ணயம் செய்யப்பட்டு கீழ்கண்டவாறு மதிப்பீடு கணக்கிடப்பட்டுள்ளது.

| வ. எண். | பணியாளர் தேவைப்படும் இடம் | ஒப்பந்த தொழிலாளர்கள் | தினக்கூலி | மொத்த நாட்கள் | மதிப்பீடு (ரூபாய்) |
|---|---|---|---|---|---|
| 1. | பேசின் பாலம் நாய் இனக்கட்டுப்பாடு மையம், மண்டலம்-6<br>லாயிட்ஸ் காலனி நாய் இனக்கட்டுப்பாடு மையம், மண்டலம்-9<br>கண்ணம்மாபேட்டை நாய் இனக்கட்டுப்பாடு மையம், மண்டலம்-10 | 3 | 394/. | 365 | ரூ.4,31,430/- |
| 2. | பேசின் பாலம் நாய் இனக்கட்டுப்பாடு மையம் (Mange dogs campus) | 3 | 394/. | 365 | ரூ.4,31,430/- |
| 3. | கால்நடை மருத்துவப்பிரிவு (தலைமையிடம்) | 4 | 394/. | 365 | ரூ.5,75,240/- |
| 4. | டி' மற்றும் 'ஜி' மாட்டுத் தொழுவம் | 2 | 394/. | 365 | ரூ.2,87,620/. |
| மொத்தம் | | 12 | | | ரூ.17,25,720/- |

எனவே, பொது சுகாதாரத்துறையின் (கால்நடை மருத்துவப்பிரிவு) கீழ் இயங்கும் பேசின் பாலம், லாயிட்ஸ் காலனி மற்றும் கண்ணம்மாபேட்டை ஆகிய மூன்று நாய் இனக்கட்டுப்பாடு

<u>பொ.து. சு.து.கா.பி.ந.க.எண்.அ1/ 0141 /2019</u>

மையங்களில் இரவு நேரங்களில் தெரு நாய்களை பராமரிக்கவும், பேசின் பாலம் நாய் இனக்கட்டுப்பாடு மையத்தில் தோல் நோயால் பாதிக்கப்பட்டுள்ள 200-க்கும் மேற்பட்ட தெரு நாய்களை பராமரிக்க மற்றும் புகார்களுக்காக பிரத்யேகமாக பயன்படுத்தப்படவுள்ள நாய் பிடிக்கும் வாகனத்தில் பணியாற்றவும், 'டி' மற்றும் 'ஜி' மாட்டுத் தொழுவங்களில் பணிபுரியவும் கூடுதலாக தேவைப்படும் 12 தற்காலிக தொழிலாளர்களை தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தில் (National Urban Livelihood Mission - NULM) குழுக்கள் அமைத்து அதன் மூலம் தொழிலாளர்களை பணியமர்த்தவும் மற்றும் கீழ்கண்ட இனங்களுக்கும் சிறப்பு அதிகாரி /மன்றத்தின் ஆணை வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

எனவே,

1. கால்நடை மருத்துவப்பிரிவின் கீழ் இயங்கும் லாயிட்ஸ் காலனி, கண்ணம்மாப்பேட்டை மற்றும் பேசின் பாலம் நாய் இனக்கட்டுப்பாடு மையங்களில் தற்போது தனியார் நிறுவனம் மூலமாக பணிபுரிந்து வரும் 9 தற்காலிக தொழிலாளர்களின் ஒப்பந்த பணிக்காலம் 02/09/2019 அன்றுடன் முடிவடைந்த பின்னர் தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தில் (National Urban Livelihood Mission - NULM) குழுக்கள் அமைத்து அதன் மூலம் 9 தொழிலாளர்களை பணியமர்த்தவும்,
2. மேற்கண்ட பணிக்காக தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் (NULM) மூலம் குழு அமைத்து தொழிலாளர்களின் ஊதியத்தை 365 நாட்களுக்கு சென்னை மாவட்ட ஆட்சியர் அவர்களால் நிர்ணயிக்கப்பட்ட தினக்கூலி ரூ.394/-ஐ வழங்குவதற்கு நிர்வாக அனுமதியும்,
3. தற்பொழுது மேற்கண்ட பணியில் ஈடுபட்டு வரும் தொழிலாளர்களை தவிர, புதிய நபர்களை பணியில் ஈடுபடுத்த துணை ஆணையர்(சுகாதாரம்) அவர்களின் ஒப்புதல் பெறவும்,
4. மேற்கண்ட பணியில் ஈடுபட்டு வரும் தொழிலாளர்கள் தொடர்ந்து பணிக்கு வர தவறும் பட்சத்தில் அன்னாரை நீக்கம் செய்வதற்கும் அவருக்கு பதிலாக வேறு நபரை கால்நடை மருத்துவ அலுவலர் அவர்களின் அனுமதியுடன் பணியில் ஈடுபடுத்துவதற்கும்,
5. தற்காலிக பணியாளர்கள் பணி செய்த நாட்களுக்கு சம்பந்தப்பட்ட கால்நடை உதவி மருத்துவர் அவர்களிடமிருந்து வருகை சான்றொப்பம் பெற்று அதன் அடிப்படையில் ஊதியம் கணக்கிட்டு வழங்கவும்,
6. இப்பணிக்காக செலவீன தொகையை பொது சுகாதாரத்துறை, கால்நடை மருத்துவப்பிரிவில் பிரிவு குறியீடு எண்.40-43-02 கணக்கு குறியீட்டு எண்.210-20-07-03 (Intensive Work and Other) – என்ற கணக்கு தலைப்பில் மேற்கொள்ளவும்.

மேற்கண்ட 1 முதல் 6 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி-நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 16.05.2019 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**"NULMgâ 12 j‰fhèfgâ ahs®fŸgâ mk®¤j, 1 முதல் 6 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி-நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".**

*****

**பொ.து.ந.க.எண்.இ11/13402/2019**

**தீர்மான எண்.262 /2019** **நாள்: 21-05-2019**

**பொதுத்துறை-பணியமைப்பு - பெருநகர சென்னை மாநகராட்சி - நான்காம் நிலைப் பணியாளர் திரு.ஜி.வெங்கடேசன், அலுவலக உதவியாளர், பணி எண்.134022 என்பவர் 22.05.2019 அன்று பிற்பகல் முதல் தன்விருப்ப ஓய்வில் செல்ல அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, மத்திய வட்டார அலுவலகம் வருவாய்துறையில் அலுவலக உதவியாளராக பணிபுரிந்து வரும் திரு.ஜி.வெங்கடேசன், பணியாளர் எண்.134022 அவர்கள் சென்னை மாநகராட்சி மாவட்ட தேர்தல் அலுவலகத்தில் 22.10.1983 முதல் அலுவலக உதவியாளராக பணிபுரிந்து வரும், தனியர் தனது 56 வயது கடந்த நிலையில் உடல்நலம் பாதிப்பு ஏற்பட்டதால், குடும்ப சூழ்நிலை காரணமாக தன் விருப்ப ஓய்வில் செல்ல அனுமதிக்குமாறு சிறப்பு அதிகாரி/மன்றம் அவர்களுக்கு 22.02.2019 அன்று மனு அளித்துள்ளார்.

மேற்காணும் தனியரின் பணிப்பதிவேட்டினை ஆய்வு செய்ததில், திரு.ஜி.வெங்கடேசன், அலுவலக உதவியாளர் அவர்கள் பெருநகர சென்னை மாநகராட்சியில் 22.10.1983 அன்று முதல் பணியில் சேர்ந்து அலுவலக உதவியாளராக 36 ஆண்டுக்கு மேலாக பணிபுரிந்து வரும் தனியருக்கு அப்பதவியில் தகுதிகாண் பருவம் மற்றும் பணிவரன்முறை முடித்ததாகவும் ஆணை வழங்கப்பட்டுள்ளது.

செயலாளர், பெருநகர சென்னை மாநகராட்சி சிப்பந்திகள் கூட்டுறவு சங்கம் அவர்களின் 15.03..2019 நாளிட்ட கடிதத்தில், தனியர் பெருநகர சென்னை மாநகராட்சி சிப்பந்திகள் கூட்டுறவு சங்கத்தில் உறுப்பினர் இல்லை எனவும், நிலுவை தொகை ஏதும் இல்லை என கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காவல்துறை துணை கண்காணிப்பாளர்/விழிப்பு அலுவலர் அவர்களின் 19.03.2019 நாளிட்ட கடிதத்தில், தனியரின் மீது விசாரணை ஏதும் இன்றைய தேதியில் நிலுவையில் இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இயக்குநர், லஞ்ச ஒழிப்பு மற்றும் ஊழல் தடுப்பு அவர்களின் 08.05.2019 நாளிட்ட கடிதத்தில், தனியர் மீது விசாரணை ஏதும் நிலுவையில் இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

வட்டார துணை ஆணையர் (மத்தியம்) அவர்களின் 16.05.2019 நாளிட்ட குறிப்பில், திரு.ஜி.வெங்கடேசன், அலுவலக உதவியாளர் அவர்கள் மீது துறை ரீதியாக குற்றச்சாட்டுகள் நிலுவையில் இல்லை எனவும், தன்விருப்ப ஓய்வில் செல்ல மூன்று மாத அறிவிப்பு காலத்தில் சம்பளமில்லா விடுப்பு ஏதும் துய்க்கவில்லை என மண்டல அலுவலர், மண்டலம்-9 அவர்களால் 15.05.2019 நாளிட்ட குறிப்பில் தெரிவித்துள்ளதால், தனியரை 22.05.2019 அன்று பிற்பகல் தன்விருப்ப ஓய்வில் செல்வதற்கு, ஆணையர் அவர்களின் அனுமதி வேண்டி கோப்பு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

திரு.ஜி.வெங்கடேசன், அலுவலக உதவியாளர், மண்டலம்-9 அவர்களின் பிறந்த தேதி 07.10.1963 என்பதால், தற்போது 56 வயது பூர்த்தி அடைந்துள்ளார். தனியர் ஓய்வு பெறும் நாள் 31.10.2023 ஆகும்.

எனவே, திரு.ஜி.வெங்கடேசன், அலுவலக உதவியாளர் (பணி எண்.134022) மண்டலம்-9 அவர்களின் 22.02.2019 நாளிட்ட தன்விருப்ப ஓய்வு கோரிய மனுவினை ஏற்கப்பட்டு, பெருநகர சென்னை மாநகராட்சிக்கு செலுத்த வேண்டிய நிலுவை தொகை, நிதி இழப்பீடு, தணிக்கை தடை மற்றும் நீண்டகால முன்பணம் நிலுவை இருப்பது பின்னர் தெரியவரின், தனியரின் ஓய்வூதிய பணிக்கொடையிலிருந்து பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைக்குட்பட்டு, தனியரை 22.05.2019 அன்று பிற்பகல் முதல் தன்விருப்ப ஓய்வில் செல்வதற்கு அனுமதிக்க, சிறப்பு அதிகாரி-மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 18.05.2019 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**"தன்விருப்ப ஓய்வில் செல்ல சிறப்பு அதிகாரி-மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".**

*********

கதுநக.எண்.அ4/10160/2018

தீர்மான எண்.263 /2019 நாள்: 21-05-2019

**பெருநகர சென்னை மாநகராட்சி - கல்வித்துறை - அலுவலர்கள், ஆசிரியர்கள் மற்றும் இதர பணியாளர்களுக்கு பொது வைப்பு நிதி கணக்கிலிருந்து முன்பணம்/இறுதிதொகை பெற ஒப்பளிப்பு வழங்கும் அதிகாரிகள் - அதிகாரம் பகிர்ந்தளிப்பு ஆணை (Delegation of Powers to the Sanctioning Authority)**

அரசாணை நிலை எண்:214-ல், பள்ளி கல்வித்துறை இஇ3/2/ நாள் 19.10.17, பெருநகர சென்னை மாநகராட்சி பள்ளியில் பணிபுரியும் அலுவலர்கள், ஆசிரியர்கள் மற்றும் இதர பணியாளர்கள் பொது வைப்பு நிதி கணக்கு மற்றும் இருப்புத்தொகை பெருநகர சென்னை மாநகராட்சி கணக்கியிலிருந்து அரசு கணக்கிற்கு மாற்றி அவர்களுக்கு கணக்கு எண் வழங்கப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சி மன்றத் தீர்மானம் எண்.737/2018, 06.09.2018 நாளிட்ட மன்றத்தீர்மானத்தில் பெருநகர சென்னை மாநகராட்சி கல்வித்துறையின் கீழ் இயங்கும் பள்ளிகளில் பணிபுரியும் 2348 ஆசிரியர் மற்றும் இதர பணியாளர்கள் அவர்களின் பொது வைப்பு நிதி கணக்கு விவரங்கள் மற்றும் 31.03.2018 வரை பெருநகர சென்னை மாநகராட்சி இருப்பிலுள்ள தொகை ரூ.99,27,74,202/யை அரசு கணக்கிற்கு மாற்றம் செய்ய அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சி பள்ளிகளில் பணிபுரியும் அலுவலர்கள், ஆசிரியர்கள் மற்றும் இதர பணியாளர்களின் வருங்கால பொது வைப்பு நிதியிலிருந்து அவசர தேவைக்கான முன்பணம்/இறுதிதொகை பெற ஒப்பளிப்பு வழங்கும் அதிகார பகிர்ந்தளிப்பு செயல் முறை ஆணை அதிகாரம் (Delegation of Powers to the Sanctioning Authority) பற்றிய விபரங்கள் கீழ்க்கண்டவாறு விவரிக்கப்படுகிறது.

| பொது வைப்பு நிதி முன்பணம் மற்றும் இறுதி தொகை Application for Advance / Part-Final Withdrawal from G.P.F | சென்னை தொடக்க / நடுநிலை பள்ளி தலைமை ஆசிரியர்/ ஆசிரியர்/ இதர பணியாளர் | சென்னை உயர்நிலை / மேல்நிலை பள்ளி ஆசிரியர்/ இதர பணியாளர் | சென்னை உயர்நிலை / மேல்நிலை பள்ளி தலைமை ஆசிரியர் | உதவி கல்வி அலுவலர் | கூடுதல் கல்வி அலுவலர் | கல்வி அலுவலர் |
|---|---|---|---|---|---|---|
| 50% | உதவி கல்வி அலுவலர் | தலைமை ஆசிரியர் | உதவி கல்வி அலுவலர் | கூடுதல் கல்வி அலுவலர் | கல்வி அலுவலர் | துணை ஆணையர் (கல்வி) |
| 75% | கூடுதல் கல்வி அலுவலர் | உதவி கல்வி அலுவலர் | கூடுதல் கல்வி அலுவலர் | கல்வி அலுவலர் | கல்வி அலுவலர் | துணை ஆணையர் (கல்வி) |
| 90% | கூடுதல் கல்வி அலுவலர் | கூடுதல் கல்வி அலுவலர் | கல்வி அலுவலர் | துணை ஆணையர் (கல்வி) | துணை ஆணையர் (கல்வி) | ஆணையர் |
| இறுதி தொகை | கல்வி அலுவலர் | கல்வி அலுவலர் | கல்வி அலுவலர் | துணை ஆணையர் (கல்வி) | துணை ஆணையர் (கல்வி) | ஆணையர் |

**க.து.ந.க.எண்.அ4/10160/2018**

பொது வைப்பு நிதி கணக்கிலிருந்து முன்பணம்/இறுதி தொகை வழங்கும் அதிகாரம் *(Sanctioning Authority)* அதிகார பகிர்ந்தளிப்பு ஆணை மேற்கண்ட அட்டவணையில் குறிப்பிட்டுள்ள அலுவலர்கள்/உயர் அதிகாரி அவர்களால் வழங்க சிறப்பு அதிகாரி-நிலைக்குழு(கல்வி), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது *17.05.2019* நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**"அதிகார பகிர்ந்தளிப்பு செய்ய சிறப்பு அதிகாரி-நிலைக்குழு(கல்வி), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".**

*****

**ப.து.ந.க.எண்.A7/RL/WDCN07/02169/2019**

**தீர்மான எண்.264/2019** **நாள்: 21-05-2019**

## தானப்பத்திரம்

மண்டலம்-7, கோட்டம்-83ல் திருமதி. Ammu Subashni அவர்கள் சர்வே எண்.631, பிளாக் எண்.16A, வார்டு-E, T.S.No.6/7 (S.No.63 part) கொரட்டூர் கிராமத்தில் அமைந்துள்ள நிலத்திற்கு மனைப்பிரிவு வரன்முறைப்படுத்த வேண்டி சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தில் விண்ணப்பம் பதிவு செய்துள்ளார்.

உறுப்பினர்-செயலர், சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம் அவர்களின் 18.02.2019 நாளிட்ட கடிதத்தில, மனைப்பிரிவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள சாலை மற்றும் திறந்தவெளி ஒதுக்கீட்டு நிலங்களை தானப்பத்திரம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி வசம் ஒப்படைக்க விண்ணப்பதாரர். திருமதி. Ammu Subashni அவர்களை அறிவுறுத்துமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

விண்ணப்பதாரர் திருமதி. Ammu Subashni அவர்கள் வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளவாறு சாலை மற்றும் திறந்தவெளி ஒதுக்கீட்டு நிலங்களை தானப்பத்திரம் மூலம் ஒப்படைக்க இசைவு தெரிவித்து தானப்பத்திரம் அளித்துள்ளார்.

மனைப்பிரிவின் மொத்த பரப்பளவு 39195.00 சதுர அடி ஆகும். அதில் சாலைக்காக ஒதுக்கப்பட்ட நிலம் 7633.00 சதுர அடி மற்றும் திறந்தவெளி ஒதுக்கீடு 1922.00 சதுர அடி ஆகும்.

திருமதி. Ammu Subashni அவர்களிடமிருந்து தானப்பத்திரம் மூலம் சாலை மற்றும் திறந்தவெளி ஒதுக்கீட்டு நிலங்களை பெருநகர சென்னை மாநகராட்சி வசம் எடுத்துக் கொள்ளலாம் என கருதப்படுகிறது.

எனவே,

(1) T.S.No.6/7, Block No.16A, (S.No.63 part) கொரட்டூர் கிராமத்தில் அமைந்துள்ள நிலத்தில் மனைப்பிரிவு வரன்முறைப்படுத்த வேண்டி வரைபடத்தில் சாலைக்கென ஒதுக்கப்பட்டுள்ள 7633.00 சதுர அடி மற்றும் திறந்தவெளி ஒதுக்கீட்டு நிலம் 1922.00 சதுர அடி அகியவற்றை உரிமையாளர் திருமதி. Ammu Subashni அவர்களிடமிருந்து தானப்பத்திரம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி பெற்றுக் கொள்வதற்கும்,

(2) சாலைக்காக ஒதுக்கப்பட்டுள்ள நிலத்தில் சாலைகள் மற்றும் தெரு விளக்குகள் அமைக்க தேவையான தொகை ரூ.13,80,000/- (பதிமூன்று லட்சத்து எண்பதாயிரம் மட்டும்)"ஆணையர், பெருநகர சென்னை மாநகராட்சி" என்ற பெயரில் வரைவு காசோலையாக வசூலிப்பதற்கும்..

மேற்கண்ட, 1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு சிறப்பு அதிகாரி-நிலைக்குழு(நகரமைப்பு) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 19.05.2019 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**"1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு சிறப்பு அதிகாரி-நிலைக்குழு(நகரமைப்பு) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".**

*****

**க.து.ந.க.எண்.பி1/2802/1/2018**

**தீர்மான எண்.265/2019** **நாள்: 21-05-2019**

**மண்டலம் 14 வார்டு 184 பெருங்குடியில் கட்டப்பட்டுள்ள நகர்புற சமுதாய நல மருத்துவமனைக்கு (100 gL¡ iffŸ) Supplying and fixing Furnitures ஒப்பம் கோரி கொள்முதல் செய்து அமைக்கும் பணிக்கான கூடுதல் ஒப்பத்தொகை, 25 சதவீதம் மிகாமல் பட்டி தீர்வு செய்யஅனுமதி**

மண்டலம் 14 வார்டு 184 பெருங்குடியில் கட்டப்பட்டுள்ள நகர்புற சமுதாய நல மருத்துவமனைக்கு (100 gL¡ iffŸ) Supplying and fixing Furnitures ஒப்பம் கோரி கொள்முதல் செய்து அமைக்கும் பணிக்கான சிறப்பு அதிகாரி – மன்றம், தீர்மான எண்.983/2018, நாள்.10.12.2018 மதிப்பீட்டிற்கு பெறப்பட்டு, 09.01.2018 அன்று ஒப்பம் கோரப்பட்டு பணி ஆணை வழங்கப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது

**மாநகர மருத்துவ அலுவலர் அவர்களின் 12.03.2019 நாளிட்ட கடிதத்தில், மண்டலம்-15 வார்டு-195 கண்ணகி நகரில் கட்டப்பட்டுள்ள நகர்புற சமுதாய நல மருத்துவமனை (30 படுக்கைகள்) கட்டி முடிக்கப்பட்டு, மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டுள்ளதால், இந்த மருத்துவமனைக்கு தேவையான Furnitures ஏதும் இல்லாத காரணத்தால், சிகிச்சைக்கு வரும் பொது மக்களுக்கும் மற்றும் மருத்துவமனை ஊழியர்களுக்கும் சிரமமாக உள்ளதால், மருத்துவமனைக்கு தேவையான Furnitures கட்டடத்துறை மூலமாக கொள்முதல் செய்து வழங்குமாறு கடிதம் அனுப்பியுள்ளார்கள்.**

எனவே, கண்ணகி நகர் மருத்துவமனைக்கு Supplying and fixing Furnitures கொள்முதல் செய்து அமைக்கும் பணியினையும் இந்த ஒப்பத்தில் சேர்த்து செய்வதால் கூடுதலாக ரூ.5,75,655/- கூடுதலாக செலவு செய்யப்பட வேண்டியுள்ளது. இத்தொகையானது ஒப்பத்தொகையை விட கூடுதலாக 25% குறைவாக உள்ளது.

இதன் விவரங்கள் கீழ்க்கண்டவாறு பட்டியலிடப்பட்டுள்ளது.

| வ. எண். | வளசரவாக்கத்தில் கட்டப்பட்டுள்ள நகர்புற சமுதாய நல மருத்துவமனைக்கு ஒப்பம் கோரி கொள்முதல் செய்த விவரம் | எண்ணிக்கை | விலை | மொத்தம் தொகை | கண்ணகி நகரில் வளசரவாக்கத்தில் கட்டப்பட்டுள்ள நகர்புற சமுதாய நல மருத்துவமனைக்கு கொள்முதல் செய்ய வேண்டிய விவரம் மற்றும் எண்ணிக்கை | விலை | தொகை |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | Table enterprises Tables 3x2 T-31 | 10 | 7419 | 74190 | - | - | - |
| 2. | Table enterprise tables 4x2 | 20 | 13867 | 277340 | 8 | 13867 | 110936 |
| 3. | Table s1071 tables 6x3 | 4 | 31000 | 124000 | 7 | 31000 | 217000 |
| 4. | Side table Mayfair eru | 1 | 6882 | 6882 | - | - | - |
| 5. | Computer table stylo 4x2 | 4 | 10354 | 41416 | 1 | 10354 | 10354 |
| 6. | Stage table Enterprises 4x2 | 1 | 13058 | 13058 | - | - | - |
| 7. | Executive table ascent 6x3 | 6 | 38259 | 229554 | - | - | - |

**க.து.ந.க.எண்.பி1/2802/1/2018**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 8. | Executive chair 7101 R HB | 22 | 8351 | 183722 | 1 | 8351 | 8351 |
| 9. | Moulded chair | 100 | 600 | 60000 | 5 | 600 | 3000 |
| 10. | Rolling chair bravo mb | 20 | 7452 | 149040 | 13 | 7452 | 96876 |
| 11. | High back chair 7001 D | 5 | 16338 | 81690 | 1 | 16338 | 16338 |
| 12. | Stage chair bravo visitors | 10 | 5643 | 56430 | - | - | - |
| 13. | Cushion chair 7112r | 50 | 4685 | 234250 | 16 | 4685 | 74960 |
| 14. | Chair 7112r | 50 | 4685 | 234250 | - | - | - |
| 15. | Steel rack | 5 | 9750 | 48750 | - | - | - |
| 16. | Cupboard with lock | 3 | 19990 | 59970 | - | - | - |
| 17. | Steel plain cupboard | 20 | 18920 | 378400 | 2 | 18920 | 37840 |
| 18. | Reception table 2 arc | 1 | 54590 | 54590 | - | 54590 | - |
| | **TOTAL** | | | **2307532** | | | **575655** |

| | |
|---|---|
| ஒப்பத்தொகை | Rs.23,06,378.23 |
| கூடுதலான தொகை | Rs.5,75,655.00 |
| மொத்த தொகை | Rs.28,82,033.23 |

இப்பணிக்காக ஒப்பந்ததாரருக்கு வழங்கப்பட்ட பணிக்கான ஒப்பத்தொகையான ரூ.23,06,378.23/-யை விட ஒப்பத்திற்கு கூடுதல் இனங்களான (Deviation) பணிகளையும் சேர்த்து பட்டித்தொகை ரூ.28,82,033.23/- என கணக்கிடப்பட்டுள்ளது. இதனால் ரூ.5,75,655/- கூடுதல் செலவீனமாகிறது. இத்தொகையானது 10 சதவீதத்தை விட அதிகமாக உள்ளது. இந்த கூடுதல் செலவீன தொகை ரூ.5,75,655/- சேர்த்து கூடுதல் ஒப்ப சதவீதம் 25% ற்கு குறைவாக உள்ளது.

தற்போது பாராளுமன்ற தேர்தல் நடத்தை விதிகள் அமலில் உள்ளதால் கண்ணகி நகரில் உள்ள மருத்துவமனைக்கு புதிதாக ஒப்பம் கோரி கொள்முதல் செய்ய இயலாத நிலை உள்ளது.

தமிழ்நாடு ஒளிவுமறைவில்லா ஒப்ப சட்டத்தின்படி (Tamilnadu Tender Transparency act 1998) ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட ஒப்ப தொகைக்கு கூடுதலாக 25% சதவிகிதத்திற்குள் அதே ஒப்பந்தாரரைக் கொண்டு பணிகள் மேற்கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.

எனவே,

1. பணியின் அவசரம் மற்றும் அவசியம் கருதி அதே ஒப்பந்ததாரர் திருவாளர்கள். ஸ்ரீ விஷ்னு மார்க்கெட்டிங் அவர்களுக்கு கூடுதல் பணிகளை ரூ.5,75,655/- . கூடுதலாக கொள்முதல் ஆணை வழங்கி பணி மேற்கொள்ளஅனுமதியும்,
2. இந்த கூடுதல் பணிகளுக்காக ஒப்பந்ததாருடன் கூடுதல் ஒப்பந்தம் (Supplementary Agreement) நிறைவேற்றவும்
3. மேற்கண்ட கூடுதல் பொருட்களை கொள்முதல் செய்து கண்ணகி நகரில் உள்ள மருத்துவமனைக்கு கொள்முதல் செய்து மருத்துவமனையை இயக்க அனுமதியும் வேண்டப்படுகிறது.

**க.து.ந.க.எண்.பி1/2802/1/2018**

மேற்கண்ட இனங்களுக்கு சிறப்பு அதிகாரி- நிலைக்குழு (பணிகள்), நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் நிர்வாக அனுமதி கோரிய ஆணையரது 21.05.2019 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**“1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு நிலைக்குழு (பணிகள்), நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டது”.**

*****

**வ.து.ந.க.எண்.அ1/2383/2019**

**தீர்மான எண்.266/2019** **நாள்:21-05-2019**

**பணியமைப்பு - பெருநகர சென்னை மாநகராட்சி – வருவாய்துறை - திரு. சுகுமார் சிட்டிபாபு, வருவாய் அலுவலர் - 2019 ஜூலை மாதம் 13 ஆம் தேதி முதல் 20 ஆம் தேதி வரை குடும்பத்துடன் ஐரோப்பிய நாடுகளுக்கு சுற்றுலா சென்று வர அனுமதி வேண்டியது - தடையில்லா சான்று வழங்க அரசிற்கு செயற்குறிப்பு அனுப்ப அனுமதி.**

திரு. சுகுமார் சிட்டிபாபு, வருவாய் அலுவலரின் 08.04.2019 நாளிட்ட கடிதத்தில், தனது குடும்பத்துடன் ஜுன் அல்லது ஜூலை 2019ல் ஐரோப்பிய நாடுகளுக்கு சுற்றுலா செல்லவிருப்பதாகவும், செலவினங்களை தனது சொந்த சேமிப்பில் இருந்து மேற்கொள்ளவிருப்பதாகவும், ஐரோப்பிய நாடுகளுக்கு சுற்றுலா சென்று வர அனுமதி வழங்குமாறும் கோரியுள்ளார். தனியர் தனது 13.05.2019 நாளிட்ட கடிதத்தில், 2019 ஜூலை மாதம் 13 ஆம் தேதி முதல் 20 ஆம் தேதி வரை ஐரோப்பிய நாடுகளுக்கு பயணம் மேற்கொள்ள உத்தேசித்துள்ளதாகவும், தனது ஈட்டிய விடுப்புக் கணக்கில் 240 நாட்கள் ஈட்டிய விடுப்பு இருப்பில் உள்ளதால், ஈட்டிய விடுப்பு துய்த்து ஐரோப்பிய நாடுகளுக்கு சுற்றுலா செல்லவுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

திரு. சுகுமார்சிட்டிபாபு, வருவாய் அலுவலர் அவர்கள் 23.08.1984 அன்று மாநகராட்சியில் தட்டச்சராக பணி நியமனம் செய்யப்பட்டு, இப்பதவியில் பணிவரன்முறை மற்றும் தகுதிகாண்பருவம் முடித்தவராக அறிவிக்கப்பட்டுள்ளது. தனியர் மீது துறைரீதியான ஒழுங்கு நடவடிக்கை ஏதும் நிலுவையில் இல்லை என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சி விழிப்பு அலுவலர் அவர்களின் 12.04.2019 நாளிட்ட கடிதத்தில் தனியர் மீது விழிப்பு குழுமத்தில் விசாரணை ஏதும் இல்லை என அறிக்கை அளிக்கப்பட்டுள்ளது. மேலும், 17.04.2019 நாளிட்ட காவல்துறை கண்காணிப்பாளர், பாதுகாப்பு குற்ற புலனாய்வு (ம) சிறப்பு விழிப்புத்துறை அவர்களின் அலுவலகத்திலிருந்து தடையில்லா சான்று பெறப்பட்டுள்ளது.

அரசாணை (நிலை) எண்.181, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மா.,ந.3.) துறை, நாள்.06.10.2009 ன்படி, பெருநகர சென்னை மாநகராட்சியில் நிலை-1-A வில் உள்ள அலுவலர்கள் வெளிநாடு செல்வதற்கான அனுமதியினை அரசிடம் பெற வேண்டுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, திரு. சுகுமார் சிட்டிபாபு, வருவாய் அலுவலர் அவர்கள் 2019 ஜூலை மாதம் 13 ஆம் தேதி முதல் 20 ஆம் தேதி வரை ஐரோப்பிய நாடுகளுக்கு சுற்றுலா சென்று வருவதற்கான அனுமதியினை பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டு வழங்க, அரசிற்கு செயற்குறிப்பு அனுப்ப, சிறப்பு அதிகாரி - நிலைக்குழு (வ.வி.ம.நி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 21.05.2019 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

<u>நிபந்தனைகள் விவரம் பின்வருமாறு :-</u>

1. வெளிநாடு செல்ல அனுமதி அளிக்கப்பட்டிருக்கும் அலுவலர்ர் வெளிநாட்டில் தங்கும் போது பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையரின் முன்னனுமதியின்றி ஏதாவது வேலை வாய்ப்பை ஏற்கவோ அல்லது பயிற்சியிலோ அல்லது படிப்பிலோ கலந்துக் கொள்ளக் கூடாது.
2. வெளிநாடு செல்வதால் ஏற்படும் எந்தவித செவவீனத்தையும். பயணச் செலவு உட்பட பெருநகர சென்னை மாநகராட்சி ஏற்காது.
3. அவர் வெளிநாட்டில் இருக்கும் போது பெருநகர சென்னை மாநகராட்சி பணியை துறக்க விண்ணப்பிக்கக் கூடாது. மீறி அவர் பணி துறக்க விண்ணப்பித்தால் எக்காரணம் கொண்டும் அக்கோரிக்கை ஏற்கப்பட மாட்டாது.
4. வெளிநாட்டில் தங்கும் போது வியாபாரம் அல்லது வேலை வாய்ப்பு சம்பந்தமாக பேச்சு வார்த்தை நடத்தவோ அல்லது முயற்சிக்கவோ கூடாது.
5. வெளிநாடு செல்வதற்கு முன்னதாக விடுப்பு அனுமதியினை பெற்றுச் செல்ல வேண்டும்.

<u>வ.து.ந.க.எண்.அ1/2383 /2019</u>

6. பெறப்படவுள்ள அனுமதிச் சான்றினை பயன்படுத்தி முன்னனுமதியின்றி அடுத்தடுத்த பயணங்களுக்கு பயன்படுத்தக் கூடாது. மேலும் வெளிநாட்டில் இருந்து கொண்டே விடுப்பு நீட்டிக்கும் கோரிக்கையையும் எவ்வித காரணத்தினாலும் ஏற்கப்படமாட்டாது.
7. அளிக்கப்பட்டுள்ள தடையில்லாச் சான்று வழங்கப்பட்ட நாள் முதல் ஆறு மாத காலத்திற்கு மட்டுமே செல்ல தக்கதாகும்.
8. இந்திய இறையாண்மைக்கு இடையூறு ஏற்படாவண்ணம் நடந்து கொள்ள வேண்டும்.

**"தடையின்மை சான்றிதழ் பெற அரசுக்கு செயற்குறிப்பு அனுப்ப, சிறப்பு அதிகாரி-நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".**

*****

**ம.க.கு.ந.க.எண்.அ8/744/2019**

**தீர்மான எண்.*267/2019*** **நாள்:*21.05.2019***

**பெருநகர சென்னை மாநகராட்சி - மத்திய கணக்கு குழுமம் - படிகள் - அகவிலைப்படி -01.01.2019 முதல் 3 சதவிகிதம் உயர்த்தி - அரசாணை வெளியிடப்பட்டுள்ளது - அரசாணையினை சிறப்பு அதிகாரி மாமன்றத்தின் மூலமாக பெருநகர சென்னை மாநகராட்சியில் நடைமுறைப்படுத்த அனுமதி.**

அரசாணை நிலை எண் *151,* நிதி (படிகள்)த் துறை நாள்: *20.05.2019* **ஜனவரி** *2019* முதல் அகவிலைப்படி *9* விழுக்காடிலிருந்து *12* விழுக்காடு உயர்த்தி வழங்கிட அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. இவ்வரசாணையில் *01.01.2019* முதல் உயர்த்தப்பட்ட அகவிலைப்படியை ரொக்கமாக வழங்கலாம் எனவும், **ஜனவரி முதல் ஏப்ரல்** *2019* வரை அகவிலைப்படி நிலுவைத் தொகை வழங்கவும், திருத்தப்பட்ட அகவிலைப்படியைக் கணக்கிடுகையில் ஒரு ரூபாய்க்கு குறைவாக வரக்கூடியத் தொகை, அது *50* காசும் அதற்கு மேலும் இருக்குமாயின் அது அடுத்த ஒரு ரூபாயாக கணக்கிடப்பட வேண்டும். அதுவே *50* காசுக்கு குறைவாக இருந்தால் அது விட்டுவிடப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், இவ்வரசாணையில் அனுமதிக்கப்பட்ட திருத்தப்பட்ட அகவிலைப்படி தற்போது அகவிலைப்படி பெறும் முழுநேர அலுவலர்களுக்கும், சில்லரை செலவு நிதியிலிருந்து நிர்ணயிக்கப்பட்ட மாதாந்திர ஊதியம் பெறும் முழுநேர அலுவலர்களுக்கும் அனுமதிக்கத்தக்கதாகும் எனவும், பகுதி நேர அலுவலர்களுக்கு அனுமதிக்கத்தக்கதல்ல எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. அகவிலைப்படி உயர்த்தப்பட்டு வெளியிடப்பட்ட இவ்வரசாணை, அரசு மானியம் பெறும் கல்வி நிறுவனங்களில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கும், ஆசிரியர் அல்லாத பிற அலுவலர்களுக்கும், உள்ளாட்சி மன்றங்களின் அலுவலர்களுக்கும், பல்கலைக்கழக மானியக்குழு/அனைத்திந்திய தொழில் நுட்பக் கல்விக்குழு சம்பள வீதங்களின் கீழ்வரும் அலுவலர்களுக்கும், அரசு மற்றும் மானியம் பெறும் பல்தொழில் பயிற்சிப் பள்ளிகள், சிறப்புப்பட்டயப் படிப்பு நிறுவனங்களில் பணியாற்றும் ஆசிரியர்கள்/உடற்பயிற்சி இயக்குநர்கள்/ நூலகர்கள் ஆகியோருக்கும், வருவாய்த் துறையிலுள்ள கிராம உதவியாளர்களுக்கும், சத்துணவுத்திட்ட அமைப்பாளர்கள், குழந்தைகள் நல அமைப்பாளர்கள், அங்கன்வாடி பணியாளர்கள், சத்துணவு சமையலர்கள், சமையல் உதவியாளர்கள் மற்றும் மக்கள் நலப் பணியாளர்கள், ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் துறையில் பணிபுரியும் பஞ்சாயத்து உதவியாளர்கள் / எழுத்தர்கள் ஆகியோருக்கும் பொருந்தும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த அகவிலைப்படி உயர்வினால் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு மாதம் ஒன்றுக்கு ஆகும் கூடுதல் செலவு ரூ.*1.46* கோடி (ரூபாய் ஒருகோடியே நாற்பத்தாறு இலட்சம் மட்டும்) எனவும், நடப்பு நிதியாண்டில் ரூ. *17.50* கோடி (ரூபாய் பதினேழு கோடியே ஐம்பது இலட்சம் மட்டும்) கூடுதல் செலவு ஏற்படுமெனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

எனவே, அரசாணை நிலை எண்.*151,* நிதி(படிகள்) துறை நாள்.*20.05.2019*-ஐ பெருநகர சென்னை மாநகராட்சியில் நடைமுறைப்படுத்த சிறப்பு அதிகாரி-நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது *21.05.2019* நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**" அரசாணையை அமல்படுத்த சிறப்பு அதிகாரி-நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".**

*********

**பொ.து.ந.க.எண்.ஈ2/13341/2019**

**தீர்மான எண்.268/2019** **நாள்:22-05-2019**

**பணியமைப்பு - பெருநகர சென்னை மாநகராட்சி - மருத்துவ சேவைகள் துறை - டாக்டர்.என்.உமையாள், மருத்துவ அலுவலர், அம்பத்தூர் மருத்துவ மண்டலம் அவர்கள் - 31.05.2019 அன்று பிற்பகல் வயது முதிர்வு ஓய்வில் செல்ல அனுமதி.**

பெருநகர மருத்துவ அலுவலர் / கூடுதல் இயக்குநர் (பொ.) அவர்களின் 14.05.2019 நாளிட்ட கடிதத்தில், பொதுத்துறை 16.12.2018 நாளிட்ட சுற்றறிக்கையில், டாக்டர்.என்.உமையாள், மருத்துவ அலுவலர், அம்பத்தூர் மருத்துவ மண்டலம் அவர்கள் 31.05.2019 அன்று பிற்பகல் முதல் வயது முதிர்வு காரணமாக ஓய்வு பெறவுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. தனியரின் பிறந்த தேதி 14.05.1961 ஆகும்.

மேலும், தனியர் 21.10.1988 முதல் அம்பத்தூர் நகராட்சியில் மருத்துவ அலுவலராக பணியில் சேர்ந்தார், அதன் பின்னர் பல்வேறு மண்டலங்களில்/துறைகளில் பணிபுரிந்த விவரங்கள் பின்வருமாறு:

| வ. எண் | வகித்த பதவி | துறை/மண்டலம் | பணிபுரிந்த காலம் |
|---|---|---|---|
| 1 | மருத்துவ அலுவலர் | அம்பத்தூர் நகராட்சி | 21.10.1988 முதல் 03.06.1996 வரை |
| 2 | | ஆவடி நகராட்சி | 03.06.1996 முதல் 05.11.2008 வரை |
| 3 | | ஆலந்தூர் நகராட்சி | 06.11.2008 முதல் 25.10.2011 வரை |
| 4 | | ஆலந்தூர் மருத்துவ மண்டலம் | 26.10.2011 முதல் 31.05.2019 வரை |

தனியருக்கு ந.க.எண்.13142/90/E4ன்படி 20.10.1990 முதல் மருத்துவ அலுவலர் பதவியில் பணிவரன்முறைபடுத்தியும், தகுதிகாண்பருவம் பூர்த்தி செய்தமைக்கு அங்கீகரித்து உத்தரவும் வழங்கப்பட்டுள்ளது.

தனியர் பணிபுரிந்துள்ள மண்டலம்/துறைகளிலிருந்து முன்பண நிலுவை மற்றும் ஒழுங்கு நடவடிக்கை ஏதும் நிலுவையில் இல்லையெனச் சான்றுகள் பெறப்பட்டுள்ளது.

மேலும், பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலர் கூட்டுறவு சங்கத்தின் 25.03.2019 நாளிட்ட கடிதத்தில் **சங்க உறுப்பினர் இல்லை** என சான்றிதழ் அளிக்கப்பட்டுள்ளது.

விழிப்பு அலுவலர், விழிப்பு குழுமம் அவர்களின் 08.05.2019 நாளிட்ட கடிதத்தில், தனியர் மீது விழிப்புக்குழுமத்தில் விசாரணை ஏதும் நிலுவையில் இல்லை என அறிக்கை பெறப்பட்டுள்ளது.

நிதி ஆலோசகர் அவர்களின் 24.04.2019 நாளிட்ட குறிப்பில், டாக்டர்.என்.உமையாள், மருத்துவ அலுவலராக, பணிபுரிந்த காலங்களில் 2011-2012 முதல் 2017-2018 ஆம் ஆண்டு வரை தணிக்கை அறிக்கை குறித்த பத்திகள், இவ்வலுவலகத்தில் உள்ள உள்ளாட்சி நிதித்தணிக்கை அறிக்கைகளின்படி கீழ்கண்ட அட்டவணையின்படி, மொத்தம் ரூ.14,400/- உள்ளடக்கிய 4 தணிக்கைத்தடை பத்திகள் தனிப்பொறுப்பில் நிலுவையில் உள்ளது எனவும், மேற்கண்ட தணிக்கைத்தடை பத்திகளை நீக்கம் செய்யப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது எனவும், மேலும், 2018-2019 ஆம் ஆண்டு முதல் 2019-2020 ஆம் ஆண்டுகளுக்கான தணிக்கை அறிக்கைகள் உள்ளாட்சி நிதி தணிக்கைத் துறையால் வெளியிடப்படவில்லை எனவும், மேற்காணும் ஆண்டுகளுக்கான தணிக்கை அறிக்கைகள் வெளியிடப்பட்ட பின்னர், தணிக்கை தடை பத்திகள் பணியாளரை சார்ந்தது என்பது பின்னர் தெரியவரும் பட்சத்தில் தனியர் மீது பொறுப்பு நிர்ணயிக்கப்படும் என்றும் அறிக்கை அளிக்கப்பட்டுள்ளது.

**பொ.து.ந.க.எண்.ஈ2/13341/2019**

| வ. எண். | தணிக்கை அறிக்கை ஆண்டு | பத்தி எண். | தனியரைப் பொறுப்பாக்கும் தொகை | தனியரால் கருவூலத்தில் செலுத்தப்பட்ட சலான்களின் விவரம் |
|---|---|---|---|---|
| 1. | 2016-2017 | 13 (a) வ.எண்.47 | 7200 | Challan No.HD 2018-19/22774, dt.14.11.2018 |
| 2. | 2017-2018 | 19 வ.எண்.1 | 600 | Challan No.HD 2019-20/2285, dt.03.05.2019 |
| 3. | | 20 வ.எண்.1 | 600 | Challan No.HD 2019-20/2287, dt.03.05.2019 |
| 4. | | 21 வ.எண்.1 | 6000 | Challan No.HD 2019-20/2286, dt.03.05.2019 |
| மொத்தம் | | 4 | 14400 | |

மேற்கண்ட தனியரைப் பொறுப்பாக்கும் தணிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள தொகைகளை தனியரால் கருவூலத்தில் செலுத்தப்பட்டு அதற்கான ரசீது நகல் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், மேற்காண் பத்திகள் நீக்கம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், தனியர் மீது தணிக்கைத் தடை, ஒழுங்கு நடவடிக்கை மற்றும் இழப்பீடுகள் ஏதும் நிலுவையில் இல்லை என்றும், தனியரது சம்பள சான்றின்படி எவ்வித நீண்ட கால முன்பணம் ஏதும் பிடித்தம் செய்ய வேண்டியது இல்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தனியர் மீது 31.05.2019 வரை தனிப்பட்ட முறையிலோ கூட்டு பொறுப்பிலோ தனியரை பொறுப்பாக்கி நிதி இழப்பீடு இருப்பது குறித்து தெரியவரின் அத்தொகையை தனியருக்கு வழங்கப்படவுள்ள ஓய்வூதிய பயன்கள், ஓய்வூதிய அகவிலைப்படியிலிருந்து பிடித்தம் செய்து கொள்ள தனியர் ரூ.20/- முத்திரை தாளில் சம்மதித்து ஒப்புதல் அளித்துள்ளார்.

மேலும், தனியர் வகுப்பு II-ஐ சார்ந்த அலுவலர் என்பதால் தனியரை வயது முதிர்வு ஓய்வில் செல்ல அனுமதிக்கும் அதிகாரம் பெருநகர சென்னை மாநகராட்சி சிறப்பு அதிகாரி (மன்றம்) அவர்களின் வசம் உள்ளது.

ஆகவே, மேற்காணும் விவரங்களின் அடிப்படையிலும் மற்றும் பெருநகர மருத்துவ அலுவலர்/கூடுதல் இயக்குநர் (பொ) அவர்களின் பரிந்துரையின் அடிப்படையிலும், டாக்டர்.என்.உமையாள், மருத்துவ அலுவலர், அம்பத்தூர் மருத்துவ மண்டலம், மருத்துவ சேவைகள் துறை அவர்கள் மீது 2016-2017 மற்றும் 2017-2018 ஆம் ஆண்டில் தனியரை பொறுப்பாக்கும் தொகை ரூ.14,400/- உள்ளடக்கிய 4 தணிக்கைத்தடை பத்திகள் தனிப்பொறுப்பில் நிலுவையில் உள்ளதிற்குட்பட்டும், மேலும், 2018-2019 மற்றும் 2019-2020 ஆம் ஆண்டுகளுக்கான தணிக்கை அறிக்கைகள் உள்ளாட்சி நிதித் தணிக்கையின் அறிக்கை வெளியிடப்படாத நிலையில், நிதி சம்மந்தப்பட்ட தணிக்கை தடைகளால் மாநகராட்சிக்கு நிதி இழப்பீடு, நீண்ட கால முன்பணம் பெற்று தீர்வு செய்யப்படாமை ஆகிய காரணங்களால் நிதி இழப்பீடு ஏதேனும் நிலுவையில் இருப்பது பின்னர் தெரியவரின், அவைகளுக்கு தனியரை பொறுப்பாக்கி அத்தொகைகளை அவரது ஓய்வூதிய பயன்களிலிருந்து பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைகளுக்குட்பட்டு தனியரை 31.05.2019 அன்று பிற்பகல் முதல் வயது முதிர்வு ஓய்வில் செல்ல, சிறப்பு அதிகாரி – மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 21.05.2019 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**“வயது முதிர்வு ஓய்வில் செல்ல சிறப்பு அதிகாரி- மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது”.**

*****

**பொ.து.ந.க.எண்.ஈ2/13428/2019**

**தீர்மான எண்.269/2019** **நாள்:22-05-2019**

**பணியமைப்பு - பெருநகர சென்னை மாநகராட்சி - மருத்துவ சேவைகள் துறை - டாக்டர்.ஆர்.வித்யாவதி, மருத்துவ அலுவலர், திரு.வி.க.நகர் மருத்துவ மண்டலம் அவர்கள் - 31.05.2019 அன்று பிற்பகல் வயது முதிர்வு ஓய்வில் செல்ல அனுமதி.**

பெருநகர மருத்துவ அலுவலர் / கூடுதல் இயக்குநர் (பொ.) அவர்களின் 17.05.2019 நாளிட்ட கடிதத்தில், பொதுத்துறை 16.12.2018 நாளிட்ட சுற்றறிக்கையில், டாக்டர்.ஆர்.வித்யாவதி, மருத்துவ அலுவலர், திரு.வி.க.நகர் மருத்துவ மண்டலம் அவர்கள் 31.05.2019 அன்று பிற்பகல் முதல் வயது முதிர்வு காரணமாக ஓய்வு பெறவுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. தனியரின் பிறந்த தேதி 27.05.1961 ஆகும்.

மேலும், தனியர் 05.08.1991 முதல் நெல்லிக்குப்பம் நகராட்சியில் மருத்துவ அலுவலராக பணியில் சேர்ந்தார், அதன் பின்னர் பல்வேறு மண்டலங்களில்/துறைகளில் பணிபுரிந்த விவரங்கள் பின்வருமாறு:

| வ. எண் | வகித்த பதவி | துறை/மண்டலம் | பணிபுரிந்த காலம் |
|---|---|---|---|
| 1 | மருத்துவ அலுவலர் | நெல்லிக்குப்பம் நகராட்சி | 05.08.1991 முதல் 06.11.1991 வரை |
| 2 | | ஆவடி நகராட்சி | 15.11.1991 முதல் 04.05.1992 வரை |
| 3 | | மாதவரம் மண்டலம் | 04.05.1992 முதல் 01.07.1997 வரை |
| 4 | | ஆவடி பெருநகராட்சி | 02.07.1997 முதல் 30.06.1998 வரை |
| 5 | | மாதவரம் மண்டலம் | 08.07.1998 முதல் 15.10.2011 வரை |
| 6 | | மாதவரம் மருத்துவ மண்டலம் | 16.10.2011 முதல் 14.04.2013 வரை |
| 7 | | திருவொற்றியூர் மருத்துவ மண்டலம் | 15.04.2013 முதல் 01.12.2013 வரை |
| 8 | | திரு.வி.க. மருத்துவ மண்டலம் | 02.12.2013 முதல் 31.05.2019 வரை |

தனியருக்கு செயல் அலுவலர் மாதவரம் பெருநகராட்சி அவர்களின் ஆணை ஆர்.ஓ.சி.எண்.91/93/எச்2, நாள்.23.03.1993 ன்படி 02.10.1991 முதல் மருத்துவ அலுவலர் பதவியில் பணிவரன்முறைபடுத்தியும் மற்றும் ஆர்.ஓ.சி.எண்.166/94/எச்2, நாள்.07.03.1994 ன்படி 28.01.1994ல் தகுதிகாண்பருவக்காலமும் முடித்தவராகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

தனியர் பணிபுரிந்துள்ள மண்டலம்/துறைகளிலிருந்து முன்பண நிலுவை மற்றும் ஒழுங்கு நடவடிக்கை ஏதும் நிலுவையில் இல்லையெனச் சான்றுகள் பெறப்பட்டுள்ளது.

மேலும், பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலர் கூட்டுறவு சங்கத்தின் 31.12.2018 நாளிட்ட கடிதத்தில் **சங்க உறுப்பினர் இல்லை** என சான்றிதழ் அளிக்கப்பட்டுள்ளது.

விழிப்பு அலுவலர், விழிப்பு குழுமம் அவர்களின் 08.05.2019 நாளிட்ட கடிதத்தில், தனியர் மீது விழிப்புக்குழுமத்தில் விசாரணை ஏதும் நிலுவையில் இல்லை என அறிக்கை பெறப்பட்டுள்ளது.

நிதி ஆலோசகர் அவர்களின் 30.04.2019 நாளிட்ட குறிப்பில், டாக்டர்.ஆர்.வித்யாவதி, மருத்துவ அலுவலர், திரு.வி.க.நகர் மருத்துவ மண்டலம், அவர் பணிபுரிந்த காலங்களில் 2011-2012 முதல் 2017-2018 ஆம் ஆண்டு வரை தணிக்கை அறிக்கை குறித்த பத்திகள், இவ்வலுவலகத்தில் உள்ள உள்ளாட்சி நிதித்தணிக்கை அறிக்கைகளின்படி நிலுவை ஏதுமில்லை எனவும், 2018-2019 ஆம் ஆண்டு முதல் 2019-2020 ஆம் ஆண்டுகளுக்கான தணிக்கை அறிக்கைகள் உள்ளாட்சி நிதி தணிக்கைத் துறையால் வெளியிடப்படவில்லை எனவும், மேற்காணும் ஆண்டுகளுக்கான தணிக்கை அறிக்கைகள் வெளியிடப்பட்ட பின்னர், தணிக்கை தடை பத்திகள் பணியாளரை சார்ந்தது என்பது பின்னர் தெரியவரும் பட்சத்தில் தனியர் மீது பொறுப்பு நிர்ணயிக்கப்படும் என்றும் அறிக்கை அளிக்கப்பட்டுள்ளது.

மேலும், தனியர் மீது தணிக்கைத் தடை, ஒழுங்கு நடவடிக்கை மற்றும் இழப்பீடுகள் ஏதும் நிலுவையில் இல்லை என்றும், தனியரது சம்பள சான்றின்படி எவ்வித நீண்ட கால முன்பணம் ஏதும் பிடித்தம் செய்ய வேண்டியது இல்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**பொ.து.ந.க.எண்.ஈ2/13428/2019**

தனியர் மீது 31.05.2019 வரை தனிப்பட்ட முறையிலோ கூட்டு பொறுப்பிலோ தனியரை பொறுப்பாக்கி நிதி இழப்பீடு இருப்பது குறித்து தெரியவரின் அத்தொகையை தனியருக்கு வழங்கப்படவுள்ள ஓய்வூதிய பயன்கள், ஓய்வூதிய அகவிலைப்படியிலிருந்து பிடித்தம் செய்து கொள்ள தனியர் ரூ.20/- முத்திரை தாளில் சம்மதித்து ஒப்புதல் அளித்துள்ளார்.

மேலும், தனியர் வகுப்பு II-ஐ சார்ந்த அலுவலர் என்பதால் தனியரை வயது முதிர்வு ஓய்வில் செல்ல அனுமதிக்கும் அதிகாரம் பெருநகர சென்னை மாநகராட்சி சிறப்பு அதிகாரி (மன்றம்) அவர்களின் வசம் உள்ளது.

ஆகவே, மேற்காணும் விவரங்களின் அடிப்படையிலும் மற்றும் பெருநகர மருத்துவ அலுவலர்/கூடுதல் இயக்குநர் (பொ) அவர்களின் பரிந்துரையின் அடிப்படையிலும், டாக்டர்.ஆர்.வித்யாவதி, மருத்துவ அலுவலர், திரு.வி.க.நகர் மருத்துவ மண்டலம் அவர்கள் மீது 2018-2019 மற்றும் 2019-2020 ஆம் ஆண்டுகளுக்கான தணிக்கை அறிக்கைகள் உள்ளாட்சி நிதித் தணிக்கையின் அறிக்கை வெளியிடப்படாத நிலையில், நிதி சம்மந்தப்பட்ட தணிக்கை தடைகளால் மாநகராட்சிக்கு நிதி இழப்பீடு, நீண்ட கால முன்பணம் பெற்று தீர்வு செய்யப்படாமை ஆகிய காரணங்களால் நிதி இழப்பீடு ஏதேனும் நிலுவையில் இருப்பது பின்னர் தெரியவரின், அவைகளுக்கு தனியரை பொறுப்பாக்கி அத்தொகைகளை அவரது ஓய்வூதிய பயன்களிலிருந்து பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைகளுக்குட்பட்டு தனியரை 31.05.2019 அன்று பிற்பகல் முதல் வயது முதிர்வு ஓய்வில் செல்ல, சிறப்பு அதிகாரி – மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 21.05.2019 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**“வயது முதிர்வு ஓய்வில் செல்ல சிறப்பு அதிகாரி- மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது”.**

*****

**பொ.து.ந.க.எண்.ஈ2/13340/2019**

**தீர்மான எண்.270/2019** **நாள்:22-05-2019**

**பணியமைப்பு - பெருநகர சென்னை மாநகராட்சி - மருத்துவ சேவைகள் துறை - டாக்டர்.எஸ்.சசிகலா, மருத்துவ அலுவலர், திருவொற்றியூர் மருத்துவ மண்டலம் அவர்கள் - 31.05.2019 அன்று பிற்பகல் வயது முதிர்வு ஓய்வில் செல்ல அனுமதி.**

பெருநகர மருத்துவ அலுவலர் / கூடுதல் இயக்குநர் (பொ.) அவர்களின் 14.05.2019 நாளிட்ட கடிதத்தில், பொதுத்துறை 16.12.2018 நாளிட்ட சுற்றறிக்கையில், டாக்டர்.எஸ்.சசிகலா, மருத்துவ அலுவலர், திருவொற்றியூர் மருத்துவ மண்டலம் (பணிமாற்று அடிப்படையில் பொதுசுகாதாரத்துறை, பணியாளர்கள் தலைமை மருந்தகம்) அவர்கள் 31.05.2019 அன்று பிற்பகல் முதல் வயது முதிர்வு காரணமாக ஓய்வு பெறவுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. தனியரின் பிறந்த தேதி 22.05.1961 ஆகும்.

மேலும், தனியர் 15.05.1995 முதல் பல்லவபுரம் நகராட்சியில் மருத்துவ அலுவலராக பணியில் சேர்ந்தார், அதன் பின்னர் பல்வேறு மண்டலங்களில்/துறைகளில் பணிபுரிந்த விவரங்கள் பின்வருமாறு:

| வ. எண் | வகித்த பதவி | துறை/மண்டலம் | பணிபுரிந்த காலம் |
|---|---|---|---|
| 1 | மருத்துவ அலுவலர் | பல்லவபுரம் நகராட்சி | 15.05.1995 முதல் 28.05.1997 வரை |
| 2 | | திருவொற்றியூர் நகராட்சி | 28.05.1997 முதல் 04.08.2011 வரை |
| 3 | | கத்திவாக்கம் நகராட்சி | 05.08.2011 முதல் 21.09.2011 வரை |
| 4 | | திருவொற்றியூர் நகராட்சி | 22.09.2011 முதல் 25.10.2011 வரை |
| 5 | | திருவொற்றியூர் மருத்துவ மண்டலம் (பணிமாற்று அடிப்படையில் பொதுசுகாதாரத்துறை, பணியாளர்கள் தலைமை மருந்தகம், ரிப்பன் மாளிகை) | 26.10.2011 முதல் 31.05.2019 வரை |

தனியருக்கு 15.05.1995 முதல் மருத்துவ அலுவலர் பதவியில் பணிவரன்முறைபடுத்தியும், 24.05.1997ல் தகுதிகாண்பருவக் காலத்தை திருப்திகரமாக முடித்துள்ளார் என உத்தரவிடப்பட்டுள்ளது.

தனியர் பணிபுரிந்துள்ள மண்டலம்/துறைகளிலிருந்து முன்பண நிலுவை மற்றும் ஒழுங்கு நடவடிக்கை ஏதும் நிலுவையில் இல்லையெனச் சான்றுகள் பெறப்பட்டுள்ளது.

மேலும், பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலர் கூட்டுறவு சங்கத்தின் 27.03.2019 நாளிட்ட கடிதத்தில் **சங்க உறுப்பினர் இல்லை** என சான்றிதழ் அளிக்கப்பட்டுள்ளது.

விழிப்பு அலுவலர், விழிப்பு குழுமம் அவர்களின் 07.05.2019 நாளிட்ட கடிதத்தில், தனியர் மீது விழிப்புக்குழுமத்தில் விசாரணை ஏதும் நிலுவையில் இல்லை என அறிக்கை பெறப்பட்டுள்ளது.

நிதி ஆலோசகர் அவர்களின் 30.04.2019 நாளிட்ட குறிப்பில், டாக்டர்.எஸ்.சசிகலா, மருத்துவ அலுவலராக (பணிமாற்று அடிப்படையில் பொதுசுகாதாரத்துறை, பணியாளர்கள் தலைமை மருந்தகம்) பணிபுரிந்த காலங்களில் 2011-2012 முதல் 2017-2018 ஆம் ஆண்டு வரை தணிக்கை அறிக்கை குறித்த பத்திகள், இவ்வலுவலகத்தில் உள்ள உள்ளாட்சி நிதித்தணிக்கை அறிக்கைகளின்படி நிலுவை ஏதுமில்லை எனவும், 2018-2019 ஆம் ஆண்டு முதல் 2019-2020 ஆம் ஆண்டுகளுக்கான தணிக்கை அறிக்கைகள் உள்ளாட்சி நிதி தணிக்கைத் துறையால் வெளியிடப்படவில்லை எனவும், மேற்காணும் ஆண்டுகளுக்கான தணிக்கை அறிக்கைகள் வெளியிடப்பட்ட பின்னர், தணிக்கை தடை பத்திகள் பணியாளரை சார்ந்தது என்பது பின்னர் தெரியவரும் பட்சத்தில் தனியர் மீது பொறுப்பு நிர்ணயிக்கப்படும் என்றும் அறிக்கை அளிக்கப்பட்டுள்ளது.

மேலும், தனியர் மீது தணிக்கைத் தடை, ஒழுங்கு நடவடிக்கை மற்றும் இழப்பீடுகள் ஏதும் நிலுவையில் இல்லை என்றும், தனியரது சம்பள சான்றின்படி எவ்வித நீண்ட கால முன்பணம் ஏதும் பிடித்தம் செய்ய வேண்டியது இல்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**பொ.சு.ந.க.எண்.ஈ2/13340/2019**

தனியர் மீது 31.05.2019 வரை தனிப்பட்ட முறையிலோ கூட்டு பொறுப்பிலோ தனியரை பொறுப்பாக்கி நிதி இழப்பீடு இருப்பது குறித்து தெரியவரின் அத்தொகையை தனியருக்கு வழங்கப்படவுள்ள ஓய்வூதிய பயன்கள், ஓய்வூதிய அகவிலைப்படியிலிருந்து பிடித்தம் செய்து கொள்ள தனியர் ரூ.20/- முத்திரை தாளில் சம்மதித்து ஒப்புதல் அளித்துள்ளார்.

மேலும், தனியர் வகுப்பு II-ஐ சார்ந்த அலுவலர் என்பதால் தனியரை வயது முதிர்வு ஓய்வில் செல்ல அனுமதிக்கும் அதிகாரம் பெருநகர சென்னை மாநகராட்சி சிறப்பு அதிகாரி (மன்றம்) அவர்களின் வசம் உள்ளது.

ஆகவே, மேற்காணும் விவரங்களின் அடிப்படையிலும் மற்றும் பெருநகர மருத்துவ அலுவலர்/கூடுதல் இயக்குநர் (பொ) அவர்களின் பரிந்துரையின் அடிப்படையிலும், டாக்டர்.எஸ்.சசிகலா, மருத்துவ அலுவலர், திருவொற்றியூர் மருத்துவ மண்டலம் (பணிமாற்று அடிப்படையில் பொதுசுகாதாரத்துறை, பணியாளர்கள் தலைமை மருந்தகம்) அவர்கள் மீது 2018-2019 மற்றும் 2019-2020 ஆம் ஆண்டுகளுக்கான தணிக்கை அறிக்கைகள் உள்ளாட்சி நிதித் தணிக்கையின் அறிக்கை வெளியிடப்படாத நிலையில், நிதி சம்மந்தப்பட்ட தணிக்கை தடைகளால் மாநகராட்சிக்கு நிதி இழப்பீடு, நீண்ட கால முன்பணம் பெற்று தீர்வு செய்யப்படாமை ஆகிய காரணங்களால் நிதி இழப்பீடு ஏதேனும் நிலுவையில் இருப்பது பின்னர் தெரியவரின், அவைகளுக்கு தனியரை பொறுப்பாக்கி அத்தொகைகளை அவரது ஓய்வூதிய பயன்களிலிருந்து பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைகளுக்குட்பட்டு தனியரை 31.05.2019 அன்று பிற்பகல் முதல் வயது முதிர்வு ஓய்வில் செல்ல, சிறப்பு அதிகாரி – மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 21.05.2019 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**"வயது முதிர்வு ஓய்வில் செல்ல சிறப்பு அதிகாரி- மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".**

*********

**பொ.து.ந.க.எண்.பி15/8880/2019**

**தீர்மான எண்.271/2019** **நாள்:22.05.2019**

**பெருநகர சென்னை மாநகராட்சி - பொதுத்துறை (ஓய்வூதியப்பிரிவு)- ஓய்வூதியம் - 01.01.2019 முதல் உயர்த்தப்பட்ட அகவிலைப்படியை பெருநகர சென்னை மாநகராட்சி ஓய்வூதியர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியர்களுக்கு வழங்குதல் - அரசாணை வெளியிடப்பட்டுள்ளது - அரசாணையினை பெருநகர சென்னை மாநகராட்சியில் நடைமுறைப்படுத்த அனுமதி.**

அரசாணை நிலை எண்.154, நிதித்(ஓய்வூதியம்)துறை, நாள்.20.05.2019-ன்படி ஓய்வூதியர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியர்களுக்கு 01.01.2019 முதல் அகவிலைப்படி 9 விழுக்காட்டிலிருந்து 12 விழுக்காடாக உயர்த்தி வழங்க ஆணையிடப்பட்டுள்ளது. இவ்வரசாணை உள்ளாட்சி அமைப்புகளுக்கும் பொருந்துமென அறிவிக்கப்பட்டுள்ளது.

ஓய்வூதியதாரர் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கு உயர்த்தப்பட்ட வீதத்திலான அகவிலைப்படி 01.01.2019 முதல் வழங்கப்படவேண்டும் எனவும், திருத்தப்பட்ட அகவிலைப்படியைக் கணக்கிடுகையில் ஒரு ரூபாய்க்கு குறைவாக வரக்கூடிய தொகை அது 50 காசும், அதற்கு மேலும் இருக்குமாயின், அது அடுத்த ஒரு ரூபாயாக கணக்கிடப்பட வேண்டும். அதுவே 50 காசுக்குக் குறைவாக இருந்தால் அது விட்டுவிடப்பட வேண்டும் எனவும் மேற்படி அரசாணையில் ஆணையிடப்பப்பட்டுள்ளது.

30.04.2019 அன்று பெருநகர சென்னை மாநகராட்சியில் ஓய்வூதியர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியர்கள் 17534 நபர்கள் உள்ளனர். இவ்வரசாணையை நடைமுறைப்படுத்தி திருத்தப்பட்ட அகவிலைப்படி வழங்க ஒரு மாதத்திற்கு ரூ.70.30 இலட்சம் கூடுதல் செலவாகும். நடப்பு நிதியாண்டில் தற்போது (01.01.2019 முதல் 30.04.2019) வரை மட்டும் செலவாகும் கூடுதல் தொகை ரூ.2.81 கோடி ஆகும். நடப்பு நிதி ஆண்டு 2019-20 க்கு செலவாகும் கூடுதல் தொகை ரூ.8.44 கோடி ஆகும்.

எனவே, அரசாணை நிலை எண்.154, நிதித்(ஓய்வூதியம்)துறை, நாள்.20.05.2019-ன்படி திருத்தப்பட்ட அகவிலைப்படி 9 விழுக்காட்டிலிருந்து 12 விழுக்காடாக பெருநகர சென்னை மாநகராட்சியில் ஓய்வூதியம் / குடும்ப ஓய்வூதியம் பெறும் ஓய்வூதியதாரர்களுக்கு 01.01.2019 முதல் உயர்த்தி வழங்கவும், 01.01.2019 முதல் 30.04.2019 வரையிலான அகவிலைப்படி நிலுவைத் தொகையினை மே 2019 மாத ஓய்வூதியத்துடன் சேர்த்து வழங்கும் பொருட்டு மேற்படி 20.05.2019 நாளிட்ட அரசாணை எண்.154, நிதித் (ஓய்வூதியம்) துறையினை பெருநகர சென்னை மாநகராட்சியில் நடைமுறைப்படுத்தி பெருநகர சென்னை மாநகராட்சி ஓய்வூதியர் / குடும்ப ஓய்வூதியர்களுக்கு வழங்க சிறப்பு அதிகாரி-நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 22.05.2019 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**“அரசாணையை அமல்படுத்த சிறப்பு அதிகாரி-நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது”.**

*****

**பொ.து.ந.க.எண்.இ9/13741/2019**

**தீர்மான எண்.272/2019** **நாள்:27-05-2019**

**பணியமைப்பு - பெருநகர சென்னை மாநகராட்சி - பொதுத்துறை நான்காம் நிலைப் பணியாளர் திருமதி.ஜி.தனலட்சுமி, துப்புரவு பணியாளர், பணி எண்.730590, கோட்டம்-53, மண்டலம்-5 அவர்கள் 29.05.2019 அன்று பிற்பகல் முதல் தன்விருப்ப ஓய்வில் செல்ல அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-5, பகுதி-12, கோட்டம்-53ல் துப்புரவு பணியாளராக பணிபுரிந்து வரும் திருமதி.ஜி.தனலட்சுமி, பணியாளர் எண்.730590 அவர்கள் சென்னை மாநகராட்சி மண்டலம்-9, பகுதி-27, கோட்டம்-140ல் நிரந்தர பணியாளராக 06.01.1998 முதல் பணிபுரிந்து வரும் தனக்கு 58 வயது கடந்துள்ள நிலையில் உடல்நலம் பாதிப்பு ஏற்பட்டதால், குடும்ப சூழ்நிலை காரணமாக தன் விருப்ப ஓய்வில் செல்வதற்கு அனுமதிக்குமாறு சிறப்பு அதிகாரி/மன்றம் அவர்களுக்கு 01.03.2019 அன்று மனு அளித்துள்ளார்.

மேற்காணும் தனியரின் பணிப்பதிவேட்டின்படி, திருமதி.ஜி.தனலட்சுமி, துப்புரவு பணியாளர் அவர்கள் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, அரசாணை எண்.158, நாள்.19.06.1997-ன்படி சென்னை மாநகராட்சி ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணையின்படி 06.01.1998 அன்று முதல் நிரந்தர துப்புரவு பணியாளராக பழைய மண்டலம்-9, பகுதி-27, கோட்டம்-40ல் பணியமர்த்தப்பட்டு, தற்போது மண்டலம்-5ல் பணிபுரிந்து வரும் தனியருக்கு அப்பதவியில் பணிவரன்முறை மற்றும் தகுதிகாண் பருவம் வழங்கப்பட்டும், தனியருக்கு தேர்வு நிலை மற்றும் சிறப்பு நிலை ஊதியம் வழங்கப்பட்டு அப்பதவியில் 21 ஆண்டுகள் பணி நிறைவு செய்துள்ளார்.

சென்னை மாநகராட்சி சிந்தாதிரிப்பேட்டை, தொழிலாளர் கூட்டுறவு சங்கம் லிட். அவர்களின் 15.03.2019 நாளிட்ட கடிதத்தில் தனியர் சங்கத்தில் உறுப்பினர் இல்லை எனவும், நிலுவை தொகை ஏதும் இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சி காவல்து துணை கண்காணிப்பாளர்/ விழிப்பு அலுவலர், விழிப்பு குழுமம் அவர்களின் 23.04.2019 நாளிட்ட கடிதத்தில் தனியரின் மீது விசாரணை ஏதும் இன்றைய தேதியில் நிலுவையில் இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

வட்டார துணை ஆணையர் (வடக்கு) அவர்களின் 21.05.2019 நாளிட்ட குறிப்பில், திருமதி.ஜி.தனலட்சுமி, துப்புரவு பணியாளர் அவர்கள் மீது துறை ரீதியாக குற்றச்சாட்டுகள் நிலுவையில் இல்லை எனவும், தன்விருப்ப ஓய்வில் செல்வதற்கு மூன்று மாத அறிவிப்பு காலத்தில் சம்பளமில்லா விடுப்பு ஏதும் துய்க்கவில்லை என மண்டல அலுவலர், மண்டலம்-5 அவர்களால் 10.05.2019 நாளிட்ட கடிதத்தில் தெரிவித்துள்ளதால், தனியரை 29.05.2019 அன்று பிற்பகல் முதல் தன்விருப்ப ஓய்வில் செல்வதற்கு, ஆணையர் அவர்களின் அனுமதி வேண்டி கோப்பு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

தனியரின் பணிப்பதிவேட்டின்படி திருமதி.ஜி.தனலட்சுமி, துப்புரவு பணியாளர், அவர்களின் பிறந்த தேதி 07.03.1961 என்பதால், தனியர் ஓய்வு பெறும் நாள் 31.03.2021 ஆகும். மேலும், தனியரின் வயது 58 வயது பூர்த்தி அடைந்து 21 ஆண்டுகள் பணி நிறைவு செய்துள்ளார்.

**பொ.து.ந.க.எண்.இ9/13741/2019**

மேற்காணும், வட்டார துணை ஆணையர் (வடக்கு) அவர்களின் குறிப்பின்படி, திருமதி.ஜி.தனலட்சுமி, துப்புரவு பணியாளர் (பணி எண்.730590) கோட்டம்-53, பகுதி-12, மண்டலம்-5 அவர்களின் 01.03.2019 நாளிட்ட தன்விருப்ப ஓய்வு கோரிய மனுவினை ஏற்கப்பட்டு, பெருநகர சென்னை மாநகராட்சிக்கு செலுத்த வேண்டிய நிலுவை தொகை, நிதி இழப்பீடு, தணிக்கை தடை மற்றும் நீண்டகால முன்பணம் நிலுவை ஏதேனும் இருப்பது பின்னர் தெரியவரின், தனியரின் ஓய்வூதிய பணிக்கொடையிலிருந்து பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைக்குட்பட்டு, திருமதி.ஜி.தனலட்சுமி, துப்புரவு பணியாளர் அவர்களை 29.05.2019 அன்று பிற்பகல் முதல் தன்விருப்ப ஓய்வில் செல்ல சிறப்பு அதிகாரி-மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 24.05.2019 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**"தன்விருப்ப ஓய்வில் செல்ல சிறப்பு அதிகாரி-மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".**

*****

**பொ.து.ந.க.எண்.ஈ1/13021/2019**

**தீர்மான எண்.273/2019** **நாள்:27-05-2019**

**பணியமைப்பு - பெருநகர சென்னை மாநகராட்சி - பொதுத்துறை- திருமதி.ஜி.சுகுணா, உதவி கணக்கு அலுவலர், பகுதி கணக்கு குழுமம், மண்டலம் 12 அவர்கள் 31.05.2019 அன்று பிற்பகல் முதல் வயது முதிர்வு ஓய்வில் செல்ல அனுமதி.**

நிதி ஆலோசகர் அவர்களின் 14.05.2019 நாளிட்ட குறிப்பில், பொதுத்துறையின் 16.12.2018 நாளிட்ட சுற்றறிக்கையின்படி, பெருநகர சென்னை மாநகராட்சி, பகுதி கணக்கு குழுமம் மண்டலம்-12ல், உதவி கணக்கு அலுவலராக பணிபுரியும் திருமதி.ஜி.சுகுணா அவர்கள் வயது முதிர்வு ஓய்வு காரணமாக 31.05.2019 அன்று பிற்பகல் முதல் ஓய்வு பெறவுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து, தனியரை வயது முதிர்வு ஓய்வில் செல்ல ஆணையர் அவர்களுக்கு கோப்பு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. தனியர் பிறந்த தேதி 28.05.1961 ஆகும்.

திருமதி.ஜி.சுகுணா, உதவி கணக்கு அலுவலர், பகுதி கணக்கு குழுமம் அவர்கள் பெருநகர சென்னை மாநகராட்சியில் முதன் முதலாக 29.06.1982 அன்று அடிப்படை சுகாதார பணியாளராகவும், 27.01.1986 முதல் இளநிலை உதவியாளராகவும், 28.11.1994 முதல் உதவியாளராகவும், 04.02.2008 முதல் பிரிவு மேலாளராகவும், 12.04.2013 முதல் நிர்வாக அலுவலராகவும் மற்றும் 04.01.2016 முதல் உதவி கணக்கு அலுவலராகவும் பதவி உயர்வு பெற்று பணிபுரிந்து வருகின்றார். தனியர் பணிபுரிந்து வந்துள்ள துறைகள்/ மண்டல அலுவலகங்கள் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

| வ. எண் | பதவி | துறை | காலங்கள் |
|---|---|---|---|
| 1 | அடிப்படை சுகாதார பணியாளர் | சுகாதார துறை | 29.06.1982 மு.ப. முதல் 26.01.1986 பி.ப. வரை |
| 2 | இளநிலை உதவியாளர் | உதவி ஆணையர் (தெற்கு) தற்போது புதிய மண்டலம் 9 | 27.01.1986 மு.ப. முதல் 21.03.1990 பி.ப. வரை |
| 3 | இளநிலை உதவியாளர் | பொதுத்துறை (மாற்றுப்பணி தணிக்கை பிரிவு) | 22.03.1990 மு.ப. முதல் 06.10.1993 பி.ப.வரை |
| 4 | இளநிலை உதவியாளர் | பணிகள் துறை (தனியார் தெருக்கள்) | 06.10.1993 பி.ப. முதல் 28.11.1994 வரை |
| 5 | உதவியாளர் | மத்திய கணக்கு குழுமம் | 28.11.1994 பி.ப. முதல் 04.02.2008 பி.ப. வரை |
| 6 | பிரிவு மேலாளர் | கல்வித்துறை | 04.02.2008 பி.ப. முதல் 18.12.2008 பி.ப. வரை |
| 7 | பிரிவு மேலாளர் | இயந்திர பொறியியல் துறை | 18.12.2008 பி.ப. முதல் 12.04.2013 பி.ப. வரை |
| 8 | நிர்வாக அலுவலர் | தொற்று நோய் மருத்துவமனை | 12.04.2013 பி.ப. முதல் 29.07.2013 மு.ப. வரை |
| 9 | நிர்வாக அலுவலர் | மண்டலம் 7 | 29.07.2013 பி.ப. முதல் 04.01.2016 மு.ப. வரை |
| 10 | கணக்கு அலுவலர் (பொ) | மண்டலம் 7 | 22.10.2013 முதல் 03.07.2014 வரை |
| | | மண்டலம் 11 | 04.07.2014 முதல் 14.09.2015 வரை |
| | | மண்டலம் 5 | 15.09.2015 முதல் 04.01.2016 வரை |
| 11 | உதவி கணக்கு அலுவலர் | மத்திய கணக்கு குழுமம் | 04.01.2016 மு.ப. முதல் இந்நாள் வரை |

**பொ.து.ந.க.எண்.ஈ1/13021/2019**

தனியர் பணிபுரிந்த பிற மண்டலங்கள் / துறைகளில் நேர் செய்யப்படாத முன்பணங்கள்/அலுவலக முன்பணங்கள் மற்றும் ஒழுங்கு நடவடிக்கைகள் ஏதும் நிலுவையில் இல்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

22.01.2019 நாளிட்ட கடிதத்தில், தனியர் சென்னை மாநகராட்சி அலுவலர் கூட்டுறவு சங்கத்தில் உறுப்பினர் எனவும், கடன் தொகை நிலுவை இல்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சி, நிதி ஆலோசகர் அவர்களின் 24.04.2019 நாளிட்ட குறிப்பின்படி, தனியர் நிர்வாக அலுவலர், கணக்கு அலுவலர் (பொ) மற்றும் உதவி கணக்கு அலுவலராக மண்டலம் / துறைகள் /வட்டார அலுவலகங்களில் பணிபுரிந்த காலங்களில் 2013-2014 ஆம் ஆண்டு முதல் 2016-2017 ஆம் ஆண்டு வரை தணிக்கை அறிக்கைகளின்படி, இணைக்கப்பட்டுள்ள அட்டவணையின்படி மொத்தம் ரூ.1,51,088/- உள்ளடக்கிய 6 தணிக்கைத்தடை பத்திகள் கூட்டு பொறுப்பு மற்றும் தனிப்பொறுப்பில் நிலுவை உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், தணிக்கை தடைகள் கூட்டுப்பொறுப்பில் தனியருக்கு மட்டும் ரூ.50,362/- (ரூபாய் ஐம்பதாயிரத்து முன்னூற்று அறுபத்து இரண்டு மட்டும்) உள்ளடக்கிய 6 தணிக்கை தடைபத்தி தனிப்பொறுப்பில் நிலுவையில் உள்ளது எனவும், தனியருக்கு பொதுத்துறையில் உதவி கணக்கு அலுவலர் பதவியில் ஊதியம் மிகையாக வழங்கியதாக திருத்தம் செய்து பிடித்தம் செய்ய உள்ளாட்சி நிதி தணிக்கைத்துறை தணிக்கை எழுப்பி உள்ளது எனவும், மேலும் 2017-18, 2018-19 மற்றும் 2019- 2020 ஆம் ஆண்டு வரை உள்ளாட்சி நிதித் தணிக்கை துறையால் தணிக்கை அறிக்கைகள் வெளியிடப்படவில்லை எனவும், மேற்காணும் ஆண்டுகளுக்கான தணிக்கை அறிக்கைகள் வெளியிடப்பட்ட பின்னர், தனியரை பொறுப்பாக்கும் தணிக்கைத் தடை பத்திகள் ஏதும் நிலுவையில் இருப்பின் அதன் பொறுப்பு தனியரையே சாரும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

| வ. எண். | மண்டலம் / துறை | ஆண்டு | பத்தி எண் | தணிக்கைக்குட் படுத்தப்பட்டத் தொகை (ரூ.) | தடைக்கு பொறுப்பான பணியாளர்களின் எண்ணிக்கை மொத்தம் | திருமதி ஜி.சுகுணா உ.க.அ. பொறுப்பாக்கும் தொகை(ரூ.) |
|---|---|---|---|---|---|---|
| 1 | மண்டலம் - 7 | 2013-2014 | 73 | 1,08388.00 | 3 | 36,129.00 |
| 2 | மண்டலம் - 7 | 2013-2014 | 134 | 42,700.00 | 3 | 14,233.00 |
| 3 | மண்டலம் - 7 | 2013-2014 | 143 | - | - | - |
| 4 | மண்டலம் - 7 | 2014-2015 (கு) | 24 | - | - | - |
| 5 | மண்டலம் - 12 | 2015-2016 (அ) | 46 | - | - | - |
| 6 | மண்டலம் - 12 | 2015-2016 (அ) | 57 | - | - | - |
| | **மொத்தம்** | | **6** | **1,51,088.00** | | 50,362.00 |

சென்னை மாநகராட்சி விழிப்பு துறையின் 07.05.2019 நாளிட்ட கடிதத்தில், தனியர் மீது இன்றைய தேதியில் சென்னை மாநகராட்சி விழிப்பு துறையில் விசாரணைகள் ஏதும் நிலுவையில் இல்லை என்ற அறிக்கை பெறப்பட்டுள்ளது. தனியர் மீது துறை சார்ந்த ஒழுங்கு நடவடிக்கைகளோ அல்லது விசாரணைகளோ தற்போது நிலுவை ஏதும் இல்லை எனத் தெரிவித்து கொள்ளப்படுகிறது.

தனியரின் 08.05.2019 நாளிட்டஉறுதிமொழி கடிதத்தில், பெருநகர சென்னை மாநகராட்சி, மத்திய கணக்கு குழுமம் (பகுதி கணக்கு குழுமத்தில் மண்டலம் 12)ல் உதவி கணக்கு அலுவலராக பணியாற்றி வயது முதிர்வு காரணமாக 31.05.2019 ஆம் தேதியன்று பணியிலிருந்து ஓய்வு பெற்வுள்ளதால், தணிக்கைத் தடை நிலுவை பத்திகள், வருவாய் இழப்பு, முன்பண நிலுவை மற்றும் தவறான மிகை ஊதிய நிர்ணயம் பெற்றதாக பின்னர் தெரியவரின், அத்தொகையினை எனக்கு அளிக்கப்படும் இறப்பு (மற்றும்) ஓய்வுகால பணிக்கொடையிலிருந்து ஒரே தவணையாக பிடித்தம் செய்து கொள்ளலாம் என சம்மதம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சியில் வகுப்பு-II ன் கீழ்வரும் உதவி கணக்கு அலுவலர் பதவியில் உள்ளவர்களை வயது முதிர்வு ஓய்வில் செல்ல அனுமதிக்கும் அதிகாரம் மன்றத்தின் அனுமதி பெறப்படப்பட வேண்டும். தற்போது மன்றம் 24.10.2016 அன்றுடன் முடிவடைந்துள்ளது.

**பொ.து.ந.க.எண்.ஈ1/13021/2019**

அரசாணை(ப) எண்.147, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை நாள்.24.10.2016ன்படி பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சிறப்பு அதிகாரி நியமனம் செய்யப்பட்டுள்ளதால், தனியரை வயது முதிர்வு ஓய்வில் செல்ல அனுமதிக்கும் அதிகாரம் சிறப்பு அதிகாரி-மன்றம் அவர்கள் வசம் உள்ளது.

எனவே, நிதி ஆலோசகர், பெருநகர சென்னை மாநகராட்சி அவர்களின் கடிதத்தின்படி, திருமதி.ஜி.சுகுணா, உதவி கணக்கு அலுவலர் அவர்கள் மீது தனிப்பொறுப்பில் உள்ள தணிக்கைத்தொகை ரூ.50,362/- (ரூபாய் ஐம்பதாயிரத்து முன்னூற்று அறுபத்து இரண்டு மட்டும்) உள்ளடக்கிய 6 தணிக்கை தடைபத்தி தனிப்பொறுப்பில் நிலுவையில் உள்ளதையும், தனியருக்கு உதவி கணக்கு அலுவலர் பதவியில் ஊதியம் மிகையாக வழங்கியதாக திருத்தம் செய்து பிடித்தம் செய்ய உள்ளாட்சி நிதி தணிக்கைத்துறை தணிக்கை எழுப்பி உள்ளதையும் மற்றும் 2017-18, 2018 -19 மற்றும் 2019- 2020 ஆம் ஆண்டு வரை உள்ளாட்சி நிதித் தணிக்கை துறையால் தணிக்கை அறிக்கைகள் வெளியிடப்படவில்லை அவற்றிற்கும் தனியரை முழுபொறுப்பாக்கி அன்னாருக்கு வழங்கப்படும் பணிக்கொடை மற்றும் ஒய்வூதிய தொகையிலிருந்து பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைக்குட்பட்டும், தனியரை 31.05.2019 அன்று பிற்பகல் முதல் வயது முதிர்வு ஓய்வில் செல்ல அனுமதிக்க சிறப்பு அதிகாரி – மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 24.05.2019 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**“வயது முதிர்வு ஓய்வில் செல்ல சிறப்பு அதிகாரி-மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது”.**

*********

**பொ.து.ந.க.எண்.ஈ2/13734/2019**

**தீர்மான எண்.274/2019** **நாள்:28-05-2019**

**பணியமைப்பு - பெருநகர சென்னை மாநகராட்சி - பொதுத்துறை- மருத்துவ சேவைகள் துறை - டாக்டர்.வை.சாந்தி, கூடுதல் பெருநகர மருத்துவ அலுவலர், அவர்கள் 31.05.2019 அன்று பிற்பகல் வயது முதிர்வு ஓய்வில் செல்ல அனுமதி.**

பெருநகர மருத்துவ அலுவலர் / கூடுதல் இயக்குநர் (பொ.) அவர்களின் 21.05.2019 நாளிட்ட கடிதத்தில், பொதுத்துறையின் 16.12.2018 நாளிட்ட சுற்றறிக்கையில், டாக்டர்.வை.சாந்தி, கூடுதல் பெருநகர மருத்துவ அலுவலர் (பெருநகர மருத்துவ அலுவலர் (பொ)) அவர்கள் 31.05.2019 அன்று பிற்பகல் முதல் வயது முதிர்வு காரணமாக ஓய்வு பெறவுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவருடைய பிறந்த தேதி 12.05.1961.

தனியர் 24.08.1987 முதல் திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் மருத்துவ அலுவலராக பணியில் சேர்ந்தார், அதன் பின்னர் பல்வேறு மண்டலங்களில்/துறைகளில் பணிபுரிந்த விவரங்கள் பின்வருமாறு:

| வ. எண் | வகித்த பதவி | துறை/மண்டலம் | பணிபுரிந்த காலம் |
|---|---|---|---|
| 1 | மருத்துவ அலுவலர் | திருச்சிராப்பள்ளி மாநகராட்சி | 24.08.1987 முதல் 03.04.1988 வரை |
| 2 | | பாளையங்கோட்டை நகராட்சி | 04.04.1988 முதல் 25.10.1989 வரை |
| 3 | | திருநெல்வேலி நகராட்சி | 25.10.1989 முதல் 17.03.1992 வரை |
| 4 | | தாம்பரம் நகராட்சி | 23.03.1992 முதல் 29.06.1994 வரை |
| 5 | | பல்லவபுரம் நகராட்சி | 30.06.1994 முதல் 28.05.1997 வரை |
| 6 | | ஆலந்தூர் நகராட்சி | 28.05.1997 முதல் 25.10.2011 வரை |
| 7 | | ஆலந்தூர் மருத்துவ மண்டலம் | 26.10.2011 முதல் 05.02.2013 வரை |
| 8 | | அடையார் மருத்துவ மண்டலம் | 06.02.2013 முதல் 25.09.2013 வரை |
| 9 | | அம்பத்தூர் மருத்துவ மண்டலம் | 26.09.2013 முதல் 22.10.2013 வரை |
| 10 | மண்டல மருத்துவ அலுவலர் | அம்பத்தூர் மருத்துவ மண்டலம் | 23.10.2013 முதல் 04.03.2014 வரை |
| 11 | | சோழிங்கநல்லூர் மண்டலம் | 05.03.2014 முதல் 10.06.2016 வரை |
| 12 | | திரு.வி.க.நகர் மருத்துவ மண்டலம் | 11.06.2016 முதல் 13.07.2016 வரை |
| 13 | | தேனாம்பேட்டை மருத்துவ மண்டலம் | 14.07.2016 முதல் 10.10.2017 வரை |
| 14 | கூடுதல் பெருநகர மருத்துவ அலுவலர்/ இயக்குநர் (பொ) | மருத்துவ சேவைகள் துறை (தலைமையிடம்) | 11.10.2017 முதல் 31.10.2017 வரை |
| 15 | கூடுதல் பெருநகர மருத்துவ அலுவலர்/ இயக்குநர் | மருத்துவ சேவைகள் துறை (தலைமையிடம்) | 01.11.2017 முதல் 06.02.2018 வரை |
| 16 | பெருநகர மருத்துவ அலுவலர்/ கூடுதல் இயக்குநர் (பொ) | மருத்துவ சேவைகள் துறை (தலைமையிடம்) | 07.02.2018 முதல் 31.05.2019 வரை |

தனியருக்கு மருத்துவ அலுவலர் பதவியில் மூ.மூ.சி4/6484/1990ன்படி, 03.04.1990 பிற்பகல் முதல் தகுதிகாண்பருவமும், ந.க.எண்.25234/எச்3/2018, நாள்.13.11.2018ன்படி 04.04.1988 முற்பகல் முதல் பணிவரன்முறையும் செய்து ஆணை வழங்கப்பட்டுள்ளது.

தனியர் பணிபுரிந்துள்ள மண்டலம்/துறைகளிலிருந்து முன்பண நிலுவை மற்றும் ஒழுங்கு நடவடிக்கை ஏதும் நிலுவையில் இல்லையெனச் சான்றுகள் பெறப்பட்டுள்ளது.

மேலும், பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலர் கூட்டுறவு சங்கத்தின் 03.01.2019 நாளிட்ட கடிதத்தில் **சங்க உறுப்பினர் இல்லை** என சான்றிதழ் அளிக்கப்பட்டுள்ளது.

விழிப்பு அலுவலர், விழிப்பு குழுமம் அவர்களின் 07.05.2019 நாளிட்ட கடிதத்தில், தனியர் மீது விழிப்புக்குழுமத்தில் விசாரணை ஏதும் நிலுவையில் இல்லை என அறிக்கை பெறப்பட்டுள்ளது.

**பொ.து.ந.க.எண்.ஈ2/13734/2019**

நிதி ஆலோசகர் அவர்களின் 29.01.2019 மற்றும் 13.05.2019 நாளிட்ட குறிப்பில், டாக்டர்.வி.சாந்தி, கூடுதல் பெருநகர மருத்துவ அலுவலர்/இணை இயக்குநர் மற்றும் பெருநகர மருத்துவ அலுவலர்/கூடுதல் இயக்குநராக (பொ), மருத்துவ சேவைகள் துறையில் பணிபுரிந்த காலங்களில் 2011-2012 முதல் 2017-2018 ஆம் ஆண்டு வரை தணிக்கை அறிக்கை குறித்த பத்திகள், இவ்வலுவலகத்தில் உள்ள உள்ளாட்சி நிதித்தணிக்கை அறிக்கைகளின்படி நிலுவை ஏதுமில்லை என்றும்,

மேலும், 2018-2019 ஆம் ஆண்டு முதல் 2019-2020 ஆம் ஆண்டுகளுக்கான தணிக்கை அறிக்கைகள் உள்ளாட்சி நிதி தணிக்கைத் துறையால் வெளியிடப்படவில்லை என்றும் மேற்காணும் ஆண்டுகளுக்கான தணிக்கை அறிக்கைகள் வெளியிடப்பட்ட பின்னர், தணிக்கை தடை பத்திகள் பணியாளரை சார்ந்தது என்பது பின்னர் தெரியவரும் பட்சத்தில் தனியர் மீது பொறுப்பு நிர்ணயிக்கப்படும் என்றும் அறிக்கை அளிக்கப்பட்டுள்ளது.

மேலும், தனியர் மீது தணிக்கைத் தடை, ஒழுங்கு நடவடிக்கை மற்றும் இழப்பீடுகள் ஏதும் நிலுவையில் இல்லை என்றும், தனியரது சம்பள சான்றின்படி எவ்வித நீண்ட கால முன்பணம் ஏதும் பிடித்தம் செய்ய வேண்டியது இல்லை என்றும், சென்னை மாநகராட்சி உள்ளிருப்பு குடியிருப்பு ஏதும் ஒதுக்கி தரப்படவில்லை என்றும் சான்று பெறப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், துணை ஆணையர் (சுகாதாரம்) அவர்களின் செயல்முறை ஆணை ம.சே.து.ந.க.எண்.எப்4/2793/2015, நாள்.19.11.2018ன்படி, தனியருக்கு அரசாணை (ப) எண்.583, ந.நி.ம.கு.வ.துறை, நாள்.26.11.2010ன்படி, தனியருக்கு கூடுதலாக வழங்கப்பட்ட கடைசி தவணை தொகை மே மாத சம்பளத்தில் ரூ.70,458/-னை பிடித்தம் செய்யப்படும் எனவும் 21.05.2019 நாளிட்ட கடிதத்தின் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தனியர் மீது 31.05.2019 வரை தனிப்பட்ட முறையிலோ கூட்டு பொறுப்பிலோ தனியரை பொறுப்பாக்கி நிதி இழப்பீடு இருப்பது குறித்து தெரியவரின் அத்தொகையை தனியருக்கு வழங்கப்படவுள்ள ஓய்வூதிய பயன்கள், ஓய்வூதிய அகவிலைப்படியிலிருந்து பிடித்தம் செய்து கொள்ள தனியர் ரூ.20/- முத்திரை தாளில் சம்மதித்து ஒப்புதல் அளித்துள்ளார்.

மேலும், தனியர் வகுப்பு 1-பிஜ சார்ந்த அலுவலர் என்பதால் தனியரை வயது முதிர்வு ஓய்வில் செல்ல அனுமதிக்கும் அதிகாரம் பெருநகர சென்னை மாநகராட்சி சிறப்பு அதிகாரி (மன்றம்) அவர்களின் வசம் உள்ளது.

ஆகவே, மேற்காணும் விவரங்களின் அடிப்படையிலும் மற்றும் பெருநகர மருத்துவ அலுவலர்/கூடுதல் இயக்குநர் (பொ) அவர்களின் பரிந்துரையின் அடிப்படையிலும், டாக்டர்.வி.சாந்தி, கூடுதல் பெருநகர மருத்துவ அலுவலர்/இணை இயக்குநர் மற்றும் பெருநகர மருத்துவ அலுவலர்/கூடுதல் இயக்குநர், மருத்துவ சேவைகள் துறை அவர்கள் மீது 2018-2019 மற்றும் 2019-2020 ஆம் ஆண்டுகளுக்கான தணிக்கை அறிக்கைகள் உள்ளாட்சி நிதித் தணிக்கையின் அறிக்கை வெளியிடப்படாத நிலையில், நிதி சம்மந்தப்பட்ட தணிக்கை தடைகளால் மாநகராட்சிக்கு நிதி இழப்பீடு, நீண்ட கால முன்பணம் பெற்று தீர்வு செய்யப்படாமை ஆகிய காரணங்களால் நிதி இழப்பீடு ஏதேனும் நிலுவையில் இருப்பது பின்னர் தெரியவரின், அவைகளுக்கு தனியரை பொறுப்பாக்கி அத்தொகைகளை அவரது ஓய்வூதிய பயன்களிலிருந்து பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைகளுக்குட்பட்டு தனியரை 31.05.2019 அன்று பிற்பகல் முதல் வயது முதிர்வு ஓய்வில் செல்ல சிறப்பு அதிகாரி-மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 27.05.2019 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**“வயது முதிர்வு ஓய்வில் செல்ல சிறப்பு அதிகாரி-மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது”.**

*****

சு.து. ந.க .எண்.***NUHM/பி2/2404 /2019***

**தீர்மான எண்.*275/2019*** **நாள்:*28-05-2019***

**பெருநகர சென்னை மாநகராட்சி - பொது சுகாதாரத்துறை - தேசிய நகர்ப்புற சுகாதாரத்திட்டம் - பெருநகர சென்னை மாநகராட்சியில் செயல்பட்டு வரும் 12 தீவிர சிசு கண்காணிப்பு பிரிவு *(New Born Stabilization Unit)*, 3 மகப்பேறு மருத்துவமனையக் மற்றும் 7 நகர்ப்புற சமுதாய நல மையங்களுக்கு தேவையான 65 செவிலியர்களை *(Staff Nurse)* ஒப்பந்த அடிப்படையில் *02.05.2018* முதல் *01.04.2019* வரையில் பதினொரு மாத காலத்திற்கு பணியமர்த்த *M/s Monisha Security Agency* நிறுவனத்திற்கு பணியாணை வழங்கப்பட்டது - இந்த பணியாணையினை *02.04.2019* முதல் *16.05.2019* வரை மேலும் 45 நாட்களுக்கு பணி நீட்டிப்பு செய்யப்பட்டது - ஒப்பந்தம் முடிவடைந்த நிலையில் இந்த *65* செவிலியர்களுக்கு சம்பந்தப்பட்ட மருத்துவ அலுவலர்கள் மூலம் *17.05.2019* முதல் *31.05.2019* வரை 15 நாட்களுக்கு ஊதியம் நேரடியாக வழங்குவதற்கு அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, பொதுசுகாதாரத்துறையில் தேசிய நகர்ப்புற சுகாதாரத்திட்ட வழிகாட்டுதல்களின்படி, சிறப்பு அதிகாரி/மன்றத்தீர்மான எண்.332/2018 நாள்.25.04.2018ன்படி நகர்ப்புற ஆரம்ப சுகாதார மையங்களுக்கு தேவையான 65 செவிலியர்களை(Staff Nurses), M/s. Monisha Security Agency நிறுவனத்தின் மூலம் ஒப்பந்த அடிப்படையில் 02.05.2018 முதல் பதினொரு மாத காலத்திற்கு பணியமர்த்தப்பட்டு பணிக்காலமானது 01.04.2019ல் முடிவடைகின்றது.

சிறப்பு அதிகாரி/மன்றத்தீர்மான எண்.918/2018, நாள்.19.11.2018ன்படி இதில் செவிலியர்களுக்கான (Staff Nurses) மாத ஊதியம் ரூ.10500/ என நிர்ணயம் செய்யப்பட்டு 02.05.2018 முதல் 30.11.2018 வரையிலும் மாத ஊதியம் ரூ.14000/ என நிர்ணயம் செய்யப்பட்டு 01.12.2018 முதல் 01.04.2019 வரையிலும் பணியாணை வழங்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற தேர்தல் நடைபெற்ற காரணத்தினால் அடுத்த ஒப்பம் கோரி இறுதி செய்யும் வரையில், மருத்துவ பணிகள் பாதிக்காவண்ணம் தொடர்ந்து மேற்கொள்ள வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டது. ஒப்பந்த விதிகளின்படி ஒப்பந்தத்தினை மேலும் 25% நீட்டிப்பு செய்ய வேண்டிய நிலையில், சிறப்பு அதிகாரி/மன்றத்தீர்மான எண்.223/2019 நாள்.04.04.2019ன்படி மேற்கண்ட 65 செவிலியர்களை(Staff Nurses)பணியமர்த்தும் பணியாணையினை M/s. Monisha Security Agency நிறுவனத்திற்கு 02.04.2019 முதல் 16.05.2019 வரையில் 45 நாட்களுக்கு பணி நீட்டிப்பு செய்து ஆணை பெறப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சியில் நகர்ப்புற சமுதாய நல மையங்கள் மற்றும் மகப்பேறு மருத்துவமனைகளில் கீழ்க்கண்ட அளவில் செவிலியர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.

அட்டவணை. 1

| Sno | Zone | Particulars | No of Staff Nurses Sanctioned |
|---|---|---|---|
| **New Born Corner Stabilization Units** | | | |
| 1 | 5 | R.K Nagar UCHC | 4 |
| 2 | 5 | Sanjeevarayapet UCHC | 4 |
| 3 | 5 | Perumalpet EOC | 4 |
| 4 | 6 | Puliyanthope UCHC | 4 |
| 5 | 7 | Padi UCHC | 4 |
| 6 | 8 | Ayanavaram UCHC | 4 |
| 7 | 8 | Shenoy Nagar EOC | 4 |
| 8 | 9 | Mirshaibpet UCHC | 4 |
| 9 | 10 | Vadapalani UCHC | 4 |
| 10 | 10 | Saidapet EOC | 4 |
| 11 | 12 | Alandur UCHC | 4 |
| 12 | 13 | Adyar UCHC | 4 |

| Existing Urban Community Health Centres | | | |
|---|---|---|---|
| 1 | 4 | Meenambal Nagar, Korukupet, Chennai | 2 |
| 2 | 5 | Sanjeevarayanpet, 110, Solaippan st, Old washermanpet, Chennai-21. | 2 |
| 3 | 6 | 40,Thiruvengadasany Street, Pulianthope, Chennai-600 012. | 2 |
| 4 | 8 | Ayanavaram UCHC,29,United India Colony, Ayanavaram, Ch-23 | 2 |
| 5 | 9 | 11, Begum Sahib Vth Lane, Royapettah, Chennai- 600 014. | 2 |
| 6 | 10 | Vadapalani No: 65, Arcot Road , Kodambakkam, CH-24. | 2 |
| 7 | 13 | 2, Venkatrathnam Nagar,Adyar,Ch-20. | 2 |
| **Maternity Centres** | | | |
| 1 | 5 | Perumalpet EOC | 1 |
| 2 | 8 | Shenay Nagar EOC | 1 |
| 3 | 10 | Saidapet EOC | 1 |
| Total | | | 65 |

திட்ட இயக்குநர் (மாநில சுகாதார சங்கம்-TN) அவர்களின் 24.07.2018செயல்முறை ஆணையில் தமிழகத்தில் உள்ள 27 வட்டார மற்றும் வட்டார அல்லாத மருத்துவமனைகள் உள்ளிட்ட 293 அரசு பல் மருத்துவமனைகளில் பணியாற்றிய பல் அறுவை சிகிச்சை நிபுணர் மற்றும் பல் மருத்துவ உதவியாளர் பணியிடங்களுக்கு பிப்ரவரி 2017 மற்றும் மார்ச் 2017 மாதங்களுக்கான மாத ஊதியம் மற்றும் ஆண்டு ஊதிய உயர்வு ஒப்பந்தாரர் மூலம் வழங்கப்படாமல் அரசு மருத்துவமனை மற்றும் வட்டார ஆரம்ப சுகாதார நிலையங்கள் மூலமாக பல் அறுவை சிகிச்சை நிபுணர்கள் மற்றும் பல் மருத்துவ உதவியாளர்களுக்கும் நேரடியாக பணம் வழங்க ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இதனடிப்படையில், அட்டவணை 1ல் தெரிவிக்கப்பட்டவாறு நகர்ப்புற சமுதாய நல மையங்கள் மற்றும் மகப்பேறு மருத்துவமனைகளில் பணிபுரியும் செவிலியர்களுக்கு சம்பந்தப்பட்ட மருத்துவ அலுவலர்கள் மூலம் 17.05.2019 முதல் 31.05.2019 வரை 15 நாட்களுக்கு ஊதியம், வருகையின் அடிப்படையில் நேரடியாக வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தப்படும் பணியாளர்களுக்கு,பணியாளர் இன்சூரன்ஸ், (Employee's State Insurance) மற்றும் பணியாளர் வருங்கால வைப்பு நிதி (Employee's Provident Fund), கீழ்க்கண்ட அளவில் 16.05.2019 வரையில் ஒப்பந்ததாரர் மூலம் வழங்கப்படும்.

| **Employee's State Insurance** | | **Employee's Provident Fund** | | **GST** |
|---|---|---|---|---|
| **Employer Contribution in the salary** | Employee Contribution in the salary | **Employer Contribution in the salary** | Employee Contribution in the salary | |
| **4.75%** | 1.75% | **13%** | 12.00% | **18%** |

- தற்போது 17.05.2019 முதல் 31.05.2019 வரை 15 நாட்களுக்கு மட்டும் 65 செவிலியர்களுக்கு மாத ஊதியம் மட்டும் வழங்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.
- தற்போது ஒப்பந்தம் முடிவடைந்த நிலையில், பொதுசுகாதார துறை தலைமையிடத்தில் EPF, ESI செலுத்த இயலாத நிலையில், 17.05.2019 முதல் 31.05.2019 வரை 15 நாட்களுக்கு மட்டும் 65 செவிலியர்களுக்கு EPF மற்றும் ESI (Employer and Employee contribution) செலுத்துவதில் தற்சமயம் விலக்கு அளித்து பின்னர் முடிவு எடுக்கவும்,
- ஒப்பந்ததாரர் இல்லாத காரணத்தினால் அவருக்கு வழங்க வேண்டிய நிர்வாக கட்டணம் வழங்க தேவையில்லை. மேலும், தேசிய நகர்ப்புற சுகாதார திட்டத்தின் மூலமே ஊதியம் நேரடியாக வழங்கப்படுவதால் இந்த கால கட்டத்திற்கு GST யும் செலுத்த தேவையில்லை.

- செவிலியர்களுக்கான ஊதியத்தினை அவர்கள் பணிபுரியும் நகர்ப்புற சமுதாய நல மையம் மருத்துவ அலுவலர்களுக்கு PWS Account க்கு அளித்து அவர்கள் மூலமாக செவிலியர்களுக்கு (NEFT/Cheque) ஊதியம் வழங்கலாம்.
- பெருமாள் பேட்டை, செனாய் நகர் மற்றும் சைதாப்பேட்டை மகப்பேறு மருத்துவமனைகள் தேசிய நகர்ப்புற சுகாதாரத்திட்டத்தின் கீழ் வராத காரணத்தினால், அங்கு நோயாளிகள் நல சங்கம் கிடையாது. எனவே, மருத்துவ அலுவலர்களுக்கு PWS Account ம் கிடையாது. இந்த மருத்துவமனைகள் அமைந்துள்ள சமுதாய நல மையத்தின் மருத்துவ அலுவலர் PWS Account க்கு ஊதிய தொகையினை அளித்து அவர்கள் மூலம் ஊதியம் வழங்கலாம்.

**அட்டவணை. 2**

| SNo | Name of the Staff Nurses presently Working | Name of the UCHC the salary fund to be distributed |
|---|---|---|
| 1 | Perumalpet EOC | Sanjeevarayanpet UCHC |
| 2 | Shenoy Nagar EOC | Ayanavaram UCHC |
| 3 | Saidapet EOC | Vadapalani UCHC |

- ஊதியத்தினை அவர்கள் பணிபுரியும் ஆரம்ப சுகாதார மையத்தின் மருத்துவ அலுவலர்களுக்கு அளித்து அவர்கள் மூலமாக செவிலியர்களுக்கு(NEFT/Cheque) ஊதியம் வழங்கலாம். இவ்வாறு செவிலியர்களுக்கு ஊதியம் வழங்கும் போது அவர்களின் ஆண்டு வருமானது (ரூ.14000x12=ரூ.1,68,000) வருமான வரி விலக்கிற்கு உட்பட்டு உள்ளதால், அவர்களுக்கு வருமான வரி பிடித்தம் செய்ய தேவையில்லை.
- மேலும், மண்டல மருத்துவ அலுவலர்கள் மூலம் சம்பந்தப்பட்ட மருத்துவ அலுவலர்களிடம் இருந்து 17.05.2019 முதல் 31.05.2019 வரை 15 நாட்களுக்கு மட்டும் 65 செவிலியர்களுக்கு வருகை பதிவேடு பெற்று அதற்கான தொகையினை விடுவிக்கலாம்.

**அட்டவணை. 3**

**Name of the Post : Staff Nurse**

| Sno | Place | Basic Salary (Rs) | Allowances (Rs) | Total (1+2) | Required Staff | Total Amount (3x4x15 Days) (Rs) |
|---|---|---|---|---|---|---|
| | | 1 | 2 | 3 | 4 | 5 |
| 1 | 12 NBSU,3 EOC,7 UCHC | 7000 | 7000 | 14000 | 65 | 4,40,310 |

எனவே,

1. பெருநகர சென்னை மாநகராட்சியில் செயல்பட்டு வரும் 12 தீவிர சிசு கண்காணிப்பு பிரிவிற்கு (NBSU), 3 மகப்பேறு மருத்துவமனைகள், 7 நகர்ப்புற சமுதாய நல மையங்களுக்கு தேவையான 65 செவிலியர்களை ஒப்பந்த அடிப்படையில் 02.05.2018 முதல் 01.04.2019 வரை பதினொரு மாத காலத்திற்கு M/s.Monisha Security Agency நிறுவனத்தின் மூலம் பணியமர்த்தப்பட்டு மேலும் 02.04.2019 முதல் 16.05.2019 வரையில் 45 நாட்களுக்கு பணி நீட்டிப்பு செய்யபட்டது. இதன் தொடர்ச்சியாக அவசர அவசியம் கருதியும், பொதுமக்கள் நலன் கருதியும், மருத்துவ சேவைகளை பொதுமக்களுக்கு தொடர்ந்து வழங்கிட, அட்டவணை-1ல் தெரிவிக்கப்பட்டவாறு பணிபுரியும் 65 செவிலியர்களுக்கான ஊதியத்தினை அவர்கள் பணிபுரியும் நகர்ப்புற சமுதாய நல மையத்தின் மருத்துவ அலுவலர்களுக்கு அளித்து, அவர்கள் மூலம் 17.05.2019 முதல் 31.05.2019 வரை 15 நாட்களுக்கு மட்டும், வருகையின் அடிப்படையில் ஊதியம் (NEFT/Cheque) வழங்கவும்,

2. இதற்கான மொத்த செலவினம் ரூ.4,40,310/- (ரூபாய் நான்கு லட்சத்து நாற்பதாயிரத்து முன்னூற்றி பத்து மட்டும்) மேற்கொள்ள நிர்வாக அனுமதிக்கும்,
3. பெருமாள் பேட்டை, செனாய் நகர் மற்றும் சைதாப்பேட்டை மகப்பேறு மருத்துவமனைகள் தேசிய நகர்ப்புற சுகாதாரத்திட்டத்தின் கீழ் வராத காரணத்தினால், அங்கு நோயாளிகள் நல சங்கம் கிடையாது. எனவே, மருத்துவ அலுவலர்களுக்கு PWS Account ம் கிடையாது. இந்த மருத்துவமனைகளுக்கு அருகாமையில் உள்ள சமுதாய நல மையத்தின் (அட்டவணை எண் 2 ல் தெரிவிக்கப்பட்டவாறு) மருத்துவ அலுவலர் PWS Account க்கு ஊதியம் வழங்கி அவர்கள் மூலம் ஊதியம் வழங்கவும்,
4. நிர்வாக காரணங்களினால் 17.05.2019 முதல் 31.05.2019 வரை 15 நாட்களுக்கு மட்டும் 65 செவிலியர்களுக்கு EPF மற்றும் ESI (Employer and Employee contribution) செலுத்துவதில் தற்சமயம் விலக்கு அளித்து பின்னர் முடிவு எடுக்கவும்,
5. செவிலியர்களுக்கு ஊதியம் வழங்கும் போது அவர்களின் ஆண்டு வருமானது (ரூ.14000x12=ரூ.1,68,000) வருமான வரி விலக்கிற்கு உட்பட்டு உள்ளதால், அவர்களுக்கு வருமான வரி பிடித்தம் செய்வதில் விலக்கு அளிக்கவும்,
6. தேசிய நகர்ப்புற சுகாதார திட்டம் மூலமே ஊதியம் வழங்கப்படுவதால் இந்த கால கட்டத்திற்கு GST செலுத்த தேவையில்லை.
7. மாதந்தோறும், மண்டல மருத்துவ அலுவலர்கள் மூலம் சம்பந்தப்பட்ட மருத்துவ அலுவலர்களிடம் இருந்து வருகை பதிவேடு பெற்று அதற்கான தொகையினை சம்பந்தபட்ட மருத்துவ அலுவலர்களின் வங்கி கணக்கிற்கு(PWS Account) செலுத்தவும், இப்பணியினை திட்ட மேலாண்மை அலகின் மூலம் (CPMU) மேற்கொள்ளவும்,
8. இதற்கான செலவினம் தேசிய நகர்ப்புற சுகாதாரத்திட்டத்தில் Human Resources- Salary for Staff Nurse க்கென வழங்கப்பட்ட தொகையில் (FMR Code U.8.1.2.1, U.8.1.2.2) மேற்கொள்ளவும்,
9. சிறப்பு அதிகாரி/ மன்றத்தின் அனுமதி பெற்றபின்னர், இது தொடர்பாக அரசின் பின்னேற்பு ஆணை பெறவும்,

மேற்கண்ட *1* முதல் *9* வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி-நிலைக்குழு(சுகாதாரம்*)*, நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி*)* மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது *27.05.2019* நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**"செவிலியர்களுக்கு *15* நாட்களுக்கு ஊதியம் வழங்க *1* முதல் *9* வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி- நிலைக்குழு(சுகாதாரம்*)*, நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி*)* மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".**

*****

**பொ.து.கா.ம.பி. ந.க.எண்.அ1/0055/2019**

**தீர்மான எண்.276/2019** **நாள்:28-05-2019**

**பெருநகர சென்னை மாநகராட்சி - பொது சுகாதாரத்துறை - கால்நடை மருத்துவப்பிரிவு - தெரு நாய்களுக்கு மாபெரும் அளவிலான வெறிநாய்க் கடிநோய் தடுப்பூசி போடும் திட்டம், குடற்புழு மற்றும் புற ஒட்டுண்ணி நீக்கும் திட்டத்தினை செயல்படுத்த அனுமதி.**

வெறிநாய்க்கடி நோய் இல்லா பெருநகர சென்னை மாநகராட்சியினை உருவாக்க பொது சுகாதாரத்துறை, கால்நடை மருத்துவப்பிரிவினால் திட்டமிடப்பட்டுள்ளது.

கடந்த 2015 ஆம் ஆண்டில் பெருநகர சென்னை மாநகராட்சி எல்லைக்குட்ப்பட்ட 15 மண்டலங்களிலும் சுற்றித்திரியும் அனைத்து தெரு நாய்களுக்கும் மாபெரும் அளவிலான வெறிநாய்க் கடிநோய் தடுப்பூசி போடும் திட்டம் (Mass immunization Programme) இரண்டு கட்டங்களாக செயல்படுத்தப்பட்டது. இதன் வாயிலாக தெரு நாய்களுக்கும் பொது மக்களுக்கும் வெறிநாய்க்கடி நோயில் இருந்து பாதுகாப்பு உறுதியளிக்கப்பட்டது.

வெறி நாய்க்கடி நோய் தடுப்பூசி போடும் திட்டம் தொடர்பாக ஆலோசனை கூட்டம் 03.05.2019 அன்று துணை ஆணையர் (சுகாதாரம்) அவர்கள் தலைமையில் நடத்தப்பட்டது. இக்கூட்டத்தில் சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரி, கால்நடை பொது சுகாதாரத்துறையின் துறை தலைவர் மருத்துவர்.சுரேஷ் கண்ணன், Blue Cross of India தொண்டு நிறுவனத்திலிருந்து தலைமை கால்நடை மருத்துவ அலுவலர் மருத்துவர். சிவா மற்றும் International Trust of Peace நிறுவனத்திலிருந்து மருத்துவர். ரமேஷ் ஆகியோர் கலந்து கொண்டு தடுப்பூசி போடுவதன் அவசியத்தையும் அதன் மூலம் தெரு நாய்கள் மற்றும் பொது மக்களின் நலன் எவ்வாறு பாதுகாக்கப்படும் என்பது குறித்தும் ஆலோசனை வழங்கினார். Blue Cross of India தொண்டு நிறுவனம் தங்கள் சார்பாக மருத்துவர்குழு மற்றும் நாய் பிடிப்பவர்கள் தேவைப்படும் பொழுது தருவதாக ஒப்புக்கொண்டனர்.

வெறிநாய்க்கடி நோயினை முற்றிலும் தடுப்பதற்கு அதற்கான தடுப்பூசியினை ஆண்டுதோறும் நாய்களுக்கு போட வேண்டியுள்ளது. கடந்த 2018-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் எடுக்கப்பட்ட கணக்கீட்டின்படி பெருநகர சென்னை மாநகராட்சியில் மொத்தம் 57,366 தெரு நாய்கள் இருப்பதாக கணக்கிடப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சி பகுதிகளில் உள்ள கணக்கிடப்பட்டுள்ள தெரு நாய்களுக்கு வெறிநாய்க்கடி நோய் தடுப்பூசி மற்றும் குடற்புழு நீக்கம் மற்றும் புற ஒட்டுண்ணி நீக்க ஊசியினை அவை இருக்கும் பகுதிகளுக்கு சென்று போடவும் பின்னர் அதே இடத்தில் அவற்றை விடவும் திட்டமிடப்பட்டுள்ளது.

தற்போது தினமும் இனக்கட்டுப்பாடு அறுவை சிகிச்சைக்காக பிடிக்கப்படும் நாய்களுக்கு அறுவை சிகிச்சைக்கு பின்னர் வெறி நாய்க்கடி நோய் தடுப்பூசி போடப்பட்ட பின்னர் அவை மீண்டும் பிடிக்கப்பட்ட இடத்திலேயே விடப்படுகின்றது. ஆயினும் இத்தடுப்பூசியினால் பெறப்படும் நோய் எதிர்ப்பு சக்தி ஒரு வருடத்திற்கு மட்டுமே இருக்கும். ஆனால், இத்திட்டத்தின் மூலம், ஏற்கனவே அறுவை சிகிச்சை செய்யப்பட்ட நாய்களுக்கும் தடுப்பூசி போடப்படும் போது பொது மக்களுக்கும், நாய்களுக்கும் உரிய பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படும்.

குட்டி நாய்கள் மற்றும் பாலூட்டும் நாய்கள் இனக்கட்டுப்பாட்டு அறுவை சிகிச்சைக்காக பிடிக்கப்படுவதில்லை திட்டத்தின் மூலம் அவைகளுக்கும் வெறி நாய்க் கடி நோயிலிருந்து பாதுகாப்பு உறுதி செய்யப்படுகின்றது.

இத்திட்டம் செயல்படுத்தப்படும் பொழுதே இனக்கட்டுப்பாடு அறுவை சிகிச்சை செய்யப்படாத நாய்களை, பெருநகர சென்னை மாநகராட்சி கட்டுப்பாட்டில் இயங்கும் இனக்கட்டுப்பாடு அறுவை சிகிச்சை மையங்கள் மற்றும் தனியார் தொண்டு நிறுவனங்களின் இனக்கட்டுப்பாடு மையங்கள் ஆகியவற்றின் இட வசதிக்கேற்ப பிடித்து அறுவை சிகிச்சை செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

ஒட்டுண்ணி பூச்சிகளால் தோல் நோய் பாதிப்புக்குள்ளான நாய்களுக்கு சிகிச்சை வழங்கும் வகையிலும், இதன் மூலம் பிற நாய்களின் நலனும் காக்கப்படும் என்பதால் புற மற்றும் அக ஒட்டுண்ணி அழிப்பு மருந்து ஊசி மூலம் செலுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

இத்திட்டத்தினை சிறப்பாக செயல்படுத்த ஒரு மண்டலத்திற்கு 7 குழுக்கள் அமைக்கப்பட வேண்டியுள்ளது. ஒவ்வொரு குழுவிலும் ஒரு கால்நடை மருத்துவர், வலைகளை பயன்படுத்தி தெரு நாய்களை பிடிக்க தேவைப்படும் நான்கு ஊழியர்கள், உதவியாளர்கள் இருவர், ஒரு

**பொ.து.கா.ம.பி. ந.க.எண்.அ1/0055/2019**

வாடகை வாகனம் மற்றும் ஓட்டுனர் தேவைப்படுகின்றனர். ஒவ்வொரு குழுவும் தோராயமாக நாள் ஒன்றிற்க்கு 150 தெரு நாய்களுக்கு தடுப்பூசி போடுவதாக கணக்கிடப்பட்டு 7 குழுக்களும் சேர்ந்து நாள் ஒன்றிற்க்கு 1,050 தெரு நாய்களுக்கு தடுப்பூசி போட திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தினை செயல்படுத்தும் முறை மற்றும் தோராய செலவு மதிப்பீடு கீழ்க்கண்டவாறு அட்டவணையிடப்பட்டுள்ளது.

மேலும், திட்டச்செலவு 77,56,600/- என்பதனை கணக்கிட்டால் நாய் ஒன்றிற்கு (77,56,600/57,366=135) வெறிநாய்க்கடி நோய் தடுப்பூசி போடவும், புற மற்றும் அக ஒட்டுண்ணி நீக்க மருந்தினை செலுத்தவும் ஆகும் செலவு தோராயமாக ரூபாய் 135 என கணக்கிடப்பட்டுள்ளது.

***TABLE-I***

| RECURRENT EXPENSES /PER DAY | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **S.NO.** | **REQUIREMENTS** | **NO. REQUIRED PER TEAM** | **AMOUNT /DAY (Rs.)** | **TOTAL AMOUNT /TEAM (Rs.)** | **NO OF TEAMS** | **NET TOTAL** |
| 1. | Veterinary Doctor | 1 | 1000 | 1,000 | 7 | 7,000 |
| 2. | Vehicle and driver | 1 | 2500 | 2,500 | 7 | 17,500 |
| 3. | Dog catchers | 4 | 500 | 2,000 | 7 | 14,000 |
| 4. | Attender | 2 | 500 | 1,000 | 7 | 7,000 |
| 5. | Food and water | 8 | 150 | 1,200 | 7 | 8,400 |
| 6. | Ice | 2 kg | 50/kg | 100 | 7 | 700 |
| | | | | **7,800** | | **54,600** |

***TABLE-II***

| NON RECURRENT EXPENSES | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **S.NO.** | **ITEM** | **QUANTITY REQUIRED/TEAM** | **AMOUNT/UNIT** | **TOTAL AMOUNT /TEAM** | **NO OF TEAMS** | **NET TOTAL** |
| 1. | BUTTERFLY NET | 4 | 3500 | 14,000 | 7 | 98,000 |
| 2. | VEG DYE | - | - | - | - | 5,000 |
| 3. | STATIONERY | - | - | - | - | 1,000 |
| | | | | | | **1,04,000** |

***TABLE-III***

| NON RECURRENT EXPENSES FOR ENTIRE ZONES | | | | |
|---|---|---|---|---|
| **S.NO.** | **ITEM** | **QUANTITY REQUIRED** | **AMOUNT/UNIT** | **NET TOTAL** |
| 1. | ANTI RABIES VACCINE | 58,000 | 30 | 17,40,000 |
| 2. | CHAIR | 14 | 500 | 7,000 |
| 3. | VACCINE CARRIER | 7 | 3000 | 21,000 |
| 4. | INJ.IVERMECTIN | 58,000 | 3 | 1,74,000 |
| 5. | CAGES | 5x7=35 | 3,000 | 105000 |
| | | | | **20,47,000** |

***TABLE-IV***

| Zone | No. Of dogs | Required days for immunization | Required days for post immunization survey | Total Days Required | Amount zone wise recurrent ( man power, vehicle, food and others) | Non recurrent (butterfly net and stationery) | Total |
|---|---|---|---|---|---|---|---|
| I | 3092 | 3 | 1 | 4 | 2,18,400 | 1,04,000 | 3,22,400 |
| II | 2744 | 3 | 1 | 4 | 2,18,400 | 1,04,000 | 3,22,400 |
| III | 6450 | 7 | 1 | 8 | 4,36,800 | 1,04,000 | 5,40,800 |
| IV | 4923 | 5 | 1 | 6 | 3,27,600 | 1,04,000 | 4,31,600 |
| V | 2217 | 3 | 1 | 4 | 2,18,400 | 1,04,000 | 3,22,400 |
| VI | 3277 | 4 | 1 | 5 | 2,73,000 | 1,04,000 | 3,77,000 |
| VII | 7383 | 8 | 1 | 9 | 4,91,400 | 1,04,000 | 5,95,400 |
| VIII | 2676 | 3 | 1 | 4 | 2,18,400 | 1,04,000 | 3,22,400 |
| IX | 3092 | 3 | 1 | 4 | 2,18,400 | 1,04,000 | 3,22,400 |
| X | 2475 | 3 | 1 | 4 | 2,18,400 | 1,04,000 | 3,22,400 |
| XI | 5038 | 5 | 1 | 6 | 3,27,600 | 1,04,000 | 4,31,600 |
| XII | 2576 | 3 | 1 | 4 | 2,18,400 | 1,04,000 | 3,22,400 |
| XIII | 3294 | 4 | 1 | 5 | 2,73,000 | 1,04,000 | 3,77,000 |
| XIV | 3973 | 4 | 1 | 5 | 2,73,000 | 1,04,000 | 3,77,000 |
| XV | 4156 | 4 | 1 | 5 | 2,73,000 | 1,04,000 | 3,77,000 |
| **TOTAL** | **57366** | **62** | **15** | **77** | **41,49,600** | **15,60,000** | **57,09,600** |

| **JUSTIFICATION** | |
|---|---|
| No of dogs covered by 1 team | 150 |
| No of dogs covered by 7 teams | 1050 |
| No of days required per zone = | Total dogs estimated in zone /1050 |

எனவே,

1. பெருநகர சென்னை மாநகராட்சி, பொது சுகாதாரத்துறை, கால்நடை மருத்துவப்பிரிவு, மண்டலம் வாரியாக தெரு நாய்களுக்கு வெறிநாய்க்கடிநோய் தடுப்பூசி போடும் திட்டத்தினை தோராயமாக ரூ.77,56,600/- (ரூ20,47,000/- + ரூ.57,09,600/-) மதிப்பீட்டில் செயல்படுத்துவதற்க்கும்,

2. மண்டலம் வாரியாக மண்டல நல அலுவலர் தலைமையில் கால்நடை உதவி மருத்துவர்கள் மற்றும் தேவையான அலுவலர்களை கொண்ட குழு அமைத்து இத்திட்டத்தினை செயல்படுத்திடவும்,

3. மேற்படி வெறிநாய்க்கடி நோய் தடுப்பூசி போடும் திட்டத்திற்கு தேவைப்படும் நிதியினை அட்டவணை-4ல் தெரிவித்துள்ளபடி மண்டலம் வாரியாக மண்டல அலுவலர்கள் அனுமதியுடன் மண்டல சுகாதார அலுவலர்கள் முன்பணம் பெற்று இச்செலவினங்களை மேற்கொள்வதற்கும், கால்நடை உதவி மருத்துவர்கள் வழியாக இத்திட்டத்தினை செயல்முறைப்படுத்தவும்,

4. இத்திட்டத்திற்கு தேவைப்படும் வெறிநாய்க்கடி நோய் தடுப்பூசிகள் மற்றும் அட்டவணை-3ல் தெரிவித்துள்ள தோராயமான செலவினத்தொகையான ரூ.20,47,000/-ஐ பொது சுகாதாரத்துறை கால்நடை மருத்துவப்பிரிவின் மூலம் பெறுவதற்கும்,

5. மாபெரும் அளவிலான வெறிநாய் கடி நோய் தடுப்பூசி போடும் திட்டத்திற்கு தேவைப்படும் தடுப்பூசியினை 10ml Multi dose vial ஐ TNMSC மூலம் கொள்முதல் செய்வதற்கும் அங்கு இருப்பு இல்லையெனில் விலைப்புள்ளி கோரி வெளிச்சந்தையில் இருந்து கொள்முதல் செய்வதற்கும் ஆணை வேண்டப்படுகிறது. கணக்கிடப்பட்டுள்ள 58,000 நாய்களுக்கு 5,800 கலன்கள் *(vials)* தேவைப்படுகின்றது.

6. முதற்கட்டமாக விரிவாக்கம் செய்யப்பட்ட மண்டலங்களில் இத்திட்டத்தினை செயல்படுத்திடவும் அதனைத்தொடர்ந்து மீதமுள்ள அனைத்து மண்டலங்களிலும் இத்திட்டத்தினை செயல்படுத்திடவும்,

மேற்கண்ட 1 முதல் 6 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி-மன்றம் அவர்களின் அனுமதி கோரிய குறிப்பில், ஆணையர் அவர்களின் 27.05.2019 நாளிட்ட மேற்குறிப்பில் கீழ்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

**“தடுப்பூசி போடப்படும் அனைத்து நாய்களையும் புகைப்படமெடுத்து ஒரு தொகுப்பாக மண்டல அளவில் பராமரிக்க வேண்டும். இத்தொகுப்பின் அடிப்படையிலேயே செலவினமும் ஏற்படுத்த வேண்டும் என்ற நிபந்தனையுடன்”**

சிறப்பு அதிகாரி-நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 27.05.2019 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**“ஆணையரின் மேற்குறிப்புடன் 1 முதல் 6 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி-நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது”.**

*****

**பொ.து.ந.க.எண்.ஈ1/27321/2015**

**தீர்மான எண்.277/2019** **நாள்:28-05-2019**

**பணியமைப்பு - பெருநகர சென்னை மாநகராட்சி - பொதுத்துறை - 2015-2016 ஆம் ஆண்டிற்கான உதவி செயற்பொறியாளர்கள் பதவி உயர்வுக்கான தெரிவுப்பட்டியலின்படி பதவி உயர்வு பெற்ற திருமதி.ஜெ.பாரதி, உதவி செயற்பொறியாளர், கட்டடத்துறை அவர்களுக்கு உதவி செயற்பொறியாளர் பதவியில் உறுதியாக்கம் மற்றும் பணிவரன்முறைப்படுத்த அனுமதி.**

மன்றத்தீர்மான எண்.441/2015, நாள்: 03.08.2015ன்படி, 01.06.2015 ஐ மைய நாளாகக் கொண்டு உதவி செயற்பொறியாளர் பதவி உயர்வுக்கான தெரிவுப்பட்டியல் தயாரிக்கப்பட்டு தகுதியான 9 நபர்களுக்கு உதவி செயற்பொறியாளர் பதவி உயர்வு வழங்க ஒப்புதல் அளிக்கப்பட்டது.

சென்னை மாநகராட்சி, முதன்மைச் செயலாளர்/ஆணையர் அவர்களின் 20.08.2015 நாளிட்ட செயல்முறை ஆணையின்படி, 2015-2016ஆம் ஆண்டிற்கான உதவி செயற்பொறியாளர் தெரிவுப்பட்டியலில் தகுதியான 9 நபர்களுக்கு உதவி செயற்பொறியாளர்களாக பதவி உயர்வு வழங்கி ஆணையிடப்பட்டது.

ஆணையர் அவர்களின் 09.02.2018 நாளிட்ட செயல்முறை ஆணையின்படி, பெருநகர சென்னை மாநகராட்சி, 2015-2016ஆம் ஆண்டிற்கான உதவி செயற்பொறியாளர் தெரிவுப்பட்டியலில் பதவி உயர்வு பெற்ற 9 உதவி செயற்பொறியாளர்களில் வரிசை எண்.8ல் உள்ள திருமதி.ஜெ.பாரதி, உதவி செயற்பொறியாளர், கட்டடத்துறை அவர்கள் மீது சென்னை மாநகராட்சி வகுப்பு 3 மற்றும் 4ம் நிலை பணியாளர் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதிகள் 1970 துணை விதி எண். 10(b)ன் கீழ் ஒழுங்கு நடவடிக்கை நிலுவையில் உள்ளது என்பதால் தனியரை மட்டும் தவிர்த்து மீதமுள்ள 8 உதவி செயற்பொறியாளர்களுக்கு உதவிசெயற்பொறியாளர் பதவியில் பணியில் சேர்ந்த நாள்முதல் பணிவரன்முறைப்படுத்தப்பட்டது.

நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை, அரசாணை எண் 242, நாள்:25.10.2018ன்படி, திருமதி.ஜெ.பாரதி, உதவி செயற்பொறியாளர், கட்டடத்துறை அவர்கள் மீது சென்னை மாநகராட்சி வகுப்பு 3 மற்றும் 4ம் நிலை பணியாளர் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதிகள் 1970 துணை விதி எண். 10(b)ன் கீழ் ஒழுங்கு நடவடிக்கை கைவிடப்பட்டதாக ஆணையிடப்பட்டது.

கண்காணிப்பு பொறியாளர் (கட்டடம்) அவர்களின் 29.01.2019 நாளிட்ட கடிதத்தில், பெருநகர தனியர் மீது உள்ள ஒழுங்கு நடவடிக்கை கைவிடப்பட்டதால், தனியர் உதவி செயற்பொறியாளராக பதவி உயர்வு பெற்று பணியில் சேர்ந்த நாள் 24.08.2015 பிற்பகல் முதல் பணிவரன்முறைப்படுத்தி ஆணை வழங்குமாறு கோரப்பட்டுள்ளது.

எனவே, திருமதி.ஜெ.பாரதி, உதவி செயற்பொறியாளர், கட்டடத்துறை அவர்கள் உதவி செயற்பொறியாளராக பதவி உயர்வு பெற்று பணியில் சேர்ந்த நாளான 24.08.2015 பிற்பகல் முதல் பணிவரன்முறைப்படுத்த சிறப்பு அதிகாரி-மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 28.05.2019 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**"பணிவரன்முறைப்படுத்த சிறப்பு அதிகாரி-மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".**

*********

**பொ.து.ந.க.எண்.இ7/14763/2019 &**
**ம.சே.து.ந.க.எண்.எப்5/545/2019**

**தீர்மான எண்.278/2019** **நாள்:28-05-2019**

**பணியமைப்பு - பெருநகர சென்னை மாநகராட்சி - பொதுத்துறை - மருத்துவ சேவைகள் துறை - திருமதி. சு. கஸ்தூரி, பகுதி சுகாதார செவிலியர், சஞ்சீவிராயன்பேட்டை நகர ஆரம்ப சுகாதார மையம், இராயபுரம் மருத்துவ மண்டலம்-5 அவர்கள் 29.05.2019 அன்று பிற்பகல் முதல் தன் விருப்ப ஓய்வில் செல்ல அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, மருத்துவ சேவைகள் துறை, இராயபுரம் மருத்துவ மண்டலம், சஞ்சீவிராயன்பேட்டை நகர ஆரம்ப சுகாதார மையத்தில் மகப்பேறு உதவியாளராக (நகர சுகாதார செவிலியர்) பணிபுரியும் திருமதி. சு. கஸ்தூரி அவர்கள் 19.06.1991 அன்று பணியில் சேர்ந்து தற்போது 27 ஆண்டுகள் 11 மாதங்கள் 11 நாட்கள் பணி முடித்துள்ளதாகவும், தனது குடும்ப சூழ்நிலை காரணத்தால் தன்னால் தொடர்ந்து பணியாற்ற இயலவில்லை என்று தெரிவித்து தனக்கு தன் விருப்ப ஓய்வு வழங்க 01.03.2019 நாளிட்ட கடிதத்தில் கோரியுள்ளார்.

திருமதி. சு. கஸ்தூரி அவர்கள் 19.06.1991 அன்று பகுதி சுகாதார செவிலியராக பணியில் சேர்ந்து தொடர்ந்து பணியாற்றி வருகிறார். தனியருக்கு பகுதி சுகாதார செவிலியர் பதவியில் 19.06.1991 அன்று பணிவரன்முறைப்படுத்தியும், 19.06.1993 அன்று தகுதிகாண்பருவம் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. தனியரது தாய்மொழி தமிழ் ஆகும்.

மண்டல மருத்துவ அலுவலர், இராயபுரம் மருத்துவ மண்டலம் அவர்களின் 11.03.2019 நாளிட்ட கடிதத்தில், தனியர் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு செலுத்த வேண்டிய முன்பண நிலுவைத் தொகை, தணிக்கை தடை, ஒழுங்கு நடவடிக்கை மற்றும் குற்றவியல் நடவடிக்கை ஏதும் இல்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சி, கூட்டுறவு அலுவலக சங்கத்தின் 13.03.2019 நாளிட்ட கடிதத்தில், தனியர் இச்சங்கத்தில் உறுப்பினர் இல்லை என்று சான்று அளிக்கப்பட்டுள்ளது.

விழிப்பு அலுவலர் அவர்களின் 25.03.2019 நாளிட்ட கடிதத்தில் பெருநகர சென்னை மாநகராட்சி, விழிப்பு குழுமத்தில் தனியர் மீது விசாரணை ஏதும் நிலுவையில் இல்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மருத்துவ சேவைகள் துறை, தணிக்கை பிரிவின் 06.05.2019 நாளிட்ட குறிப்பில், தற்போது வரை வழங்கப்பட்டுள்ள உள்ளாட்சி நிதி தணிக்கை அறிக்கையின்படி, தணிக்கைத் தடை பத்தி நிலுவை இல்லையெனவும், தற்போது மருத்துவ சேவைகள் துறையில் 2017-18 ஆம் ஆண்டிற்கான தணிக்கை நடைபெற்றுக் கொண்டிருப்பதால், அதுகுறித்து உள்ளாட்சி நிதி தணிக்கைத் துறையினரால், தனியருக்கு தணிக்கை தடை இருக்கும் பட்சத்தில், அதுகுறித்து பின்னர் தெரிவிக்கப்படும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

இயக்குநர், மாநில விழிப்பு மற்றும் லஞ்ச ஒழிப்பு அவர்களின் 15.05.2019 நாளிட்ட கடிதத்தில் மேற்படி தனியர் மீது விசாரணை ஏதும் நிலுவையில் இல்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. DVAC – லிருந்து ஈ-மெயில் வழியாக அறிக்கை பெறப்பட்டுள்ளது. அசல் அறிக்கை தபாலில் அனுப்பப்பட்டுள்ளதாக வாய்மொழியாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தனியர் தன் விருப்ப ஓய்வுக்கு விண்ணப்பித்த நாளன்று 52 வயதினை பூர்த்தி செய்துள்ளார். அன்னாரின் மொத்த பணிக்காலம் 27 ஆண்டுகள் 11 மாதங்கள் 11 நாட்கள் ஆகும். தனியரின் பிறந்த நாள் - 04.03.1968. அரசு பணிவிதிகளின்படி தனியர் வயது முதிர்வில் ஓய்வு பெறும் தகுதியான நாள் 31.03.2026.

அரசாணை எண்.350, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்த்திருத்த துறை, நாள்: 07.10.1991ன்படியும், அரசாணை எண்.376, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்த்திருத்த துறை, நாள்: 11.12.1995ன்படியும், தனியர் 27 ஆண்டுகள் 11 மாதங்கள் 11 நாட்கள் பணிநிறைவு செய்துள்ளதாலும், தன் விருப்ப ஓய்விற்கு 90 நாட்கள் முன்னறிவிப்பு கடிதம் சிறப்பு அதிகாரி (மன்றம்) அவர்களிடம் வழங்கியுள்ளதாலும், சிறப்பு அதிகாரி (மன்றம்) அவர்களின் அனுமதி பெற்று தன் விருப்ப ஓய்வில் செல்ல அனுமதிக்கலாம்.

**பொ.து.ந.க.எண்.இ7/14763/2019 &**
**ம.சே.து.ந.க.எண்.எப்5/545/2019**

எனவே, மேலே தெரிவிக்கப்பட்ட விவரங்களின் அடிப்படையில் திருமதி. சு. கஸ்தூரி, பகுதி சுகாதார செவிலியர், மருத்துவ சேவைகள் துறை அவர்கள் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை, நிதி இழப்பீடு, *2017-18* ஆம் ஆண்டிற்கான உள்ளாட்சி நிதி தணிக்கை அறிக்கை வெளியிடப்படாத நிலையில், பின்னர் ஏற்படும் ஏதேனும் தணிக்கை தடை மற்றும் நீண்ட கால முன்பணம் சரிசெய்யப்படாமல் நிலுவையில் இருப்பது ஆகியவை பின்னர் தெரியவரின் இதனை தனியரது ஓய்வூதிய பணிக்கொடை தொகையிலிருந்து பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைக்குட்பட்டு, *29.05.2019* அன்று பிற்பகல் முதல் தன் விருப்ப ஓய்வில் செல்ல சிறப்பு அதிகாரி-மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது *28.05.2019* நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**"தன் விருப்ப ஓய்வில் செல்ல சிறப்பு அதிகாரி-மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".**

*********

**பொ.து.ந.க.எண்.ஈ1/14924/2019**

**தீர்மான எண்.279/2019** **நாள்:29-05-2019**

**பணியமைப்பு - பெருநகர சென்னை மாநகராட்சி - பொதுத்துறை - திரு. பி. வெங்கடேஷ் உதவி செயற்பொறியாளர், தெற்கு வட்டார அலுவலகம் அவர்கள் 31.05.2019 அன்று பிற்பகல் முதல் வயது முதிர்வு ஓய்வில் செல்ல அனுமதி.**

துணை ஆணையர் (தெற்கு) அவர்களின் 24.05.2019 நாளிட்ட கடிதத்தில், பொதுத்துறையின் 16.12.2018 நாளிட்ட சுற்றறிக்கையின்படி, பெருநகர சென்னை மாநகராட்சியில், உதவி செயற்பொறியாளராக பணிபுரியும் திரு.பி.வெங்கடேஷ் அவர்கள் வயது முதிர்வு ஓய்வு காரணமாக 31.05.2019 அன்று பிற்பகல் முதல் ஓய்வு பெறவுள்ளதால், தனியரை வயது முதிர்வு ஓய்வில் செல்ல ஆணை வேண்டி கோப்பு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. தனியரின் பிறந்த தேதி 01.06.1961 ஆகும்.

அரசாணை (ப) எண்.623, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மா.ந.3) துறை நாள்.07.11.2000 மற்றும் அரசு கடித எண்.4429/மாந.3/2000 நாள்.03.09.2001 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மா.ந.3) துறை ன்படியும் மற்றும் சென்னை மாநகராட்சி ஆணையர் அவர்களின் 22.09.2001 நாளிட்ட செயல்முறை ஆணைபடியும், திரு.பி.வெங்கடேஷ், உதவி செயற்பொறியாளர் அவர்கள், சேலம் மாவட்ட நூற்பாலையிலிருந்து, சென்னை மாநகராட்சி பணியில் இளநிலை பொறியாளராக ஈர்த்துக்கொள்ளப்பட்டு, 27.09.2001 முதல் இளநிலை பொறியாளராக பணியில் சேர்ந்துள்ளார். மேலும் தனியர் உதவி செயற்பொறியாளராக 31.10.2013 அன்று பதவி உயர்வு பெற்றுள்ள இப்பதவியிலும் 01.11.2013 அன்றைய தேதியில் பணிவரன்முறைப்படுத்தப்பட்டுள்ளது.

தனியர் பணியில் சேர்ந்த நாள் முதல் இந்நாள் வரை பணியாற்றிய துறை/வட்டார மண்டலங்களில் பணியாற்றிய விவரங்கள் பின்வருமாறு.

| வ. எண். | பதவி | மண்டலம்/ துறைகள் | பணியாற்றிய காலம் | |
|---|---|---|---|---|
| | | | முதல் | வரை |
| 1. | இளநிலை பொறியாளர் | மண்டலம்-6 | 27.09.2001 | 24.11.2008 பி.ப |
| 2 | இளநிலை பொறியாளர் | மண்டலம்-9 | 25.11.2008 மு.ப | 16.02.2012 மு.ப |
| 3 | இளநிலை பொறியாளர் | மண்டலம்-14 | 16.02.2012 பி.ப | 31.10.2013 மு.ப |
| 4 | உதவி செயற்பொறியாளர் | பாலங்கள் துறை | 31.10.2013 பி.ப | 29.01.2014 பி.ப |
| 5 | உதவி செயற்பொறியாளர் | தெற்கு வட்டார அலுவலகம் | 29.01.2014 பி.ப | 01.08.2014 பி.ப |
| 6 | உதவி செயற்பொறியாளர் | மண்டலம்-13 | 01.08.2014 பி.ப | 30.12.2014 பி.ப |
| 7 | உதவி செயற்பொறியாளர் | மண்டலம்-15 | 31.12.2014 மு.ப | 27.07.2015 பி.ப |
| 8 | உதவி செயற்பொறியாளர் | தெற்கு வட்டார அலுவலகம் | 27.07.2015 பி.ப | இந்நாள் வரை |

மேற்கண்ட அட்டவணையின்படி தனியர் பணிபுரிந்துள்ள துறை / மண்டலங்களில் பெறப்பட்ட விவரங்களின்படி இவர் மீது தணிக்கை தடைகள், ஒழுங்கு நடவடிக்கை முன்பண நிலுவை ஏதும் இல்லையெனவும், இதுகுறித்து நிலுவை இருப்பது பின்னர் தெரியவரின் அவற்றிற்கு தனியரை பொறுப்பாக்கி தனியரது ஓய்வூதிய பயன்களில் பிடித்தம் செய்யலாமென்ற நிபந்தனைக்குட்படுத்தி அறிக்கைகள் அளிக்கப்பட்டுள்ளதனை நடப்பு கோப்பில் இணைக்கப்பட்டுள்ளது எனவும், மேலும், தனியர் தெற்கு வட்டார அலுவலகத்தில் பணிபுரிந்த காலங்களில், தனியர் மீது ஒழுங்கு நடவடிக்கை மற்றும் குற்றச்சாட்டு குறிப்பாணைகள் ஏதும் நிலுவை இல்லையென தெரிவித்துக் கொள்ளப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலர் கூட்டுறவு சங்க 07.05.2019 நாளிட்ட கடிதத்தில், தனியர் கூட்டுறவு சங்கத்தில் உறுப்பினர் இல்லையென என சான்று அளிக்கப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சி காவல் துறை துணை கண்காணிப்பாளர் / விழிப்பு அலுவலர், அவர்களின் 08.05.2019 நாளிட்ட கடிதத்தில் தனியர் மீது விசாரணை ஏதும் நிலுவையில் இல்லை என்ற விவரம் பெறப்பட்டுள்ளது.

**பொ.து.ந.க.எண்.ஈ1/14924/2019**

நிதி ஆலோசகர் அவர்களது 23.05.2019 நாளிட்ட கடிதத்தின்படி தனியர் இளநிலை பொறியாளர் மற்றும் உதவி செயற்பொறியாளராக வட்டாரம்/துறை/மண்டலங்களில் பணிபுரிந்த காலங்களில் 2001-2002 முதல் 2017-2018 ஆம் ஆண்டு வரை தணிக்கை அறிக்கை குறித்த பத்திகள் இவ்வலுவலகத்தில் உள்ள உள்ளாட்சி நிதித்தணிக்கை அறிக்கையின் படி நிலுவை ஏதுமில்லை எனவும், மேலும் 2018-2019 மற்றும் 2019-2020 ஆம் ஆண்டு வரைக்கான தணிக்கை அறிக்கைகள் உள்ளாட்சி நிதித் தணிக்கைத்துறையால் வெளியிடப்படவில்லை. மேற்காணும் ஆண்டுகளுக்கான தணிக்கை அறிக்கைகள் வெளியிடப்பட்ட பின்னர் தணிக்கை தடை பத்திகள் பணியாளரை சார்ந்தது என்பது பின்னர் தெரியவரும் பட்சத்தில் அவர் மீது பொறுப்பு நிர்ணயிக்கப்படும் எனவும்,

மேலும், திரு. பி. வெங்கடேஷ், உதவி செயற்பொறியாளர் அவர்கள் பணியில் சேர்ந்த நாள் முதல் ஓய்வு பெறும் நாள் வரை தணிக்கை தடைகள், ஒழுங்கு நடவடிக்கை மற்றும் முன்பண நிலுவை ஏதுமில்லை என்பதற்கான சான்றும் மற்றும் உதவி செயற்பொறியாளர் பதவியில் தனியரால் பெறப்பட்ட முன்பணத் தொகைகளுக்கான விவரங்களை பகுதி கணக்கு குழுமத்தில் பெற்று அத்தொகைகள் அனைத்தும் நேர்செய்யப்பட்டு, தனியரை பொறுப்பாக்கும் முன்பணத்தொகை நிலுவை இல்லை என்பதற்கான சான்று துறை/மண்டல அலுவலரிடமிருந்து பெறப்பட்டுள்ளது.

தனியரது 28.05.2019 நாளிட்ட உறுதிமொழி கடிதத்தின்படி, தனியர் ஓய்வு பெற்ற பின்னர் அன்னாருக்கு வழங்கப்படும் பணிக்கால பணப்பயன்களான ஓய்வூதியம் மற்றும் துறை வழி பணப்பயன்கள் மிகையாக இருப்பது பின்னர் தெரியவந்தால் அத்தொகையினை ஒரே தவணையில் செலுத்திவிடுவதாகவும், அன்னாருக்கு வழங்கப்படும் ஒய்வூதிய அகவிலைப்படியில் இருந்து பிடித்தம் செய்துகொள்ளலாம் எனவும் உறுதிமொழி அளித்துள்ளார்.

உதவி செயற்பொறியாளர், பதவியானது வகுப்பு-2ன் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளதால் இப்பதவியில் வகிப்பவரை வயது முதிர்வு ஓய்வில் செல்ல அனுமதிக்கும் அதிகாரம் சிறப்பு அதிகாரி-மன்றம் அவர்களுக்கு அளிக்கப்பட்டுள்ளது.

எனவே, நிதி ஆலோசகர் அவர்களின் கடிதத்தின்படி, திரு.பி.வெங்கடேஷ் உதவி செயற்பொறியாளர், தெற்கு வட்டாரம் அவர்களின் மீது 2018-2019 மற்றும் 2019-2020 ஆம் ஆண்டுகளுக்கான தணிக்கை அறிக்கைகள் உள்ளாட்சி நிதித்தணிக்கை துறையால் வெளியிடப்படவில்லை என்பதால், மேற்காணும் ஆண்டுகளுக்கான தணிக்கை அறிக்கைகள் வெளியிடப்பட்ட பின்னர், தணிக்கைத்தடை பத்திகள் பணியாளரை சார்ந்தது என்பது பின்னர் தெரியவரும் பட்சத்தில் தனியரை முழுபொறுப்பாக்கி, அன்னாருக்கு வழங்கப்படும் பணிக்கொடை மற்றும் ஓய்வூதிய அகவிலைப்படியிலிருந்து பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைக்குட்பட்டும், தனியரை 31.05.2019 அன்று பிற்பகல் முதல் வயது முதிர்வு ஓய்வில் செல்ல சிறப்பு அதிகாரி-மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 29.05.2019 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**“வயது முதிர்வு ஓய்வில் செல்ல சிறப்பு அதிகாரி-மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது”.**

*****

**ம.க.கு.ந.க.எண்.அ8/0802 /2018**

**தீர்மான எண்.280/2019** **நாள்:29-05-2019**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மத்திய கணக்கு குழுமம் - படிகள் - 2006ஆம் ஆண்டிற்கு முந்தைய மற்றும் 2016ஆம் ஆண்டிற்கு முந்தைய ஊதிய விகிதங்களில் ஊதியம் பெறும் அலுவலர்களுக்கான 01.01.2019 முதல்அகவிலைப்படி வீதங்கள் குறித்து அரசாணை வெளியிடப்பட்டுள்ளது - அரசாணை யைபெருநகர சென்னை மாநகராட்சியில் நடைமுறைப்படுத்த அனுமதி.**

அரசாணை (நிலை) எண்.153, நிதி(படிகள்)த்துறை, நாள்.20.05.2019ல் 2006ஆம் ஆண்டிற்கு முந்தைய மற்றும் 2016ஆம் ஆண்டிற்கு முந்தைய ஊதிய விகிதங்களில் தொடர்ந்து ஊதியம் பெறும் அலுவலர்களுக்கான திருத்திய அகவிலைப்படிகளின் வீதங்கள் 01.01.2019 முதல் அனுமதிக்கப்பட்டுள்ளது. அதன் விவரம் பின்வருமாறு:-

## FINANCE [Allowances] DEPARTMENT

## G.O.Ms.No.153 , Dated 20"' May 2019.

(Vihari, Vaikasi-06, Thiruvalluvar Aandu 2050)

## ABSTRACT

**ALLOWANCES** — Rate of Dearness Allowance applicable with effect from 1-1-2019 in respect of employees continuing to draw their pay in the Pre-2006 Pay Scales and Pre-2016 pay scale/Grade Pay - Orders — Issued.

---

**Read the fo11owing:-**

1. G.O.Ms.No.321, Finance (Allowances) Department, dated: 24-09-2018.
2. From the Government of India, Ministry of Finance, Department of Expenditure, New Delhi Office Memorandum No.1/3(2)/2008-E-II(B), dated 08-03-2019.
3. From the Government of India, Ministry of Finance, Department of Expenditure, New Delhi Office Memorandum No.1 /3(1)/ 2008-E-II(B), dated 08-03-2019.

-oOo-

**ORDER**:

In the Government Order first read above, orders were issued sanctioning revised rate of Dearness Allowance to the State Government employees drawing pay in the Pre-revised pay scales as detailed below:-

| **Pre-2006 pay scales** | | **Pre-2016 Pay Scale / Grade Pay** | |
|---|---|---|---|
| **Date from which payable** | **Rate of Dearness Allowance** (per month) | **Date from which payable** | **Rate of Dearness Allowance** (per month) |
| **(1)** | **(2)** | **(3)** | **(4)** |
| 1-7-2018 | **284%** of Pay plus Dearness Pay | 1-7-2018 | **148%** of Pay plus Grade Pay |

2. The Government of India in its Office Memorandum second and third read above has enhanced the Dearness Allowance to its employees continuing to draw their pay in the pre-revised pay scales as per Fifth Central Pay Commission from 284% to 295% with effect from 1st January 2019 and in the pre-revised pay scale/Grade Pay as per Sixth Central Pay Commission from 148% to 154% with effect from 1st January 2019.

3. Following the orders issued by the Government of India, the Government now sanction the revised rate of Dearness Allowance to the State Government employees drawing pay in the Pre-revised pay scales as detailed below:-

| **Pre-2006 pay scales** | | **Pre-2016 Pay Scale / Grade Pay** | |
|---|---|---|---|
| **Date from which payable** | **Rate of Dearness Allowance** (per month) | **Date from which payable** | **Rate of Dearness Allowance** (per month) |
| **(1)** | **(2)** | **(3)** | **(4)** |
| 1-1-2019 | **295%** of Pay plus Dearness Pay | 1-1-2019 | **154%** of Pay plus Grade Pay |

4. The additional instalment of Dearness Allowance payable under these orders shall be paid in cash with effect from **1-1-2019.**

5. The arrears of Dearness Allowance for the months of January,2019 to April, 2019 shall be drawn and disbursed immediately by existing cashless mode of Electronic Clearance System (ECS). While working out the revised Dearness Allowance, fraction of a rupee shall be rounded off to next higher rupee if such fraction is 50 paise and above and shall be ignored if it is less than 50 paise.

6. The Government also direct that the revised Dearness Allowance sanctioned above, shall be admissible to full time employees who are at present getting Dearness Allowance and paid from contingencies at fixed monthly rates. The revised rates of Dearness Allowance sanctioned in this order shall not be admissible to part time employees.

7. The revised Dearness Allowance sanctioned in this order will also apply to the teaching and non-teaching staff working in aided educational institutions, employees under local bodies, employees governed by the University Grants Commission/All India Council for Technical Education scales of pay, the Teachers/Physical Education Directors/Librarians in Government and Aided Polytechnics and Special Diploma Institutions, Village Assistants in Revenue Department, Noon Meal Organisers, Child Welfare Organisers, Anganwadi Workers, Cooks, Helpers, Panchayat Secretaries/ Clerks in Village Panchayat under Rural Development and Panchayat Raj Department.

8. The revised Dearness Allowance sanctioned in this order shall also be applicable to the Pensioners / Family Pensioners who are drawing pre-revised pension / family pension.

9. The expenditure shall be debited to the detailed head of account 'O3. Dearness Allowance' under the relevant minor, sub-major and major heads of account.

10. The Treasury Officers / Pay and Accounts Officers are requested to make payment of the revised Dearness Allowance when bills are presented without waiting for the authorisation from the Principal Accountant General (A&E) Tamil Nadu, Chennai-18.

(BY ORDER OF THE GOVERNOR)

K.SHANMUGAM

ADDITIONAL CHIEF SECRETARY TO GOVERNMENT

எனவே, பெருநகர சென்னை மாநகராட்சியில் 2006 ஆம் ஆண்டிற்கு முந்தைய மற்றும் 2016 ஆம் ஆண்டிற்கு முந்தைய ஊதிய விகிதங்களில் தொடர்ந்து, ஊதியம் பெறும் அலுவலர்களுக்கு அரசாணை நிலை எண்.153 நிதி(படிகள்)த்துறை, நாள்.20.05.2019-யை பெருநகர சென்னை மாநகராட்சியில் நடைமுறைப்படுத்த சிறப்பு அதிகாரி-நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 29.05.2019 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**"அரசாணையை நடைமுறைப்படுத்த சிறப்பு அதிகாரி-நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".**

*****

**சு.து.ந.க.எண்.NUHM/ B2/1917/2019**

**தீர்மான எண்.281/2019** **நாள்:31-05-2019**

**பெருநகர சென்னை மாநகராட்சி - பொது சுகாதாரத்துறை - தேசிய நகர்ப்புற சுகாதார திட்டம்- 2019-2020 ம் நிதியாண்டில் ஒப்பளிக்கப்பட்ட நகர்ப்புற ஆரம்ப சுகாதார மையங்களுக்கு தேவையான 84 மருத்துவ அலுவலர்கள் (Medical Officers) மற்றும் பாடி, ஆலந்தூர் நகர்ப்புற சமுதாய நல மையங்களுக்கு தேவையான 2 மருத்துவ அலுவலர்கள் , மொத்தம் 86 மருத்துவ அலுவலர்கள் மற்றும் மாநகராட்சி நிதியிலிருந்து திருவொற்றியூர், புழல்,வளச்சரவாக்கம்,பெருங்குடி மற்றும் கண்ணகி நகர் நகர்ப்புற சமுதாய நல மையங்களுக்கு தேவையான 24 மருத்துவ அலுவலர்கள் மொத்தம் 110 மருத்துவ அலுவலர்கள் ஒப்பந்த அடிப்படையில் 11 மாத காலத்திற்கு ஒப்பம் கோரி பணியமர்த்த அனுமதி.**

சிறப்பு அதிகாரி/மன்றத்தீர்மான எண். 116/2018, நாள்.02.02.2018 மற்றும் சிறப்பு அதிகாரி/மன்றத்தீர்மான எண்.329/2018, நாள்.25.04.2018ன்படி 1-15 மண்டலங்களில் நகர்ப்புற ஆரம்ப சுகாதார மையங்களில் 64 மருத்துவ அலுவலர்களை (Medical Officers) பதினொரு மாத காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்த ஒப்பம் கோரப்பட்டு குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த M/s. Vardhan Infrastructure நிறுவனத்திற்கு 02.06.2018 முதல் 01.05.2019 வரை பணியாணை வழங்கப்பட்டு சிறப்பு அதிகாரி/மன்றத்தீர்மான எண். 228/2019, நாள்.04.04.2019ன்படி பணியாணையானது 02.05.2019 முதல் 01.07.2019 வரை நீட்டிப்பு செய்யப்பட்டுள்ளது.

சிறப்பு அதிகாரி/மன்றத்தீர்மான எண்.369/2018, நாள்.04.05.2018 மற்றும் சிறப்பு அதிகாரி/மன்றத்தீர்மான எண்.428/2018 நாள்.07.06.2018ன்படி நகர்ப்புற ஆரம்ப சுகாதார மையங்களுக்கு கூடுதலாக 20 மருத்துவ அலுவலர்களை (Medical Officers) பதினொரு மாத காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்த ஒப்பம் கோரப்பட்டு குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/s. Vardhan Infrastructure நிறுவனத்திற்கு 11.06.2018 முதல் 10.05.2019 வரை பணியாணை வழங்கப்பட்டு சிறப்பு அதிகாரி/மன்றத்தீர்மான எண். 229/2019, நாள். 04.04.2019ன்படி பணியாணையானது 11.05.2019 முதல் 10.07.2019 வரை நீட்டிப்பு செய்யப்பட்டுள்ளது.

ஆணையர் அவர்களின் 21.02.2018 நாளிட்ட ஆணையின்படி பாடி மற்றும் ஆலந்தூர் நகர்ப்புற சமுதாய நல மையங்களுக்கு தேவையான 2 மருத்துவ அலுவலர்கள் ஒப்பந்த அடிப்படையில் 01.03.2018 முதல் 31.01.2019 வரையில் பதினோரு மாத காலத்திற்கு பணியமத்த M/s. Vardhan Infraastructure நிறுவனத்திற்கு பணியாணை வழங்கப்பட்டு தற்போது துணை ஆணையர் (சுகாதாரம்) அவர்களின் 25.01.2019 நாளிட்ட ஆணை பெறப்பட்டு பணிக்காலமானது 01.02.2019 முதல் 31.03.2019 வரை நீட்டிப்பு செய்யப்பட்டது.

துணை ஆணையர்(சுகாதாரம்) அவர்களின் 08.03.2019 நாளிட்ட ஆணையின்படி, பாடி மற்றும் ஆலந்தூர் நகர்ப்புற சமுதாய நல மையங்களுக்கு தேவையான 2 மருத்துவ அலுவலர்கள் பணியமர்த்த விலைப்புள்ளிகள் கோரப்பட்டு குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள M/s. Vardhan Infraastructure நிறுவனத்திற்கு 01.04.2019 முதல் 30.06.2019 வரை பணியாணை வழங்கப்பட்டுள்ளது.

தேசிய நகர்ப்புற சுகாதார திட்டத்தில் 2019-2020ல் நகர்ப்புற ஆரம்ப சுகாதார மையங்களுக்கு தேவையான 84 மருத்துவ அலுவலர்கள் மற்றும் பாடி, ஆலந்தூர் நகர்ப்புற சமுதாய நல மையங்களுக்கு தேவையான 2 மருத்துவ அலுவலர்கள் மொத்தம் 86 மருத்துவ அலுவலர்கள் (Medical Officers) ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்த அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சி, பொதுசுகாதாரத்துறை, மண்டலம்11(வளசரவாக்கம்) மற்றும் 14ல் (பெருங்குடி) 100 படுக்கை வசதிகளுடன் நகர்ப்புற சமுதாய நல மையங்களும் (UCHC) மண்டலம் 15 ல் 30 படுக்கை வசதிகளுடன் நகர்ப்புற சமுதாய நல மையமும் (UCHC) புதியதாக கட்டப்பட்டு திறக்கப்பட்டுள்ளது.

சிறப்பு அதிகாரி, மன்றத்தீர்மான எண்.28/2019, நாள்.29.01.2019, சிறப்பு அதிகாரி,மன்றத்தீர்மான எண்.29/2019, நாள்.29.01.2019, சிறப்பு அதிகாரி, மன்றத்தீர்மான எண்.226/2019, நாள்.04.04.2019, மற்றும் சிறப்பு அதிகாரி,மன்றத்தீர்மான எண். 227/2019 நாள்.04.04.2019 ஆகிய மன்றத் தீர்மானங்களின்படி வளசரவாக்கம் மற்றும் பெருங்குடி

சு.து.ந.க.எண்.NUHM/ B2/1917/2019

நகர்ப்புற சமுதாய நல மையங்களுக்கு 5 மருத்துவ அலுவலர்கள் வீதம் 10 மருத்துவ அலுவலர்கள், கண்ணகி நகர் சமுதாய நல மையத்திற்கு 4 மருத்துவ அலுவலர்கள் மொத்தம் 14 மருத்துவ அலுவலர்கள் 10.02.2019 முதல் 15.06.2019 வரை M/s. Vardhan Infraastructure நிறுவனத்திற்கு பணியாணை வழங்கப்பட்டுள்ளது. இந்த மருத்துவ அலுவலர்கள் பணியிடங்கள் தேசிய நகர்ப்புற சுகாதார திட்டத்தில் அனுமதி அளிக்கப்படாத நிலையில் இப்பணியிடத்திற்கான செலவினம் மாநகராட்சி நிதியில் இருந்து மேற்கொள்ளப்படுகிறது.

மேலும், திருவொற்றியூர், புழல் நகர்ப்புற சமுதாய நல மையங்கள் புதியதாக கட்டப்பட்டு வருகின்றன. இந்த மையங்கள் கட்டிடப்பணிகள் முடிவடைந்து விரைவில் திறக்கப்பட உள்ளன. இந்த மையங்களுக்கும் தேவையான மருத்துவ அலுவலர்கள் ஒப்பந்த அடிப்படையில் மாநகராட்சி நிதியில் இருந்து பணியமர்த்த வேண்டியுள்ளது.

**அட்டவணை எண்.1**

**Required Number of Medical Officers**

| Sl. No | Fund | UPH Cs | Thiruvottiyur UCHC | Puzhal UCHC | Padi UCHC | Valasaravakkam UCHC | Alanthur UCHC | Perungudi UCHC | Kannagi Nagar UCHC | Total |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | NUHM | 84 | - | - | 1 | - | 1 | - | - | 86 |
| 2 | Corporation | - | 5 | 5 | - | 5 | - | 5 | 4 | 24 |
| | | | | | | | | | | 110 |

எனவே, 110 மருத்துவ அலுவலர்களை 11 மாத காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தலாம்.

**Qualification for Medical Officer**

| Sl. No | Category of Staff | Qualification |
|---|---|---|
| 1 | Medical Officers ( Full time) | MBBS or post graduation in medicine and Registration with MCI |

ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தப்படும் மருத்துவ அலுவலர்களுக்கு குறைந்தபட்ச ஊதியம்,சரக்கு மற்றும் சேவைக்கட்டணம் (GST) மற்றும் ஒப்பந்ததாரருக்கு வழங்கப்பட வேண்டிய சேவைக்கட்டணம் (Administrative Charges ) கீழ்க்கண்ட அளவில் வழங்கப்பட வேண்டியுள்ளது.

**அட்டவணை எண்.2**

| Sl. No | Category of Staff | Salary per Month (Rs) | EPF (13%) (Rs) | ESI (4.75 %) (Rs) | Administrative Charges (Rs) | GST 18% (1+2+3+4) | Total (1+2+3+4+5) | Required Staff | Cost per 11 months Rs (6x7x11) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 1 | Medical Officer (NUHM) | 40000 | NA | NA | 500 | 7290 | 47790 | 86 | 45209340 |
| 2 | Medical Officer (Corporation) | 40000 | NA | NA | 500 | 7290 | 47790 | 24 | 12616560 |
| | Total | | | | | | | 110 | 5,78,25,900 |

**சு.து.ந.க.எண்.NUHM/ B2/1917/2019**

எனவே,

1. பெருநகர சென்னை மாநகராட்சி, பொதுசுகாதாரத்துறை தேசிய நகர்ப்புற சுகாதாரத்திட்டத்தின் கீழ் 2019-2020ம் ஆண்டிற்கு ஒப்பளிக்கப்பட்டுள்ள 86 மருத்துவ அலுவலர்கள், மேலும் மாநகராட்சி நிதியில் இருந்து திருவொற்றியூர், புழல், வளச்சரவாக்கம்,பெருங்குடி மற்றும் கண்ணகி நகர் நகர்ப்புற சமுதாய நலமையங்களுக்கு தேவையான 24 மருத்துவ அலுவலர்கள் மொத்தம் 110 மருத்துவ அலுவலர்களை, தகுதி வாய்ந்த வெளி நிறுவனம் மூலம் 11 மாத காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்த அனுமதிக்கும்,
2. இதற்கான செலவினம் ரூ. 5,78,25,900/- (ரூபாய் ஐந்து கோடியே எழுபத்தி எட்டு லட்சத்து இருபத்தி ஐந்தாயிரத்து தொள்ளாயிரம் மட்டும்) மேற்கொள்ள நிர்வாக அனுமதிக்கும்,
3. இந்த பணியிடங்களுக்கு பொதுசுகாதாரத்துறை (தலைமையிடம்) மூலம் குறுகிய கால மின்னணு ஒப்பம் கோரவும்,
4. தேசிய நகர்ப்புற சுகாதார திட்டத்தில் 2019-20ம் நிதியாண்டில் ஒப்பளிக்கப்பட்டுள்ள 86 மருத்துவ அலுவலர்கள் பணியமர்த்தும் பணிக்கான செலவினத்தினை தேசிய நகர்ப்புற சுகாதாரத்திட்டத்தில் Human Resources-Salary for Medical Officer க்கென வழுங்கப்பட்ட தொகையில் (FMR Code U.8.1.8.1.1, U.8.1.8.3.1 for salary, U.16.8.3.4 (any other (GST and Admin Cost)) மேற்கொள்ளவும் ,
5. 24 மருத்துவ அலுவலர்கள் பணியமர்த்தும் பணிக்கான செலவினத்தினை மாநகராட்சி நிதியில் பிரிவு குறியீடு 30-35-01, கணக்கு குறியீடு 210-10-06-05 என்ற தலைப்பின் கீழ் மேற்கொள்ளவும்,

மேற்கண்ட 1 முதல் 5 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி-நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 29.05.2019 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**“1 முதல் 5 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி- நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது”.**

*****

**சு.து.ந.க.எண்.NUHM/பி2/6361/2018**

**தீர்மான எண்.282/2019** **நாள்:31-05-2019**

**பெருநகர சென்னை மாநகராட்சி - பொது சுகாதாரத்துறை - தேசிய நகர்ப்புற சுகாதாரத்திட்டத்தில்- 304 செவிலியர்கள் (Staff Nurses) பெருநகர மாநகராட்சி ஆரம்ப நகர்ப்புற சுகாதார மையங்களிலும் மற்றும் பாடி, ஆலந்தூர் நகர்ப்புற சமுதாய நல மையங்களில் பதினோரு மாத காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்த மின்னனு ஒப்பம் கோரப்பட்டது - குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/s. Hosur Builders அவர்களுக்கு பணியாணை வழங்க அனுமதி.**

சிறப்பு அதிகாரி/மன்றத்தீர்மான எண்.988/2018 நாள்.11.12.2018ன்படி, நகர்ப்புற ஆரம்ப சுகாதார மையங்களுக்கு தேவையான 302 செவிலியர்கள் மற்றும் பாடி, ஆலந்தூர் நகர்ப்புற சமுதாய நல மையங்களுக்கு தேவையான 2 செவிலியர்கள் மொத்தம் 304 செவிலியர்கள், ஒப்பந்த அடிப்படையில் பதினொரு மாத காலத்திற்கு பணியமர்த்த 29.01.2019-ல் மின்னனு(E-Tender) ஒப்பம் கோரப்பட்டது. 15.02.2019 அன்று ஆவணம் திறக்கப்பட்டதில் அதில் 8 ஒப்பந்ததாரர்கள் ஒப்பப்புள்ளி அளித்திருந்தனர். இதில் ஏழு ஒப்பந்ததாரர்கள் போதிய ஆவணம் சமர்பிக்கப்படாத காரணத்தினால் அவர்களின் ஒப்பம் நிராகரிக்கப்பட்டு ஒரு ஒப்பம் ஏற்கப்பட்டு நிதி ஒப்பம் 29.04.2019 அன்று திறக்கப்பட்டது.

| வ எண் | ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் முகவரி | தொழில்நுட்ப ஒப்பத்தில் (Technical Bid) கோரப்பட்ட ஆவணங்கள் அளிக்கப்ட்டுள்ள விவரம். | பரிந்துரை |
|---|---|---|---|
| 1 | M/s.Hosur Builders,Chennai-600092 | ஆவணங்கள் அளிக்கப்பட்டுள்ளது. | ஒப்பம் ஏற்கப்பட்டது |
| 2 | Auromirra Detective Agency,Chennai-600044 | ஆவணங்கள் அளிக்கப்படவில்லை. | ஒப்பம் நிராகரிக்கப்பட்டது |
| 3 | M/s.Falcon Security Services (P) ltd,Chennai-600092 | ஆவணங்கள் அளிக்கப்படவில்லை. | ஒப்பம் நிராகரிக்கப்பட்டது |
| 4 | First Choice Outsourcing Services,Tiruchy-620003 | ஆவணங்கள் அளிக்கப்படவில்லை. | ஒப்பம் நிராகரிக்கப்பட்டது |
| 5 | JAY KAY Trans, Chennai-600099 | ஆவணங்கள் அளிக்கப்படவில்லை. | ஒப்பம் நிராகரிக்கப்பட்டது |
| 6 | Qualitas Diagnosis,Mumbai-400066 | ஆவணங்கள் அளிக்கப்படவில்லை. | ஒப்பம் நிராகரிக்கப்பட்டது |
| 7 | T & M Services , Mumbai-400068 | ஆவணங்கள் அளிக்கப்படவில்லை. | ஒப்பம் நிராகரிக்கப்பட்டது |
| 8 | J.J. Info Tech,Madurai-625009 | ஆவணங்கள் அளிக்கப்படவில்லை. | ஒப்பம் நிராகரிக்கப்பட்டது |

வரிசை எண் 1ல் உள்ள தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரின் நிதி ஆவணம் 29.04.2019 அன்று திறக்கப்பட்டது.

**L-1 Hosur Builders /Quoted rate**

| Name of the post | Basic Rate (Rs) | Allowances (Rs) | EPF (13%) for Basic pay (Rs) | ESI @ 4.75% (Rs) | Administrative Charge (Rs) | GST 18%(Rs) | Total /Month (Rs) | No of Staff | Total (11 Months) (Rs) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| Staff Nurse | 7000 | 7000 | 910 | 665 | 999.99 | 2983 | 19557.99 | 304 | 65401918.56 |

**சு.து.ந.க.எண்.NUHM/பி2/6361/2018**

இந்த பணிக்கென கீழ்க்கண்டவாறு அலுவலக மதிப்பீடு கணக்கிடப்பட்டுள்ளது.

**Office Workable rate**

| Name of the post | Basic Rate (Rs) | Allowances (Rs) | EPF (13%) for Basic pay(Rs) | ESI @ 4.75% (Rs) | Administrative Charge (NUHM Norms) (Rs) | GST 18% (Rs) | Total /month (Rs) | No of Staff | Total (11 Months) (Rs) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| Staff Nurse | 7000 | 7000 | 910 | 665 | 500 | 2894 | 18969 | 304 | 63432336 |

குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/s. Hosur Builders அவர்களிடம் விலைக்குறைப்பு செய்ய கோரியதில் அவர்கள் நிர்வாகத்தொகையினை ரூ.999.99/- லிருந்து ரூ.999/- ஆக குறைத்து அளித்துள்ளனர்.ஒப்பந்ததாரரின் இறுதி ஒப்பத் தொகை ரூ. 6,53,99,678/- ஆகும்.

**L-1 Hosur Builders /After Negotiation rate**

| Name of the post | Basic Rate (Rs) | Allowances (Rs) | EPF (13%) for Basic pay (Rs) | ESI @ 4.75% (Rs) | Administrative Charge Rs. | GST18% (Rs) | Total /month (Rs) | No of Staff | Total (11 Months) (Rs) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| Staff Nurse | 7000 | 7000 | 910 | 665 | 999 | 2983.32 | 19557.32 | 304 | 65399678.08 |

இப்பணிக்கென அலுவலக மதிப்பீடாக ரூ.6,34,32,336/- செலவினம் ஆகும் என கணக்கிடப்பட்டுள்ளது. ஒப்பந்ததாரர் அளித்துள்ள ஒப்பத்தொகை ரூ.6,53,99,678/- யானது அலுவலக மதிப்பீட்டுடன் ஒப்பிடுகையில் +3.10% மட்டும் கூடுதலாக உள்ளது.

எனவே இப்பணியின் அவசரம் மற்றும் அவசியத்தினை கருத்தில் கொண்டு கீழ்க்கண்டவாறு ஒப்பந்தகூர்ந்தாய்வு குழு பரிந்துரை செய்கிறது.

1. 304 செவிலியர்களை (Staff Nurse) ஒப்பந்த அடிப்படையில் பணி நியமனம் செய்ய தேசிய நகர்ப்புற சுகாதார திட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டு நிதியும் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு வழங்கப்பட்டுள்ளது.
2. பெருநகர சென்னை மாநகராட்சி நகர்ப்புற சமுதாய மற்றும் ஆரம்ப சுகாதார மையங்களுக்கு செவிலியர்கள் பணியிடம் மிக அத்தியாவசியமாக தேவைப்படுவதால் ஒப்பந்த அடிப்படையில் இந்த பணியாளர்களை பணியமர்த்தவும்,
3. தேசிய நகர்ப்புற சுகாதாரத்திட்டத்தில் ஒப்பந்ததாரர் நிர்வாககட்டணம் ரூ.500/ மட்டுமே அனுமதிக்கப்பட்டு வழங்கப்பட்டிருப்பதால், பணியின் அவசியம் மற்றும் அத்தியாவசியத்தினை முன்னிட்டு கூடுதலாக தேவைப்படும் நிதியினை மாநகராட்சியில் இருந்து மேற்கொள்ளவும்,
4. ஒப்பந்ததாரர் அளித்துள்ள ஒப்பத்தொகை ரூ.6,53,99,678/-யானது அலுவலக மதிப்பீடான ரூ.6,34,32,336/- உடன் ஒப்பிடுகையில் +3.10% மட்டும் கூடுதலாக உள்ளதால், குறைந்த ஒப்பத் தொகை அளித்துள்ள M/s.Hosur Builders நிறுவனத்தினரின் ஒப்பத்தினை ஏற்றுக்கொள்ளவும்,

ஒப்பந்தகூர்ந்தாய்வு குழு பரிந்துரை செய்துள்ளது.

திட்ட இயக்குநர், நகர்ப்புற சுகாதாரத்திட்டம் தமிழ்நாடு அவர்களின் 17.11.2017 நாளிட்ட கடித்தில் நகர்ப்புற சுகாதார திட்டத்தில் ஒப்பந்ததாரருக்கு வழங்கப்படும் நிர்வாக கட்டணமானது ஒரு செவிலியர் (Staff Nurse) பணியாளருக்கு ஒரு மாதத்திற்கு ரூ.500/- வழங்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

**சு.து.ந.க.எண்.NUHM/பி2/6361/2018**

**NUHM Approved rate**

| Name of the post | Basic Rate (Rs) | Allowances (Rs) | EPF (13%) for Basic pay(Rs) | ESI @ 4.75% (Rs) | Administrative Charge (NUHM Norms) (Rs) | GST 18% (Rs) | Total /month (Rs) | No of Staff | Total (11 Months) (Rs) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| Staff Nurse | 7000 | 7000 | 910 | 665 | 500 | 2894 | 18969 | 304 | 63432336 |

**Difference amount**

| | |
|---|---|
| Tender quoted Rate: M/s. Hosur Builders | Rs. 6,53,99,678/- |
| NUHM Approved rate | Rs. 6,34,32,336/- |
| | Rs.19,67,342 /- |

தேசிய நகர்ப்புற சுகாதாரத்திட்டத்தில் பல்வேறு மருத்துவ பணிகளுக்கென நிதிகள் அளிக்கப்பட்டு வருகின்றன. இதனால் பெருநகர சென்னை மாநகராட்சியில் செலவினம் குறைக்கப்படுவதுடன் மருத்துவமனைகளின் தரம் உயர்த்தப்பட்டு பொதுமக்களுக்கு தரமான மருத்துவ சேவைகள் வழங்கப்பட்டு வருகின்றன. இந்நிலையில் ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தப்படும் பணியாளருக்கு ஒப்பந்ததாரரின் நிர்வாக கட்டணமானது அதிகபட்சமாக ரூ.500/- மட்டுமே தேசிய நகர்ப்புற சுகாதார திட்டத்தில் அனுமதிக்கப்பட்டுள்ளது.

பல்வேறு மருத்துவ பணிகள் தேசிய நகர்ப்புற சுகாதாரத்திட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில் மருத்துவ சார் பணியாளர்கள் பணியமர்த்துவது மிகவும் அத்தியாவசியமானதாகும். எனவே கூடுதலாக ஏற்படும் ரூ.19,67,342/-(ரூபாய் பத்தொன்பது லட்சத்து அறுபத்தி ஏழாயிரத்து முன்னூற்றி நாற்பத்தி இரண்டு மட்டும்) நிர்வாக கட்டணத்தினை பெருநகர சென்னை மாநகராட்சி நிதியில் இருந்து மேற்கொள்ளலாம்.

எனவே,

1. தேசிய நகர்ப்புற சுகாதார திட்டத்தின்கீழ், நகர்ப்புற ஆரம்ப சுகாதார மையங்களுக்கு தேவையான 302 செவிலியர்கள் மற்றும் பாடி, ஆலந்தூர் நகர்ப்புற சமுதாய நல மையங்களுக்கு தேவையான 2 செவிலியர்கள் மொத்தம் 304 செவிலியர்களை (Staff Nurses) M/s. Hosur Bulilders நிறுவனத்தின் மூலமாக 02.06.2019 முதல் பதினொரு மாத காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் பணியமர்திடும் பணிக்கு ஒப்பத்தொகை ரூ.6,53,99,678/- (ரூபாய் ஆறு கோடியே ஐம்பத்தி மூன்று லட்சத்து தொண்ணூற்றி ஒன்பதாயிரத்து அறுநூற்றி எழுபத்தி எட்டு மட்டும்)க்கு பணியாணை வழங்கவும்,
2. மேற்கண்ட நிறுவனத்தினரிடம் ஒப்பந்த தொகையில் 2% பிணை வைப்பு தொகையாக பெறவும், மற்றும் ஒப்பந்தம் செய்யவும்,
3. இதற்கான மொத்த செலவினம் ரூ.6,53,99,678/- (ரூபாய் ஆறு கோடியே ஐம்பத்தி மூன்று லட்சத்து தொண்ணூற்றி ஒன்பதாயிரத்து அறுநூற்றி எழுபத்தி எட்டு மட்டும்) மேற்கொள்ள நிர்வாக அனுமதிக்கும்,
4. தேசிய நகர்ப்புற சுகாதாரத்திட்டத்தில் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தினை ரூ.5,04,89,085/- (ரூபாய் ஐந்து கோடியே நான்கு லட்சத்து எண்பத்தி ஒன்பதாயிரத்து எண்பத்தி ஐந்து மட்டும்) Human Resources- Salary for Staff Nurse க்கென வழங்கப்பட்ட தொகையில் மேற்கொள்ளவும் ,
5. தேசிய நகர்ப்புற சுகாதாரத்திட்டத்தில் ஒப்பளிக்கப்பட்ட தொகையினை விட கூடுதலாக தேவைப்படும் தொகை ரூ.19,67,342/-(ரூபாய் பத்தொன்பது லட்சத்து அறுபத்தி ஏழாயிரத்து முன்னூற்றி நாற்பத்தி இரண்டு மட்டும்) மாநகராட்சி நிதியில் பிரிவு குறியீடு 30-35-01, கணக்கு குறியீடு 210-10-06-05 என்ற தலைப்பின் கீழ் மேற்கொள்ளவும்,

6. இதற்கான செலவினத்தினை 2019-2020ம் ஆண்டில் தேசிய நகர்ப்புற சுகாதாரத்திட்டத்தில் Human Resources- Salary for Staff Nurse க்கென வழங்கப்பட்ட தொகையில் (FMR Code (U.8.1.2.1, U.8.1.2.2, U.8.1.2.3) U.8.3 for EPF, U.16.8.3.4 (any other (ESI,GST and Admin Cost)) மேற்கொள்ளவும்,

மேற்கண்ட *1* முதல் *6* வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி-நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது *29.05.2019* நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**"*1* முதல் *6* வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி- நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".**

******

**சு.து.ந.க.எண்.*NUHM/ B2/1669/2019***

**தீர்மான எண்.*283/2019*** **நாள்:*31-05-2019***

**பெருநகர சென்னை மாநகராட்சி - பொது சுகாதாரத்துறை - தேசிய நகர்ப்புற சுகாதார திட்டம்- 2019-20 ம் நிதியாண்டில் ஒப்பளிக்கப்பட்டுள்ள 71 மருந்தாளுனர்கள் மற்றும் 81 ஆய்வக தொழிற்நுட்பனர்கள் 4 X-Ray Technicians, 4 OT Assistants ஒப்பந்த அடிப்படையில் 11 மாத காலத்திற்கு ஒப்பம் கோரி பணியமர்த்த அனுமதி.**

**1.மருந்தாளுனர்கள் (Pharmacists)**

பெருநகர சென்னை மாநகராட்சி, பொதுசுகாதாரத்துறை சிறப்பு அதிகாரி/மன்றத்தீர்மான எண்.118/2018 நாள்.02.02.2018 மற்றும் சிறப்பு அதிகாரி/மன்றத்தீர்மான எண்.330/2018 நாள்.25.04.2018ன்படி 1-15 மண்டங்களில் 65 மருந்தாளுனர்கள் (Pharmacists) பதினொரு மாத காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்த ஒப்பம் கோரப்பட்டு குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/s. Vardhan Infrastructure நிறுவனத்திற்கு 03.05.2018 முதல் 02.04.2019 பணியாணை வழங்கப்பட்டு பணிகாலமானது 02.04.2019ல் முடிவடைகின்றது. சிறப்பு அதிகாரி/மன்றத்தீர்மான எண். 224/2019, நாள்.04.04.2019ன்படி M/s. Vardhan Infrastructure நிறுவனத்தின் பணியாணையானது 03.04.2019 முதல் 20.06.2019 வரை நீட்டிப்பு செய்யப்பட்டுள்ளது.

ஆணையர் அவர்களின் 21.02.2018 நாளிட்ட ஆணையின்படி பாடி மற்றும் ஆலந்தூர் நகர்ப்புற சமுதாய நல மையங்களுக்கு தேவையான 2 மருந்தாளுனர்கள் ஒப்பந்த அடிப்படையில் 01.03.2018 முதல் 31.01.2019 வரையில் பதினோரு மாத காலத்திற்கு பணியமத்த M/s. Vardhan Infraastructure நிறுவனத்திற்கு பணியாணை வழங்கப்பட்டு தற்போது துணை ஆணையர் (சுகாதாரம்) அவர்களின் 25.01.2019 நாளிட்ட ஆணை பெறப்பட்டு பணிக்காலமானது 01.02.2019 முதல் 31.03.2019 வரை நீட்டிப்பு செய்யப்பட்டுள்ளது .

துணை ஆணையர்(சுகாதாரம்) அவர்களின் 28.02.2019 மற்றும் 08.03.2019 நாளிட்ட ஆணையின்படி பாடி மற்றும் ஆலந்தூர் நகர்ப்புற சமுதாய நல மையங்களுக்கு தேவையான 2 மருந்தாளுனர்கள் விலைப்புள்ளிகள் கோரப்பட்டு குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள M/s. Vardhan Infraastructure நிறுவனத்திற்கு 01.04.2019 முதல் 30.06.2019 வரை பணியாணை வழங்கப்பட்டுள்ளது.

தேசிய நகர்ப்புற சுகாதார திட்டத்தில் 2019-2020ல் திருவொற்றியூர், புழல், வளசரவாக்கம் மற்றும் பெருங்குடி நகர்ப்புற சமுதாய நல மையங்களுக்கு ஒரு மருந்தாளுனர் வீதம் 4 மருந்தாளுனர்கள் ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்த அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை எண்-1**

| SNo | Particulars | Total Number Pharmacists approved |
|---|---|---|
| 1 | UPHCs | 65 |
| 2 | Thiruvottiyur UCHC | 1 |
| 3 | Puzhal UCHC | 1 |
| 4 | Padi UCHC | 1 |
| 5 | Valasaravakkam UCHC | 1 |
| 6 | Alanthur UCHC | 1 |
| 7 | Perungudi UCHC | 1 |
| | Total | 71 |

**2. ஆய்வக தொழிற்நுட்பனர்கள் (Lab Technicians)**

பெருநகர சென்னை மாநகராட்சி, பொதுசுகாதாரத்துறையில் தேசிய நகர்ப்புற சுகாதாரத்திட்ட வழிகாட்டுதல்களின்படி, சிறப்பு அதிகாரி/மன்றத்தீர்மான எண்.118/2018 நாள்.02.02.2018 மற்றும் சிறப்பு அதிகாரி/மன்றத்தீர்மான எண்.331/2018 நாள்.25.04.2018ன்படி நகர்ப்புற ஆரம்ப சுகாதார மையங்களுக்கு தேவையான 74 ஆய்வக தொழிற்நுட்பனர்கள் (Lab Technicians), M/s.Vardhan Infraastructure நிறுவனத்தின் மூலம் ஒப்பந்த அடிப்படையில் 03.05.2018 முதல் பதினொரு மாத காலத்திற்கு பணியமர்த்தப்பட்டு பணிக்காலமானது 02.04.2019ல் முடிவடைகின்றது.

**சு.து.ந.க.எண்.NUHM/ B2/1669/2019**

தேசிய நகர்ப்புற சுகாதார திட்டத்தில் 2018-19 ஒரு ஆய்வக தொழிற்நுட்பனர் (Lab Technician) ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்த ஒப்பளிக்கப்பட்டதின் பேரில், துணை ஆணையர் (சுகாதாரம்) அவர்களின் 02.08.2018 நாளிட்ட ஆணையின்படி ஒரு ஆய்வக தொழிற்நுட்பனர் பணியிடம் M/s Varadhan Infraastructure நிறுவனத்தின் மூலம் 03.08.2018 முதல் 02.04.2019 வரை 8 மாத காலத்திற்கு பணியமர்த்த ஆணை பெறப்பட்டுள்ளது.

சிறப்பு அதிகாரி/மன்றத்தீர்மான எண். 225/2019, நாள்.04.04.2019ன்படி மேற்கண்ட 75 ஆய்வக தொழிற்நுட்பனர்கள் (Lab Technicians) பணியமர்த்தும் பணியாணையினை M/s.Vardhan Infraastructure நிறுவனத்திற்கு 03.04.2019 முதல் 20.06.2019 வரையில் பணி நீட்டிப்பு செய்யப்பட்டுள்ளது.

ஆணையர் அவர்களின் 21.02.2018 நாளிட்ட ஆணையின்படி பாடி மற்றும் ஆலந்தூர் நகர்ப்புற சமுதாய நல மையங்களுக்கு தேவையான 2 ஆய்வக தொழிற்நுட்பனர்கள் ஒப்பந்த அடிப்படையில் 01.03.2018 முதல் 31.01.2019 வரையில் பதினோரு மாத காலத்திற்கு பணியமத்த M/s. Vardhan Infraastructure நிறுவனத்திற்கு பணியாணை வழங்கப்பட்டு தற்போது துணை ஆணையர் (சுகாதாரம்) அவர்களின் 25.01.2019 நாளிட்ட ஆணை பெறப்பட்டு பணிக்காலமானது 01.02.2019 முதல் 31.03.2019 வரை நீட்டிப்பு செய்யப்பட்டுள்ளது .

துணை ஆணையர்(சுகாதாரம்) அவர்களின் 28.02.2019 மற்றும் 08.03.2019 நாளிட்ட ஆணையின்படி பாடி மற்றும் ஆலந்தூர் நகர்ப்புற சமுதாய நல மையங்களுக்கு தேவையான 2 ஆய்வக தொழிற்நுட்பனர்கள் விலைப்புள்ளிகள் கோரப்பட்டு குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள M/s. Vardhan Infraastructure நிறுவனத்திற்கு 01.04.2019 முதல் 30.06.2019 வரை பணியாணை வழங்கப்பட்டுள்ளது.

தேசிய நகர்ப்புற சுகாதார திட்டத்தில் 2019-2020ல் திருவொற்றியூர், புழல், வளசரவாக்கம் மற்றும் பெருங்குடி நகர்ப்புற சமுதாய நல மையங்களுக்கு ஒரு ஆய்வக தொழிற்நுட்பனர் வீதம் 4 ஆய்வக தொழிற்நுட்பனர்கள் ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்த அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை எண்-2**

| SNo | Particulars | Total Number Lab Technicians approved |
|---|---|---|
| 1 | UPHCs | 75 |
| 2 | Thiruvottiyur UCHC | 1 |
| 3 | Puzhal UCHC | 1 |
| 4 | Padi UCHC | 1 |
| 5 | Valasaravakkam UCHC | 1 |
| 6 | Alanthur UCHC | 1 |
| 7 | Perungudi UCHC | 1 |
| | Total | 81 |

தேசிய நகர்ப்புற சுகாதார திட்டத்தில் 2019-2020 நிதியாண்டில் ஒரு ஆய்வக தொழிற்நுட்பனர் மாத ஊதியமாக ரூ.9,975/ நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. ஆனால் சென்னை மாநகர நல சங்கம் முதலாவது நிர்வாக குழு கூட்டத்தில் ஒரு ஆய்வக தொழிற்நுட்பனர் மாத ஊதியமாக ரூ.10,000/ நிர்ணயம் செய்யப்பட்டு மாநில நல சங்கம், தமிழ்நாடு அவர்களின் அனுமதி பெறப்பட்டு தற்போது அவர்களுக்கு மாத ஊதியம் ரூ.10000/ ஆக வழங்கப்பட்டு வருகின்றது. எனவே, ஒரு ஆய்வக தொழிற்நுட்பனர் மாத ஊதியமாக ரூ.10000/ வழங்கலாம்.

**3.X-Ray Technicians and OT Assistants**

திருவொற்றியூர்,புழல்,வளசரவாக்கம் மற்றும் பெருங்குடி நகர்ப்புற சமுதாய நல மையங்களுக்கு மட்டும் தேசிய நகர்ப்புற சுகாதார திட்டத்தில் 2019-2020 ஆண்டிற்கு 4-X-Ray Technicians, 4-OT Assistants ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

**சு.து.ந.க.எண்.NUHM/ B2/1669/2019**

**அட்டவணை எண்-3**

**Required Number of Staff**

| Sl. No | Category of Staff | UPHCs | Thiruvottiyur UCHC | Puzhal UCHC | Padi UCHC | Valasaravakkam UCHC | Alanthur UCHC | Perungudi UCHC | Total |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | Pharmacist | 65 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 71 |
| 2 | Lab Technician | 75 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 81 |
| 3 | X-Ray Technicians | - | 1 | 1 | - | 1 | - | 1 | 4 |
| 4 | OT Assistant | - | 1 | 1 | - | 1 | - | 1 | 4 |
| | | | | | | | | | 160 |

**அட்டவணை எண்-4**

**Qualification**

| Sl. No | Category of Staff | Qualification |
|---|---|---|
| 1 | Pharmacist | Higher Secondary Course + Diploma in Pharmacy (2years course) (Registration with Pharmacy council) |
| 2 | Lab Technician | Higher Secondary Course + Diploma in Lab Technician (2years course) |
| 3 | X-Ray Technicians | X ray technician course from Govt. Recognized institution |
| 4 | OT Assistant | Diploma in Operation Theatre Technology from Govt. Recognized institution |

ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தப்படும் பணியாளர்களுக்கு குறைந்தபட்ச ஊதியம்,பணியாளர் இன்சூரன்ஸ், (Employee's State Insurance) மற்றும் பணியாளர் வருங்கால வைப்பு நிதி (Employee's Provident Fund), சரக்கு மற்றும் சேவைக்கட்டணம் (GST) மற்றும் ஒப்பந்ததாருக்கு வழங்கப்பட வேண்டிய சேவைக்கட்டணம்(Administrative Charges ) கீழ்க்கண்ட அளவில் வழங்கப்பட வேண்டியுள்ளது.

| Employee's State Insurance | | Employee's Provident Fund | | GST | Administrative Charges |
|---|---|---|---|---|---|
| Employer Contribution in the salary | Employee Contribution in the salary | Employer Contribution in the salary | Employee Contribution in the salary | | |
| 4.75% | 1.75% | 13% | 12.00% | 18% | Rs.500/- |

திட்ட இயக்குநர், நகர்ப்புற சுகாதாரத்திட்டம் தமிழ்நாடு அவர்களின் 24.07.2018 நாளிட்ட கடிதத்தில் பணியாளர்களுக்கு தற்போது வழங்கப்படும் ஊதியத்தில் 50% அடிப்படை ஊதியமாகவும், மீதமுள்ள 50% இதர படிகளாகவும் நிர்ணயம் செய்து அடிப்படை ஊதியத்திற்கான பணியாளர் வருங்கால வைப்புநிதி (Employee's Provident Fund) வழங்க தெரிவிக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை எண்-5**

| Sl. No | Category of Staff | Basic Pay (Rs) | Allowances | EPF (13 %) for Basic pay (Rs) | ESI (4.75 %) for Gross Salary (Rs) | Administrative Charges | GST 18% (1+2+3+4+5) | Total (1+2+3+4+5) | Required Staff | Cost per 11 months Rs (7x8x11) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
| 1 | Pharmacist | 6000 | 6000 | 780 | 570 | 500 | 2493 | 16343 | 71 | 12763883 |
| 2 | Lab Technician | 5000 | 5000 | 650 | 475 | 500 | 2093 | 13718 | 81 | 12222738 |

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | X-Ray Technicians | 5750 | 5750 | 748 | 546 | 500 | 2393 | 15687 | 4 | 690228 |
| 4 | OT Assistant | 4200 | 4200 | 546 | 399 | 500 | 1772 | 11617 | 4 | 511148 |
| | | | | | | | | | 160 | 2,61,87,997 |

எனவே,

1. பெருநகர சென்னை மாநகராட்சி, பொதுசுகாதாரத்துறை தேசிய நகர்ப்புற சுகாதாரத்திட்டத்தின் கீழ் அட்டவணை 3ல் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு நகர்ப்புற ஆரம்ப சுகாதார மையங்கள் மற்றும் நகர்ப்புற சமுதாய நல மையங்களுக்கு தேவையான 71 மருந்தாளுனர்கள், 81 ஆய்வக தொழிற்நுட்பனர்கள், 4-X-Ray Technicians, 4-OT Assistants ஆகியோர்களை, தகுதி வாய்ந்த வெளி நிறுவனம் மூலம் 11 மாத காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்த அனுமதிக்கும்,
2. இதற்கான செலவினம் ரூ.2,61,87,997/- (ரூபாய் இரண்டு கோடியே அறுபத்தி ஒரு லட்சத்து எண்பத்தி ஏழாயிரத்து தொள்ளாயிரத்து தொண்ணூற்றி ஏழு மட்டும்) மேற்கொள்ள நிர்வாக அனுமதிக்கும்,
3. இந்த பணியிடங்களுக்கு பொதுசுகாதாரத்துறை (தலைமையிடம்) மூலம் குறுகிய கால மின்னனு ஒப்பம் கோரவும்,
4. இச்செலவினத்தினை தேசிய நகர்ப்புற சுகாதாரத்திட்டத்தில் Human Resources-Salary for Pharmacist (FMR Code U.8.1.4.1, U.8.1.4.2) Salary for Lab Technicians (FMR Code U.8.1.3.1, U.8.1.3.2) , Salary for X Ray Technicians (FMR Code U.8.1.5.1), Salary for OT Assistant (FMR Code U.8.1.5.2) U.8.3 for EPF, U.16.8.3.4 (any other (ESI,GST and Admin Cost)) க்கென வழங்கப்பட்ட தொகையில் மேற்கொள்ளவும் ,

மேற்கண்ட *1* முதல் *4* வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி-நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது *29.05.2019* நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**“*1* முதல் *4* வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி- நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது”.**

******